# செய்யுள் - உரைநடைத்திரட்டு

*(மானுடச் சிறப்பியல் சார்ந்தது.*
***2010-2011** ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது)*

பகுதி **I** தமிழ்

இளநிலைப்பட்ட வகுப்பு முதலாம் ஆண்டு
இரண்டாம் பருவம்

தொகுப்பு

முனைவர் வெ,அழகர்ராமானுஜம்

முனைவர் பொ.மா.பழனிசாமி

முனைவர் ப.முருகன்

முனைவர்ப,கமலக்கண்ணன்

பதிப்பு
பாரதியார் பல்கலைக்கழகம்
*கோயம்புத்தூர் - 641 046*

# பதிப்புரை

பள்ளிக் கல்வி நிறைவடைந்து பல்கலைக்கழகக் கல்விக்கு வரும் பட்டவகுப்பு மாணவர்தம் கருத்துப் பரிமாற்றத்திறன், சிந்தனைத்திறன், ஆளுமைத்திறன் ஆகியனவற்றை வளர்த்து, வாழ்வியல் விழுமியங்களை உணரச் செய்து, உலக ஒருமைப் பாட்டுணர்வை மனத்தில் இருத்தி வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நேர்முக எண்ணம் வலுப்பெறும் வகையில் இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பட்டவகுப்பு இரண்டாம் பருவத்தில், மானுடச் சிறப்பியலை (Human Excellence) மையப்படுத்தி, அதன் புரிதிறனை மேம்படுத்தும் வகையில் செய்யுட் பகுதிகளும், உரைநடைக் கட்டுரைகளும், கருத்துப் பரிமாற்றத்திறனுக்கு அடிப்படையாக உள்ள இலக்கணப் பகுதியும், காலவோட்டத்துடன் இணைந்து சிந்திக்கும் ஆற்றலைப் பெறும் வகையில் இலக்கிய வரலாற்றுப் பகுதியும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலை மாணவர்கள் கருத்தூன்றிக் கற்றுப் பயன் பெறுவார்களாக.

தற்கால மாணவர் நிலையைக் கருத்தில் கொண்டு பகுதி I தமிழ் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும், கருத்துப் பரிமாற்றத் திறனுக்கும் மானுடச் சிறப்பிற்கும் முதன்மையிடம் அளிக்க வேண்டும் என்றும் மிகுந்த ஆர்வத்துடன் ஊக்கப்படுத்தி அதற்கான செயற்பாட்டுப் பொறுப்பை ஏற்றுப் பல்லாற்றானும் உதவிய மேன்மைமிகு துணைவேந்தர் அவர்களுக்கும், பட்ட வகுப்பு மாணவர்களின் தமிழ்மொழி ஆற்றலை வளர்க்கவும், இலக்கியங்களின் நுவல் பொருளை உணர்ந்து பின்பற்றவும், தமிழர்களின் பண்பாட்டை உணர்ந்து கொள்ளவும் ஏற்றவகையில் பாடத்திட்டத்தை வடிவமைத்த பாடத்திட்டக் குழுவினருக்கும், இப்பாடத்திட்டத்தில் எடுத்தாண்டுள்ள இலக்கியப்படைப்பாளர்களுக்கும், அச்சகத்தாருக்கும் நன்றிகள்.

பதிவாளர்

## பாடத்திட்டம்
## இரண்டாம் பருவம்

(செய்யுள், உரைநடை, தமிழ்ச்செம்மொழி வரலாறு, விண்ணப்பம் வரைதல்)

### அலகு - 1 : செய்யுள்

1. திருக்குறள்

   அ) அவை அஞ்சாமை

   ஆ) சான்றாண்மை
2. இன்னா நாற்பது - முதல் 10 பாடல்கள்
3. இனியவை நாற்பது – முதல் 10 பாடல்கள்

### அலகு – 2 : செய்யுள்

1. தமிழியக்கம் முதல் 5 பாடல்கள் - பாரதிதாசன்
2. கங்கையின் காதலன் - முருகு சுந்தரம்

### அலகு - 3 : உரைநடை

1. கலைகள் - முனைவர் உ.வே.சாமிநாத ஐயர்
2. சங்க நெறிகள் - முனைவர் வ. சுப. மாணிக்கம்
3. கவுந்தியடிகள் - முனைவர் கா.மீனாட்சி சுந்தரம்

### அலகு - 4. : உரைநடை

4. அறிவியல் பார்வை - முனைவர் வா.செ.குழந்தைசாமி
5. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைகள் - முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்
6. கணிப்பொறியும் தமிழும் - சுஜாதா

### அலகு – 5 : தமிழ்ச்செம்மொழி வரலாறு

மொழி – விளக்கம் - மொழிக்குடும்பங்கள் - உலகச் செம்மொழிகள் - இந்தியச் செம்மொழிகள் - செம்மொழித் தகுதிகள் - வரையறைகள் - வாழும் தமிழ்ச்செம்மொழி – தமிழின் தொன்மை – தமிழின் சிறப்புகள் - தமிழ்ச் செம்மொழி நூல்கள்.

தமிழ்ச் செம்மொழி அறிந்தேற்பு - பரிதிமாற் கலைஞர் அவர்கள் முதல் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்கள் வரை (அறிஞர்கள் - அமைப்புகள் - நிறுவனங்கள் - இயக்கங்கள் தொடர் முயற்சிகள் - அறப்போராட்டங்கள் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை-2010).

பார்வை நூல்கள் (அலகு -5)

1. கலைஞர் மு.கருணாநிதி, செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்.
2. ஆய்வரங்கச் சிறப்புமலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை-2010.
3. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுச் சிறப்பு மலர், கோவை-2010.
4. சாலினி இளந்திரையன், தமிழ்ச் செம்மொழி ஆவணம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,2005.
5. கால்டுவெல், "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்", கழக வெளியீடு, சென்னை.

**குறிப்பு: அலகு-5க்கு உரிய பாடங்கள் பாடத்திட்டக்குழுவினால் உருவாக்கப்பட்டுள்ளன. அவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.**

*இரண்டாம் பருவம், தமிழ்த்தாள் - 2*

**வினாத்தாள் அமைப்பு**

*நேரம் 3 மணி* *மொத்த மதிப்பெண்கள்: 75*

*பிரிவு - அ*

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்* 10 x 1 = 10

*பிரிவு - ஆ*

*5 வினாக்களுக்கு இரண்டு பக்க அளவில் விடை எழுதுக* 5 x 5 = 25

*செய்யுள் - 2 வினாக்கள்*

*உரைநடை - 2 வினாக்கள்*

**தமிழ்ச்செம்மொழி** *வரலாறு - 1 வினா*

*பிரிவு - இ*

*கட்டுரை வடிவில் விடை எழுதுக* 5 x 8 = 40

*செய்யுள் - 2 வினாக்கள்*

*உரைநடை - 1 வினா*

**தமிழ்ச்செம்மொழி** *வரலாறு - 1 வினா*

*விண்ணப்பங்கள் / மடல்கள் - 1 வினா*

*(5 அலகுகளிலிருந்தும், பயிற்சிப் பகுதியிலிருந்தும் வினாக்கள் அமையும்)*

*குறிப்பு - ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் 'இது' அல்லது 'அது' என்ற வகையில் அவற்றிற்கு உரிய அலகுகளில் அமைதல்வேண்டும்.*

*******************

## அலகு- I

## 1. திருக்குறள்

### அ.அவை அஞ்சாமை

1) வகையறிந்து வல்லவை வாய்சோராச் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

2) கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்றசெலச் சொல்லு வார்

3) பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்

4) கற்றார் முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்

5) ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு

6) வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலாடுஎன்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு

7) பகையகத்துப் பேடிகை ஒய்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்

8) பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்

9) கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு வார்

10) உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களனஞ்சிக்
கற்றசெலச் சொல்லா தார்

### ஆ.சான்றாண்மை

1) கடன்என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

2) குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று

3) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்

4) கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு

5) ஆற்றுவர் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

6) சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்

7) இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

8) இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்

9) ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படும் வார்.

10) சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

- திருவள்ளுவர்

## 2.இன்னா நாற்பது

1) பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வ னழகின்னா
அந்தண ரில்லிருந் தூணின்னா வாங்கின்னா
மந்திரம் வாயா விடின்.

2) பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா
ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா
பாத்தில் புடைவை யுடையின்னா வாங்கின்னா
காப்பாற்றா வேந்த னுலகு.

3) கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

4) எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா

திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

5) சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
உறைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றி யாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை.

6) அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா
இடும்பை யுடையார் கொடையின்னா வின்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல்.

7) ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா
நாற்ற மிலாத மலரி னழகின்னா
தேற்ற மிலாதான் றுணிவின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

8) பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலி னெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு.

9) கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா
வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா
வண்மை யிலாளர் வனப்பின்னா வாங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

10) பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த வின்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னா
அருளில்லார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

- கபிலர்

## 3.இனியவை நாற்பது

1) பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே
நற்சவையிற் கைக்கொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

2) உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாணாதா மாயி

னிலையாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு.

3) ஏவது மாறா விளங்கிளைமை முன்னினிதே
நாளு நவைபோகான் கற்றன் மிகவினிதே
யேருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கோ ணட்புத் திசைக்கு.

4) யானையுடைய படைகாண்டன் முன்னினிதே
யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

5) கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயஞ்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

6) ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

7) அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடையா னாக லினிது.

8) ஊருங் கலிமா வுரனுடைமை முன்னினிதே
தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதங்காண்டன் முன்னினிதே
யார்வ முடையவ ராற்றவு நல்லவை
பேதுறார் கேட்ட லினிது.

9) தங்கண மர்புடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
யங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

10) கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதவரை யஞ்சி யகற
லெனைமாண்புந் தானினிது நன்கு.

- **பூதஞ்சேந்தனார்**

## அலகு - 2

## 1. தமிழியக்கம்

## அ. நெஞ்சு பதைக்கும் நிலை

கரும்புதந்த தீஞ்சாறே,
கனிதந்த நறுஞ்சுளையே,
கவின்செய் முல்லை

அரும்புதந்த வெண்ணகையே
அணிதந்த செந்தமிழே
அன்பே, கட்டி

இரும்புதந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை
ஈட ழித்து

வரும்புதுமை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சொல்ல
வாய்ப தைக்கும்.

எடுத்துமகிழ் இளங்குழந்தாய்,
இசைத்துமகிழ் நல்யாழே,
இங்குள் ளோர்வாய்

மடுத்துமகிழ் நறுந்தேனே,
வரைந்துமகிழ் ஓவியமே,
அன்பே, வன்பு

தொடுத்துமகிழ் நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலைத்
தோன்றா வண்ணம்

தடுத்துவரல் நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சாற்ற
வாய்ப தைக்கும்.

பண்டுவந்த செழும்பொருளே
பார்அடர்ந்த இருட்கடலில்
படிந்த மக்கள்

கண்டுவந்த திருவிளக்கே,
களிப்பருளும் செந்தமிழே,
அன்பே வாழ்வில்

தொண்டுவந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலைத்
துளிர்க்கா வண்ணம்

உண்டுவரல் நினைக்கையிலே
உளம்பதைக்கும் சொல்வதெனில்
வாய்பதைக்கும்.

உடலியக்கும் நல்லுயிரே,
உயிரியக்கும் நுண்கலையே,
மக்கள் வாழ்வாம்,

கடலியக்கும் சுவைப்பாட்டே
கண்ணான செந்தமிழே,
அன்பே, நாட்டில்

கெடல் இயக்கும் நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலைக்
கெடுக்கப் பாடு

படல்தன்னை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்பகர
வாய்ப தைக்கும்.

வையத்தின் பழநிலவே
வாழ்வுக்கோர் புத்துணர்வே,
மயிலே, மேலோர்

ஐயத்திற் கறிவொளியே,
ஆடல்தரும் செந்தமிழே,
அன்பே, தீமை

செய்யத்தான் நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலைத்
தீர்க்க எண்ணும்

மெய்யைத்தான் நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்விளக்க
வாய்ப தைக்கும்.

## ஆ.இருப்பதைவிட இறப்பது நன்று

வாணிகர்க்கும் தமிழென்றால்
வெறுப்புண்டோ? அரசியல்சீர்
வாய்க்கப் பெற்றோர்

ஆணிகர்த்த பேடிகளோ?
அரும்புலவர் ஊமைகளோ?
இல்ல றத்தைப்

பேணுமற்ற யாவருமே
உணர்வற்றுப் போனாரோ?
பெருவாழ் வுக்கோர்

ஏணிபெற்றும் ஏறாத
தமிழர் உயிர் வாழ்வதிலும்
இறத்தல் நன்றே.

மிகுகோயில் அறத்தலைவர்,
அறநிலையக் காப்பாளர்,
விழாவெ டுப்போர்,

தகுமாறு மணம்புரிவோர்
கல்விதரும் கணக்காயர்
தம்மா ணாக்கர்.

நகுமாறு நந்தமிழை
நலிவுசெய்யும் தீயர்களோ?
நல்வாழ் வுக்கோர்
புகும்ஆறு புறக்கணித்தும்
தமிழர் உயிர் வாழ்வதினும்
இறத்தல் நன்றே.

மகிழ்ச்சிசெய வருங்கூத்தர்,
மாத்தமிழை மாய்ப்பதுண்டோ?
வாய்ப்பாட் டாளர்,
இகழ்ச்சியுற நடப்பதுண்டோ?
இசைப்பாடல் ஆக்குபவர்
இழிவேன் ஏற்றார்?

நகச்சிலசொற் பொழிவாளர்
நாணற்றுப் போயினரோ?
வாழ்வுக் கான

புகழ்ச்சியினைப் போக்கடித்தும்
தமிழருயிர் வாழ்வதினும்
இறத்தல் நன்றே.

கூற்றமென வாழ்வதுவோ
தமிழுக்கே ஏடெழுதும்
கூட்டம்? தீமை

மாற்றவரும் அச்சகத்தார்
வகைமறந்து போனாரோ?
சொல்லாக் கத்தார்

தூற்றுமொழி ஏன் சுமந்தார்?
துண்டறிக்கை யாளருமோ
தீயர்? வாழ்வில்

ஏற்றமுற எண்ணாத
தமிழருயிர் வாழ்வதினும்
இறத்தல் நன்றே.

நல்லஅரும் பொருளுடையார்
நந்தமிழ்க்கோ பகையாவார்?
நாட்டில் ஆணை

சொல்லவரும் அரசியலார்
செந்தமிழ்நா டிதுவென்றும்
தெரியார் போலும்!

வல்லவரும் பெரியநிலை
வாய்த்தவரும் என் செய்தார்?
இன்ப வாழ்வின்

எல்லையறிந் தும்திருந்தாத்
தமிழருயிர் வாழ்வதினும்
இறத்தல் நன்றே.

## இ. வரிப்புலியே, தமிழ் காக்க எழுந்திரு

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்!

கண்டறிவாய்! எழுந்திரு நீ!
இளந்தமிழா, கண்விழிப்பாய்!
இறந்தொ ழிந்த

பண்டைநலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும்நீ
படைப்பாய்! இந்நாள்

தொண்டுசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெ ழுந்தே!

உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில்
அடைகின்ற வெற்றியெல்லாம்
உன்றன் வெற்றி!

அயராதே! எழுந்திருநீ!
இளந்தமிழா, அறஞ்செய்வாய்!
நாம டைந்த

துயரத்தைப் பழிதன்னை
வாழ்வினிலோர் தாழ்மையினைத்
துடைப்பாய் இந்நாள்

செயல்செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சீறி வந்தே.

வாழியநீ! தமிழ்த்தாய்க்கு
வரும்பெருமை உன் பெருமை!
வயிற்றுக் கூற்றக்

கூழின்றி வாடுகின்றார்;
எழுந்திருநீ! இளந்தமிழா
குறைத விர்க்க

ஆழிநிகர் படைசேர்ப்பாய்!
பொருள்சேர்ப்பாய்! இன்பத்தை
ஆக்கு விப்பாய்!

ஊழியஞ்செய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
உணர்ச்சி கொண்டே,

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு
வருந்தீமை உனக்குவரும்
தீமை அன்றோ!

பிணிநீக்க எழுந்திருநீ
இளந்தமிழா, வரிப்புலியே,
பிற்றை நாளுக்

கணிசெய்யும் இலக்கியம் செய்!
அறத்தைச் செய்! விடுதலைகொள்
அழகு நாட்டில்!

பணிசெய்வாய் ! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
பழநாட்டானே,

எதுசெய்ய நாட்டுக்கே
எனத்துடித்த சிங்கமே!
இன்றே, இன்னே,

புதுநாளை உண்டாக்கித்
தமிழ்காப்பாய் புத்துணர்வைக்
கொணர்வாய் இங்கே

அதிர்ந்தெழுக! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
அழகு காப்பாய்!

இதுதான் நீ செயத்தக்க
எப்பணிக்கும் முதற்பணியாம்
எழுக நன்றே.

### ஈ.மங்கையர் முதியோர் எழுக!

ஒருவானில் பன்னிலவாய்
உயர்தமிழ்ப் பெண்களெலாம்
எழுக! உங்கள்

திருவான செந்தமிழின்
சிறுமையினைத் தீர்ப்பதென
எழுக! நீவிர்,

பெருமானம் காப்பதற்கு
வாரீரேல் உங்கள் நுதற்
பிறையே நாணும்!

மருமலர்வாய்த் தாமரையும்
கனியுதடும், நன்னெஞ்சும்
வாட்டம் எய்தும்!

நகர்நோக்கிப் பசுந்தோகை
நாடகத்து மாமயில்கள்
நண்ணி யாங்குப்

பகர்கின்ற செந்தமிழின்
பழிநீக்கப் பெண்களெலாம்
பறந்து வாரீர்!

மிகுவானம் காப்பதற்கு
வாரீரேல் வெண்ணிலவு
முகஞ்சு ருங்கும்

மகிழ்வான மலர்க்கன்னம்
வாய்மையுளம் வாட்டமுறும்
மலர்க்கண் நாணும்.

தண்டூன்றும் முதியோரே!
தமிழ்தொண்டென்றால் இளமை
தனைஎய் தீரோ?

வண்டூன்றும் சிற்றடியால்
மண்டுநறும் பொடிசிதறும்
பொதிகை தன்னில்

பண்டூன்றும் திருவடியால்
பச்சைமயில் போல்வந்து
தமிழர்க் காவி

கொண்டூன்றி வருந்தமிழ்த்தாய்
கொண்டகுறை தவிர்ப்பதற்குக்
குதித்து வாரீர்!

பிரம்புவனை மெய்யுடையீர்
ஆருயிரில் வாரியிட்டுப்
பிசைந்த தான

உரம்பெய்த செந்தமிழுக்
கொன்றிங்கு நேர்ந்ததென
உரைக்கக் கேட்டால்

நரம்பெல்லாம் இரும்பாகி
நனவெல்லாம் உணர்வாகி
நண்ணி டீரோ?

இரங்குநிலை கொண்டதமிழ்
ஏற்றகுறை தவிர்த்திடநீர்
எழுச்சி கொள்வீர்.

அன்னையினை எதிர்த்தார்க்கும்
அவள் மேன்மை மறந்தார்க்கும்
அயர்ந்த வர்க்கும்

மின்னைவிழி உயர்ந்ததுபோல்
மெய்யுயிரைப் பெற்றதுபோல்
தமிழ்ச்சாப் பாடு

தன்னையுணர் விப்பதற்குச்
சாரைச் சிற்றெறும்பென்னத்
தமிழ்நாட் டீரே,

முன்னைவைத்த காலைப்பின்
வையாமே வரிசையுற
முடுகு வீரே!

## உ. வாணிகர்

வாணிகர், தம் முகவரியை
வரைகின்ற பலகையில், ஆங்
கிலமா வேண்டும்?

'மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக' என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்!

ஆணிவிறபோன் முதலாக
அணிவிற்போன் ஈறாக
அனைவர் போக்கும்

நாணமற்ற தல்லாமல்
நந்தமிழன் நலங்காக்கும்
செய்கை யாமோ?

உணவுதரு விடுதிதனைக்
'கிளப்' பெனவேண் டும்போலும்!
உயர்ந்த பட்டுத்

துணிக்கடைக்கு 'சில்குஷாப்'
எனும்பலகை தொங்குவதால்
சிறப்புப் போலும்!

மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?

தணிப்பரிதாம் துன்பமிது!
தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
தமிழ்தா னில்லை!

"பவன்" "மண்டல்" முதலியன
இனியேனும் தமிழகத்தில்
பயிலா வண்ணம்

அவண்சென்று முழங்கிடுவீர்!
ஆங்கிலச்சொல் இந்தி மொழி
வடசொல் யாவும்

இவண் தமிழிற் கலப்பதுண்டோ
"பிராம்மணர் கள்உண்ணும்
இடம்" இப்பேச்சில்

உவப்புண்டோ தமிழ்வானம்
ஒழிந்திடுதே ஐயகோ
உணர்வீர் நன்றே.

அறிவிப்புப் பலகையெல்லாம்
அருந்தமிழ்ச்சொல் ஆக்குவதே
அன்றி, அச்சொல்

குறைவற்ற தொடராகக்
குற்றமற்ற சொல்லாக
அமையு மாயின்

மறுவற்றுத் திகழாளோ
செந்தமிழ்த்தாய்? தமிழ்மக்கள்
மகிழ்ந்தி டாரோ?

குறியுற்ற மறவர்களே!
இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்.

பேச்சாலும் எழுத்தாலும்
பாட்டாலும் கூத்தாலும்
பிறர் உவக்க

ஓச்சுகவே மணிமுரசு!
வீதியெல்லாம் வரிசையுற
உலவா நிற்பீர்!

ஏச்சாலும் எதிர்ப்பாலும்
வருகின்ற இன்னலுக்குள்
இன்ப வெள்ளம்

பாய்ச்சாதோ பொதுத்தொண்டு?
பைந்தமிழ்க்குச் செயும் தொண்டு
பருக வாரீர்.

- பாரதிதாசன்

## 2.இறுதிமுறி (WILL)
## கங்கையின் காதலன்

(பண்டித நேரு அவர்கள் சிறந்த இலக்கிய அறிஞர்; வரலாற்றாசிரியர்; ஆங்கில மொழியை நாடித் துடிப்பறிந்து நடத்தும் ஆற்றல் மிகக் எழுத்தாளர்; உருதுமொழியில் கவிதை எழுதும் ஆற்றலும் கைவரப் பெற்றவர். இவர் இந்திய மக்களுக்கு விட்டுச் சென்ற இறுதி முறி (Will) ஒரு சுவையான இலக்கியம். அதைக் கவிதை வாகனத்தில் ஏற்றியிருக்கிறார் ஆசிரியர்.)

1) துள்ளுநீர் பாயுங் கங்கை
தோன்றுமென் னாட்டார் என்னை
உள்ளத்தில் சிலையாய் வைத்தார்;
ஊற்றெடுத் தொழுகு மன்பு
வெள்ளத்தில் மூழ்க டித்தார்;
வேறதந் கீடாய் நானோ
எள்ளள வன்பைக் கூட
இன்னமுங் கொடுக்க வில்லை.

2) ஏற்றத்தைப் போல ஏறி
இறங்கிடும் என்றன் மூச்சுக்
காற்றுள்ள வரையில் சற்றும்
கண்துஞ்சல் இன்றி, நாட்டார்
போற்றிடும் தொண்ட னாவேன்
புகழுக்கும் நம்பிக் கைக்கும்
ஆற்றிடும் அன்பி னுக்கும்
அருகனாய் நடந்து கொள்வேன்.

3) வெள்ளையர் ஆட்சி வீழ
வீரத்தைக் காட்டி நின்ற
துள்ளுதோள் மறவ ருக்கும்
தோள்கொடுத் தாட்சித் தேரைத்
தள்ளிடும் நண்பருக்கும்
தாங்கரும் மகிழ்ச்சி யோடென்
உள்ளத்தில் பொங்கும் நன்றி
உணர்ச்சியை வழங்கு கின்றேன்.

4) கற்றரைச் சிறைக்கூ டத்தில்
கடுந்துயர் மிகவும் பட்டும்
ஒற்றிய பிரம்ப டிக்கே
உடம்பினைத் தந்து நைந்தும்
பற்பல பேரைக் குண்டுப்
பாம்புக்குப் பறிகொடுத்தும்
பெற்றஇச் சுதந்தி ரத்தைப்
பேணுதல் கடமை யாகும்.

5) சமயத்தைச் சடங்கைப் பொய்மைச்
சாத்திரக் கூத்தை யெல்லாம்
உமியைப்போல் கருதி யென்றன்
உள்ளத்தில் ஒதுக்கி வாழ்ந்தேன்.
நமையு ஏமாற்றிக் கொண்டிந்
நாட்டை ஏமாற்று தற்காய்ச்
சமைத்தபொய்ச் சடங்கை யென்றன்
சாவுக்குச் செய்ய வேண்டாம்.

6) பொங்கிடும் வெள்ளம் வீங்கப்
புதுப்புனல் பாய்ச்சு கின்ற
கங்கையை நினைக்குந் தோறுங்
களிமகிழ் வெய்து கின்றேன்.
திங்களும் வானு மாகத்
தித்திப்புங் கொய்யா வாகக்
கங்கையும் நானும் நீங்காக்
காதலா லிணைந்து விட்டோம்.

7) மாங்குயில் கூவும் நாளில்
மழைசரந் தொடுக்கும் நாளில்
பூங்கர மசைத்து வேனில்
பூப்பந்தல் போடும் நாளில்
தாங்கரும் மகிழ்ச்சி வெள்ளம்
தாவிடக் கங்கை யோரம்
தேங்கிய அழகை யுண்டு
திரிந்துநான் மகிழ்ந்த துண்டு.

8) இந்திய நாட்டு மக்கள்
இதயத்தில் பாயு மாறு!
சிந்தனை வீரம் நம்மோர்
சேர்த்தநற் கலைகள் வாசச்
சந்தனம் நாக ரீகம்
சார்ந்த நம்பிக்கை யாவும்
உந்தியே பாயு மிந்த
உயர்மலைக் கங்கை யாறு.

9) என்னுடல் வீழ்ந்த பின்னர்
எரித்தஅச் சாம்பல் தன்னைப்
பொன்னொளிக் கங்கை யாற்றில்
போடுக கொஞ்சம்; பின்னர்
என்னுயிர்க் குயிர தான
இந்திய நாடடில் உள்ள
பண்ணையில் தூவ வேண்டும்
பறக்கின்ற ஊர்தி ஏறி.

10) கங்கையில் எனது சாம்பல்
கலப்பதால் ஆத்தி கத்தில்
சங்கமம் ஆனேன் என்று
சற்றும்நீர் எண்ண வேண்டாம்
கங்கையிந் நாட்டின் சின்னம்
காக்கின்ற உழவ ரெல்லாம்
தங்கிவாழ் பண்ணை தானித்
தாயகத் துயிர தாகும்.

11) பழமையின் பெயரா லிந்தப்
பாரத நாட்டில் நீங்காப்
பிளவினைச் சமயம் சாதி
பெருக்கிச்சீ ரழித்திட் டாலும்
பழமையிற் செழித்த நம்பண்
பாட்டினைப் போற்றி யன்பால்

தொழுதனன் இறுதி யாகத்
துணைக்கரங் குவித்து; வாழி!

**முருகசுந்தரம் கவிதைகள் - முருகசுந்தரம்**

## அலகு - 3

### 1. கலைகள்

முனைவர் உ.வே. சாமிநாத ஐயர்

கலைகளுக் கெல்லாம் தெய்வமாக விளங்கும் தேவியைக் கலைமகளென்று வழங்குகிறோம்.

*"ஆய கலை களறுபத்து நான்கினையும்*
*ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய*
*உருப்பளிங்கு போல்லவாளென் னுள்ளத்தி னுள்ளே*
*இருப்பளிங்கு வாரா திடர்"*

என்ற செய்யுளால் கலைகள் அறுபத்து நான்கென்பதனையும் அவற்றைக் கலைமகள் அருளிச் செய்வ ளென்பதையும் அறியலாம்.

*"எண்ணெண் கலையு மிசைந்துடன் போக*
*எண்ணான் கிரட்டி யிருங்கலை"* (சிலப்பதிகாரம்)

*"யாழ்முத லாக வறுபத் தொருநான்*
*கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்*
*கலையுற வகுத்த"*

*"செம்மறையா ரணமுதனா லீரெட்டுக் கலைமுழுதும்*
*தெரிந்தாளந்த*
*மெய்மறையார் கலையனைத்து மேகலையா*
*மருங்கசைத்த விமலையம்மா"* (திருவிளையாடல்)

என வருவனவற்றாலும் அறுபத்து நான்கு கலைகளுண்மை பெறப்படும்; அவை அக்கர இலக்கண (அக்ஷரலக்ஷண) முதல் அவித்தைப் பிரயோகம் வரை உள்ளனவாகும்; வேறுவகையாகக் கூறுவதும் உண்டு. அறுபத்து நான்கு கலைகளையன்றி அவற்றைப் பின் பற்றிய கலைகளும் உள்ளன என்பர்.

**வேறுபாடுகள்**

அந்தணருக்குரிய கலைகள், மன்னருக்குரிய கலைகள் வணிகருக் குரிய கலைகள், வேளாளருக்குரிய கலைகள், மகளிருக்குரியன, பொது என அவற்றுள் வேறுபாடுண்டு. தமிழிலுள்ள பழைய நூல்களில் தமிழ்நாட்டிலும் பிற நாட்டிலும் இருந்த கலைகளைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அத்தகைய கலைகளிற் பலவற்றிற்குரிய நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தன; இக்காலத்தும் சில உள்ளன.

**இசையும் நாடகமும்**

*தமிழ் நாட்டுக் கலைகளில் மிகச் சிறப்பாக இருந்து வந்தவை இசையும் நாடகமுமாம். பழைய நூல்களிற் காணப்படுகின்ற பலவகை இசைக்கருவிகளைப்பற்றிய செய்திகள் இக்காலத்தில் எந்த வகையாலும் அறிய முடியாமல் இருக்கின்றன. தோற் கருவி வகைகளில் அளவிறந்தனவும் யாழ்வகைகளிற் பலவும், தாளம் முதலியவற்றில் அவ்வாறே பலவும் இருந்தனவென்று தெரிகின்றது. இசைச்சங்கமொன்று பண்டைக்காலதில் இருந்ததென்றும், அதில் பல புலவர்கள் இருந்து இசைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்து வந்தார்களென்று இசையைப் பற்றிய பல நூல்களை அவர்கள் இயற்றியுள்ளார்களென்றும் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் அறிவிக்கின்றன. பிற்காலத்திலும் அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் சங்கீத வித்துவான்கள் பலர் இருந்து வந்தார்கள்.*

*நாடகக்கலையையும் தமிழர்கள் போற்றி வந்தார்கள். நாடகம் பலவகைப்படுதலையும், அதற்கு உரியவர்களுடைய இலக்கணங்களையும், பிறவற்றையும் விரிவாகக்கூறும் நூல்கள் முன்பு இருந்தன; இப்பொழுது சிலப்பதிகாரத்தால் மட்டும் சில செய்திகள் தெரிய வருகின்றன.*

**ஓவியம்**

*ஓவியக்கலை அல்லது சித்திரசாஸ்திரம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது.*

*“ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்”*

*என்ற மணிமேகலையடி ஓவிய சம்பந்தமாக நூல் இருந்தமையை அறிவிக்கின்றது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் ஓவிய நூலென ஒன்றைக் கூறி அதிலிருந்து சில விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றார். ஓவியம் வல்லார் பலர் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தனர்.*

*“எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி*
*நுண்ணித னுணர்ந்த நுழைந்த நோக்கிற்*
*கண்ணுள் வினைஞரும்”*

*என்ற மதுரைக் காஞ்சிப் பகுதியால் இது விளங்கும், மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன.*

*“மாடக்குச் சித்திரம்”*

*என்பது மாடங்களுக்கு அழகுசெய்வது சித்திரமென்று தமிழ்நாட்டார் கொள்கையைக் காட்டுகின்றது.*

*“சுடும ணோங்கிய நெடுநிலை மனைதொறும்*
*மையறு படிவத்து வானவர் முதலா*
*எவ்வகை வுயிர்களு முவமங் காட்டி*

*வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய*
*கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்*" (மணிமேகலை)

என்பதில் மாளிகைகளிற் பலவகை ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து நின்றமை கூறப்படுதல் காண்க. ஆடைகளிற் சித்திரங்களை எழுதும் வழக்கம் பழைமையானது; படமென்னும் பெயர் இக்காரணத்தாலேதேய வந்தது (படம் - வஸ்திரம்). ஒத்த அன்பினளாகிய தலைவியொருத்தியைப் பெறமுடியாமல் வருந்தும் தலைவன் தனக்கும் அவளுக்கும் உள்ள அன்பை வெளிப்படுத்த எண்ணி பனைமடலாற் செய்த குதிரையொன்றில் ஏறிவருவானென்றும் அப்பொழுது தலைவியைப் போன்ற படமொன்றை யெழுதி அதில் வைத்து எடுத்து வருவானென்றும் அகப்பொருள் நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப்படத்தைக் கண்ட ஊரார் இன்ன மங்கையிடம் இவன் அன்பு பூண்டுள்ளானென்று ஐயமற அறிவாராம். இச்செய்தியால் ஒருவரைப் பார்த்து அவரைப்போலவே சித்திரம் எழுதும் வன்மை அக்காலத்தில் இருந்ததென்று அறிந்து கொள்ளலாம். ஓவியம் எழுதுபவர்கள் முதலில் தாம் கருதியிருக்கும உருவத்தைக் குறித்துக்கொண்டு பின்பு வர்ணங்களையமைத்து அதனை அழகுபடுத்தவார்கள். அவ்வாறு முதலில் எழுதப்படுவது புனையா ஓவியம் என்று வழங்கும். நெடுநல்வாடையிலும் மணிமேகலையிலும் புனையா ஓவியம் உவமையாக எடுத்தாளப்பட்டிருக்கிறது. திரைச் சீலைகளில் சித்திரங்கள் அமைக்கப் பெற்றிருந்தன; பாயற் கட்டிலைச் சுற்றிக் கட்டப்படும் திரைகளிலும் படுக்கையின் மேல் விரிக்கும் துணிகளிலும் மேற்கட்டியிலும் சித்திரங்கள் இருந்தன; ஆடைகளிற் சித்திரங்கள் எழுதப்பட்டன; நெய்யும்பொழுதே ஆடைகளிற் சித்திரங்களை அமைத்து வந்தார்கள்.

"*குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையும்*
*திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியும்*
*நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்*
*பிடவமுந் தளவமு முடமுட் டாழையும்*
*குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமும்*
*செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்*
*எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி*
*வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்*
*சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே*
*ஒப்பத் தோன்றிய வுவவனம்*" (மணிமேகலை)

என்று கூறப்பட்ட அடிகளினால் இயற்கை யெழிலை அவ்வாறே எடுத்துக்காட்டும் சீத்திரப் படங்களை அமைக்கும் திறனைத் தமிழ் நாட்டார் அறிந்திருந்தமை புலப்படுகின்ற தன்றோ?

**சிற்பம்**

சிற்பக்கலை வல்லுநர்கள் மண்ணினாலும், செம்பு பொன் முதலிய உலோகங்களாலும், கல்லாலும், சுண்ணாம்பினாலும், மரத்தினாலும், தந்தத்தினாலும், பலவகைப் பாவைகள் முதலியவற்றை அமைத்தார்கள். மண்ணாற் பாவை அமைப்பவர் மண்ணீட்டாள ரெனப்பட்டனர். தந்தத்தினால்

தேர் முதலியன அமைக்கப்பட்டன. கல்லில் அமைந்த சிற்பங்களில் தமிழ்நாடு மிகவும் சிறந்ததென்பதை யார்தாம் மறுப்பார்? பிற்காலத்தில் பல்லவர்கள் சோழர்கள் அரசாட்சியில் தமிழ்நாட்டுக் கோயில்கள் சிற்பத் திறன் அமையக் கட்டப்பட்டன. அக்காலத்தில் பல சிற்பிகள் அவ்வரசர்களால் முற்றூட்டுப் பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய கைவன்மையை இன்னும் வெளிப்படுத்திக்கொண்டு விளங்கும் கோயில்களைக் காணும் பிறநாட்டார் வியப்படைகின்றார்கள். சோழநாட்டுச் சிற்பிகள், 'திருவலஞ்சுழிப் பல்கணி, திருவீழிமிழலை வௌவானத்தி மண்டபம் ஆவுடையார் கோயிற் கொடுங்கை எனும் மூன்றைப் போலச் செய்ய இயலா; மற்றவற்றைப் போலச் செய்வோம் ' எனவும் கொங்குநாட்டில் தாரமங்கலம், தாடிக் கொம்பென்னும் இரண்டிடங்களிலுள்ள சிற்பங்களைப் போல இயற்ற எங்களால் இயலாது எனவும் உடன்படிக்கை எழுதிக்கொடுக்கும் வழக்கமுண்டென்னும் கர்ண பரம்பரைச் செய்திகள் அவ்விடங்களில் உள்ள சிற்பத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றன.

மரத்தினாலும் உலோகத்தினாலும் பலவகை வண்டிகள் செய்யப்பெற்றன. அவை வையம், பாண்டில், தேர் முதலிய பலவகையானவை, தாமரை மலரைப் போன்ற வண்டியொன்றின் வருணனை பெருங்கதையிற் காணப்படுகிறது,

"யவனக் கைவினை யாரியர் புனைந்து
தமனியைத் தியன்ற தாமரை போலப்
பவழமு மணியும் பல்வினைப் பளிங்கும்
தவழ்கதிர் முத்துந் தானத் தணிந்தது
விலைவரம் பறியா வெறுக்கையுண் மிக்க
தலையள வியன்றது தனக்கிணையில்லது
தாயொடு வந்த தலைப்பெரு வையம்"

(உஞ்சைக் காண்டம்)

என அதன் இயல்பு உரைக்கப்படுதல் காண்க.

**அணிகள்**

பொன்னாலும் வெள்ளியினாலும் நவமணிகளாலும் செய்யப்பெற்ற பலவகை அணிகள் அக்காலத்தில் அணியப்பட்டுவந்தன. அவற்றை இயற்றும் பொற் கொல்லர்கள் தங்களுக்குரிய நூலில் நல்ல தேர்ச்சியுடையவர்களாக இருந்தார்கள் ; நவமணிகளைப்பற்றிய இலக்கணங்களையும் நன்கு அறிந்திருந்தனர். அவற்றிற்குரிய நூல்கள் பல இருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலுள்ள மேற்கோட் சூத்திரங்களிலும் நவமணிகளைப் பற்றிய வரலாறுகள் பல கூறப்படுகின்றன. கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணங்களிலும், பழைய சாஸனங்களிலும் நவமணிகளுக்குரிய குணங்களும் குற்றங்களும் சொல்லப் படுகின்றன.

**நெய்தல்**

நெய்யுந் தொழிலிலும் தமிழ்நாட்டார் சிறப்பெய்தியிருந்தனர். பருத்தியினாலும், எலிமயிர், ஆட்டுமயிர், முதலியவனவற்றாலும், பட்டினாலும்

ஆடைகள் நெய்யப் பெற்று வந்தன. கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரும் பிறரும் பஞ்சினை நூற்று வந்தனர்.

"ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்குநுண் பனுவல்"
(நற்றிணை)

"பருத்திப் பெண்டின் பனுவ லன்ன" (புறநானூறு)
என வருவனவும்,

'நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கைவன் மகடூஉத் தனது கைமாண்பினால் ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது' என்ற இறையனாரகப் பொருளுரையும் மகளிர் நூற்று வந்த வழக்கத்தை விளக்குகின்றன.

**ஆடைகள்**

ஆடைகளிற் பலவகை உண்டு. நீல நிறம் முதலிய பலநிறக் கச்சுகளும், ஆடைகளும், பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுக்களையும் மணிகளையும் விளிம்பிலேயுடைய பட்டுடைகளும் இருந்தன.

"சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்
நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்" (மதுரைக்காஞ்சி)

"நீலக் கச்சைப் பூவா ராடை" (புறநானூறு)

"கொட்டைக் கரையப் பட்டுடை" (பொருநராற்றுப்படை)

பாம்பின் சட்டையையும் மூங்கிலில் உரித்த தோலையும் பாலாவியையும் புகையையும் ஆடைகளுக்கு உவமையாக நல்லிசைப் புலவர்கள் கூறியிருப்பதனால் மிக மெல்லிய ஆடைகளைத் தமிழ் நாட்டார் அணிந்து வந்தனர் என்பது வெளியாகின்றது.

"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை" (பொருநராற்றுப்படை)

"இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்" (மலைபடுகடாம்)

"இழையணி வாரா வொண்பூங் கலிங்கம்" (புறநானூறு)

என்பன ஆடைகளின் நுண்மையை வெளிப்படுத்துகின்றமை காண்க.

"பொருந்துபூம் பொய்கைப் போர்வையைப் போர்த்து" (சீவக)

என்பதில் பொய்கைவடிவு எழுதின படாமென்று சொல்லப்படுகின்றது.

**மாலை தொடுத்தல்**

மாலைகளைத் தொடுப்பதிற் பலவகையான விசித்திர முறைகளைத் தமிழ்நூல்கள் தெரிவித்திருக்கின்றன. "மலராய்ந்து தொடுத்தல்" என்று சீத்தலைச்சாத்தனாரும். "கடி மலர்ச் சிப்பம்" என்று கொங்கு வேளிரும் அத்தொழிலைக் குறிக்கின்றனர். இண்டை, கண்ணி, தார் முதலிய பலவகைகள் மாலைகளில் உண்டு.

**மடைநூல்**

உணவு சமைக்கும் முறைகளைக் கூறும் நூல் 'மடை நூல்'எனப்படும். அதைப்பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களிற் கூறப்படுகின்றன, பலவகை உணவு வகைகள் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. காலத்திற்கு ஏற்ற உணவுகளையும் சாதி, நிலம் முதலியவற்றிகேற்ற உணவுகளையும் அந்நூல்களில அறிந்து கொள்ளலாம். சீவக சிந்தாமணியில் முத்தியிலம்பகத்தில் இருதுநகர் வென்னும் பகுதியில் சில பெரும்பொழுதிற்குரிய உணவு வகைகள் கூறப்பட்டுள்ளன.

**சோதிடம் முதலியன**

சோதிடம், நிமித்தம் பார்த்தல் முதலிய கலைகள் தமிழில் இருந்தன. அக்கலைத் திறனுடையார் காலக் கணிதரென்றும் கணிகளென்றும் கூறப்படுவர். கணிதத்திற் சிறந்த சிலர் சங்கத்தேயிருந்த நல்லிசைச் சான்றோர்களும் காணப்படுகின்றனர். அரசன் போர்புரியச் செல்லும்பொழுது நற்சொல், காக்கை கரைதல் முதலியனவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம். அகத் திணையுள்ளும் பலவகை நிமித்தங்கள் சொல்லப்படுகின்றன. விரிச்சி (நற்சொல்), தோள் கண் முதலியன துடித்தல், காக்கை கரைதல், பல்லி ஒலித்தல் முதலிய நிமித்தங்கள் உண்டு. கட்டுவிச்சி யென்னும் வெறியாடு பவளாற் கட்டுப் பார்த்தலும் வெளியாடுபவனாகிய வேலனாற் கழங்கு பார்த்தலுமாகிய நிமித்தங்கள் தொல்காப்பியத்திற் சொல்லப் பட்டுள்ளன.

**வானசாஸ்திரம்**

வானசாஸ்திரப் பயிற்சியும் அக்காலத்தே இருந்தன. சந்திரன் பரிவேடங் கொள்ளுங் காலத்தில் குறிஞ்சி நிலத்தார் மணம் செய்வார்கள். நெடுநல்லவாடையில், கட்டிலுக்குமேலே கட்டியிருக்கும் மேற்கட்டியில் பன்னிரண்டு இராசிகளும் எழுதப்பட்டிருந்தன வென்னும் செய்தி உள்ளது; நட்சத்திரங்களின் பெயர்களிற் சில சங்க நூல்களில் வந்துள்ளன. அரசர் முதலியவர்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாடும் வழக்கம் முன்பே இருந்து வந்தது. கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும்பொறை இறக்குங் காலத்தைக் கூடலூர் கிழார் ஏழு நாட்களுக்கு முன் ஒரு விண்மீன் விழுந்தமையால் அறிந்தனர் ; அவன் துஞ்சிய காலத்து. "இதனை முன்னரே அறிந்தேன்" என்று வருந்தி ஒரு செய்யுள் கூறியுள்ளார். அதில் மீன் விழுந்த நாளில் இருந்த நட்சத்திரங்களின் நிலை காணப்படுகின்றது. (புறநானூறு, 229). இவற்றால் நட்சத்திரங்களைப் பற்றிய அறிவு இருந்தமை உணரப்படும்.

**மருத்துவம்**

*மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர்கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப்பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது. தமிழ வைத்தியம் சித்த வைத்தியமென்னும் பெயரால் இக்காலத்து வழங்கப்படுகிறது. இப்பொழுதுள்ள நூல்கள் பண்டைக்காலத்தில தமிழ் நாட்டினர் பயின்று வந்த முறைகளை அறிந்த பிற்காலத்தார் எழுதியவை. அவை பெருஞ்சிறப்புடையன. ஆயுள்வேதத்தைப் பற்றிய செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது.*

**நகரமைப்பு**

*நகரமைப்பு, வீடுகட்டுதல் முதலியவற்றைப்பற்றிய சிறந்த அறிவும் தமிழ்நாட்டாருக்கு இருந்தது. நகரங்களில் உள்ள கடைவீதிகள் ஒழுங்காக அமைந்திருந்தன. பல கடைகள் வகைவகையாக இருந்தன. சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. அசுத்த நீரை ஊருக்கு வெளியே போக்குதற்குரிய கரந்து படை அல்லது கரந்துறை* (Underground Drainage) *யென்னும் ஜலதாரைகள் வீதியில் நடுவிற் கீழே இருந்தன. கற்களால் அவை மூடப்பட்டிருக்கும். வேண்டின் நீரை நிரப்பியும் வேண்டாவிடிற் போக்கியும் விடுவதற்குரிய வாவிகள் இருந்தன. அவை எந்திரவாவியெனவும், இலவந்திகை யெனவும் கூறப்படும் ;*

> "*எந்திர வாவிய லிளைஞரும் மகளிரும்*
> *தந்தமி லாடிய சாந்துகழி நீரும்*" (மணிமேகலை)

> "*நிறைக்குறி னிறைத்துப் போக்குறிற் போக்கும்*
> *பொறிற்படை யமைந்த பொங்கில வந்திகை*" (பெருங்கதை)

*மாலை நேரங்களிலும் வேனிற்காலத்திலும் புகுந்து மகிழ்தற்குரிய சோலைகள் பல இருந்தன; செய்குன்றங்களும் உண்டு:*

> "*சேணோங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்*
> *வேணவா மிகுக்கும் விரைமரக் காவும்*" (மணிமேகலை)

*இவற்றையன்றி.*

> "*எந்திர கிணறு மிடுங்கற் குன்றமும்*
> *வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்*
> *பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்*
> *ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்*"
> (மணிமேகலை)

*ஆகிய பல இடவகைகளும் உண்டு. அரசர் முதலியவர்களுக்குத் தனித்தனியே வீதிகள் இருந்தன.*

பலவகைத் தொழில் செய்வாருக்குரிய வீதிகள் முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப்பூம்பட்டினம், வஞ்சி மாநகர், காஞ்சி முதலிய நகர அமைப்புகளைப் பற்றிச் சொல்லும் பகுதிகளால் அக்காலத்தில் நகரங்கள் அமைக்கப்பட்ட முறைகள் அவற்றிலிருந்த தெருக்கள், இடங்கள் முதலியவற்றைப் பற்றிய பல செய்திகளை அறியலாம்.

மதுரை நகரத்திலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் நாளங்காடி அல்லங்காடி என்ற இருவகைக் கடைத் தெருக்கள் இருந்தன. நாளங்காடி - காலைக்கடை; அல்லங்காடி மாலைக்கடை,. அவ்விரு நகரங்களிலும் பலவகைக் கோயில்கள் இருந்தன.

அரசர்கள் வாழும் நகரங்களில் அகழியும் மதிலும் இருந்தன. மதிலின்மேற் பகைவர்களைத் தடுத்தாற்குப் பலவகைப்பொறிகள் அமைக்கப்பெற்றிருந்தன. கோட்டை வாயில்களும் ஊருக்குள் பிறரறியாதவாறு வெளியிலிருந்து புகுதற்குரிய நுழைவழிகளும் உண்டு. காஞ்சி நகர் தாமரை மலர்போல அமைந்துள்ளதென்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

*“மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்*
*பூவொடு புரையுஞ் சீருர் பூவின்*
*இதழகத் தனைய தெருவ மிதழகத்*
*தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில் ”* (பரிபாடல்)

என்பதில் மதுரையும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. பெருங் கதையில் இராசகிரியமென்னும் நகரத்தைத் தாமரை மலராகவும் பலவகைத் தெருக்களைப் புறவிதழ் புல்லிதழ் அகவிதழ் முதலியவைகளாகவும் அரசன் அரண்மனையை நடுவிலேயேமைந்த கர்ணிகையாகவும் ஆசிரியர் உருவகம் செய்துள்ளார். இதனால் நகரங்கள் அழகும் ஒழுங்கும் சிறந்த வீதிகளால் அமைந்திருந்தன.

**கட்டிடச் சிற்பம்**

வீடுகளை அமைப்பதில் சில முறைகள் அக்காலத்தில் உண்டு.

*“பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து”* (நெடுநல்வாடை)

என்பதால் அவரவர்களுக்கேற்றபடி மனைகள் அமைக்கும் வழக்கம் இருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம். வீடுகளைக் கட்டுவதற்காக அஸ்திவாரம் போடும் காலம் நெடுநல்வாடையிற் காணப்படுகின்றது. கோபுரங்களும் வாயின் மாடங்களும், நிலாமுற்றங்களும் தெற்றிகளும் அறைகளும் அமைக்கப்பட்டன. கஜலக்ஷ்மியின் திருவுருவம் நிலைக்கு மேலே மத்தியில் முற்காலத்தும் அமைக்கப்பட்டமையை நெடுநல்வாடை முதலியவற்றால் அறியலாம். மாடங்களாகவே சில வீடுகள் கட்டப்பட்டிருந்தன. வீட்டின் சுவர்களிற் பலவகைக் சாளரங்களை வைப்பதுண்டு; ‘காலதர்’ என்று அவை கூறப்படும் ; காற்றுப் போகும் வழியென்பது அதன் பொருள். இதனால் தேக சௌக்கதியத்திற் குரியனவும் கவனிக்கப்பெற்று வந்தமை தெரிகின்றது.

**கூபநூல்**

கிணறுகளை வெட்டும் முறைகளை யறிவிக்கும் கூப நூல் ஒன்று உண்டு. இன்ன இடத்தில் வெட்டினால் நல்ல ஜலமிருக்குமென்பதை அதனால் எளிதில் அறியலாம். உதயணன் இந்நூலில் தேர்சசியுடையவனாக விருந்தானென்ற செய்தி பெருங்கதையில் காணப்படும்.

**காவல் நூலும் கரவடநூலும்**

காவல் காத்தற்குரிய காவல்நூல் கரவடநூல் முதலிய பலநூல்களின் பெயர்கள் தெரிய வருகின்றன. நூலேணியை அரையிற் சுற்றியவர்களாய்க் கறுப்புடையை அணிந்துகொண்டு கள்வர்கள் பதுங்கி வருவார்களென்றும் அவர்களை ஒற்றியறிந்து காவலர்கள் பிடிப்பார்களென்றும் அக்காவலர்கள் காவல்நூல் கரவடநூல் என்னும் இரண்டிலும் வல்லவர்களாக இருந்தார்களென்றும் மதுரைக் காஞ்சியும் அதன் உரையும் அறிவிக்கின்றன. தக்கயாகப்பரணி உரையாசிரியர்,

“உடன்கள்ளரும் ஒற்றிக் ” கொடுப்போரும் பெருநிலை
நிற்போரும் கரவட சாத்திரமும் வேண்டும் ”

என்ற ஓர் இடத்திற் களவுக்குரிய உபகாரணங்கள் சிலவற்றைத் தெரிவிக்கின்றார்.

**போர்க்கலை**

போர்க்கலை தமிழ்நாட்டில் தனி இலக்கணத்தோடு இருந்தது. தொல்காப்பியம் புறத்திணையியலிலும் பன்னிரு படலத்திலும் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களிலும் கூறப்பட்ட புறத்திணைத் துறைகளிற் பெரும்பாலான போரையும் அதனைச் சார்ந்தவற்றையும் பற்றிய செய்திகளைக் கூறுவனவாம். பகைவர்களுடைய நாட்டிலுள்ள பசுக்கள் மகளிர் முதலியயோருக்குப் போரினால் ஏதம் வருமென்று அஞ்சி “யாம் போர் செய்யப் போகிறோம் ; மகளிர் முதலியோர் இந்நாட்டை நீங்கிக் காவலுடைய நாட்டிற்குச் சென்று விடுங்கள் ” என்று போர்புரியச் செல்வோர் பறையறைவிப்பர். தாமே செல்ல ஆற்றலில்லாத பசுக்களை அப்பகைவரது நாட்டிலிருந்து தம் நாட்டிற்குச் கொண்டுவந்து விடுவார்கள். அதுமுதல்போர் தொடங்கப்படும்.

நிரைகவர்தல், போர்செய்யப் புறப்படுதல், மதிலை வளைத்தல், போர் செய்தல், வெற்றி யுறுதல் என்று போரில் பல பெரும் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை வெட்சி முதலிய திணைகளாக நூல்கள் வழங்குகின்றன. அவ்வத் திணைக்குரிய மலர்களைச் சூடிக்கொண்டு போர்புரிதல் வழக்கம். ஒவ்வோர் அரசருக்கும் தனித்தனி அடையாளப் பூக்கள் உண்டு. போர்புரிகையில் அவற்றை வீரர்கள் அணிந்து கொள்வதால் அவர்களை இன்னாருடைய படையைச் சேர்ந்தவர்களென்று எளிதில் தெரிந்து கொள்வார்கள். அத்தகைய பூக்களைப் பொன்னாற் செய்வித்து அணிந்து கொள்வதும் உண்டு. புறத்திணைகளுள் ஒவ்வொன்றிலும் பல துறைகள் உண்டு.

தோணிகளில் ஏறி அகழிற் போர் புரிதலும் மதில் மீதேறிப் போர் புரிதலும் ஆகிய பலவகைப் போர்கள் உள்ளன. வீரர்களுக்குள் படைத்தலைவர்கள் முதலிய வேறுபாடுகள் உண்டு. சேனாதிபதிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. அவற்றுள் ஏனாதி என்பது ஒன்று. அப்பட்டத்துக்குரிய மோதிரம் ஏனாதி மோதிரமென்று வழங்கப்பெறும்.

*"போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்*
*கார்கடல் பெற்ற கரையன்றோ போர்க்கெல்லாம்*
*தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ் சேர்*
*ஏனாதிப் பட்டத்திவன்"*

என்பது இங்கே அறிதற்குரியது. வீரர்களுக்குரிய பல ஆயுதங்களின் பெயர்களை, நூல்களிற் காணலாம். வேல், வாள், அம்பு, கிடுகு என்பவற்றிற் பலவகைகள் உண்டு.

**கப்பற்றொழில்**

தமிழ் நாட்டார் கப்பல்களைச் செய்து அவற்றைப் பல வகையிற் பயன்படுத்திக் கொண்டனர். காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் உள்ள பல பண்டகசாலைகளில் பல நாடுகளிலிருந்து வந்த பண்டங்கள் இருந்தன வென்று பட்டினப்பாலை தெரிவிக்கின்றது. பிறநாட்டிலிருந்து கப்பல்களிலும் பல பண்டங்கள் வந்து குவிந்தன.

*"வாலுளைப் புரவியொடு வடவளந்த தருஉம்*
*நாவாய் சூழ்ந்த நளிநிர்ப் படப்பை"*

என்ற பெரும்பாணாற்றுப்படை யடிகளால் .குதிரைகள் முதலிய வடநாட்டுப் பொருள்கள் தமிழ்நாட்டுக்கு நாவாய்களில் வந்தமை தெரியவரும்.

*"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்"* (பட்டினப்பாலை)

*"பொன்மலிந்த விழுப்பண்டம்*
*நாடார நன்கிழிதரும்*
*ஆடியற் பெருநாவாய்"* (மதுரைக்காஞ்சி)

*"விழுமிய நாவலாய் பெருநீ ரோச்சுநர்*
*நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்*
*புணர்ந்துடன் கொணர்ந்த புரவி"* (மதுரைக்காஞ்சி)

என்பவற்றாலும் இச்செய்தியை அறியலாம்.

**கட்டுரைவகை**

'கட்டுரை வகை' என்ற ஒரு கலையின் பெயர் மணிமேகலையிற் கூறப்படுகின்றது. தொடுத்துக் கூறும் சொல்வன்மையே அது.

பெருங்கதையாசிரியர் 'வாக்கின் விகற்பம்' என அதனைக் குறிப்பார். இன்னாரிடம் இன்னபடி பேசவேண்டும் மென்பதும், இன்ன பொருளை இவ்வாறு அமைத்துப் பேசவேண்டும் மென்பதுமாகிய பல வரையறைகளை இலக்கியங்களை நுணுகி ஆராய்வதனால் அறியலாம். அரசர் முதலியவர்களிடத்தில் ஒரு தயரச் செய்தியையோ அறிவுரையையோ கூறப்புகுங் காலத்து அவர்களை வாழ்த்தி அவர்களுடைய பெருமையைச் சொல்லிப் பாராட்டிய பின்னரே அவற்றைச் சொல்லுதல் புலவர்கள் வழக்கம் வாழ்த்தின் வகைகளுக்குரிய இலக்கணங்கள் சில உண்டு.

**அளவை நூல் முதலியன**

அளவைநூல், எண்ணூல், கனாநூல், கோழிநூல், குதிரைநூல், யானைநூல், புதையல்நூல், யோகநூல் முதலிய நூல் வகைகளும் கரந்துரை கணக்கு, கோலங் கோடல் முதலிய வேறு பலகலைகளும் இருந்தன.

தங்களுடைய கருத்துக்களைப் பிறருக்கு அறிவிப்பதற்குரிய பலவழிகள் தெரியவருகின்றன. கோவலனுக்கு மாதவி தாழை மடலில் செம்பஞ்சுக் குழம்பிற்றோய்த்த பித்திகையரும்பினால் ஒரு திருமுகம் எழுதி அனுப்பினாளென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. வாசவ தத்தையின் வண்ணமகளாக இந்த மானனீகை யென்பவளும் உதயணனும் தத்தம் உள்ளக்கருத்தை வாசவதத்தையின் முகத்தில் யவன பாஷையில் ஒருவருக்கொருவர் எழுதிவிடுத்த சித்திர வெழுத்துக்களால் அறிந்துகொண்டார்க ளென்ற ஒரு செய்தி பெருங் கதையில் காணப்படுகிறது. அந்நூலில் இவ்வரலாற்றைக் கூறும் பகுதி முகவெழுத்துக்காதை யென்றே பெயர் பெறும்.

அரண்மனையில இருந்த நாகமாலை யென்பவள் அங்கே நடந்த நிகழ்ச்சிகளை மந்தணமாகச் சீவகனுக்கு அறிவித்து வந்தாள். அவள் ஒரு குவளை மலருக்குள் ஒரு திருமுகம் வைத்து அனுப்பினாளென்றும் அக்குவளையின் காம்பே அத்திருமுக வோலையின் சலாகையாக அமைந்திருந்ததென்றும், அவ்வோலை அவ்விதழுக்குள் பொருத்தப் பெற்றிருந்ததென்றும் அதனுள் எழுதப்பட்டவை துகிலிகைக் கணக்காலெழுதப்பட்டவை யென்றும், அதனை அதற்கு அமைந்த முறைப்படி சீவகன் பிரித்துக் காம்பிற் சுற்றி வாசித்தறிந்தானென்றும், சீவகசிந்தாமணியால் அறியலாம்.

பிறநாட்டுக் கலைவல்லார் இந்நாட்டில் வந்து தம் ஆற்றலைப் புலப்படுத்தி வந்தனர்.

"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி" (மணிமேகலை)

வாழ்ந்து வந்தனர். பிற நாட்டாரிடமிருந்து கற்றவற்றையன்றித் தமிழ்நாட்டாரே அறிந்து பயின்ற கலைகளும் நூல்களும் பல உண்டு. வடமொழியிலுள்ள கலைநூல்களையும் தமிழிற் பெயர்த்துக் கொண்டார்கள்.

**செய்யவேண்டுவன**

*இக்காலத்தில் மேனாட்டாருடைய உதவியினாற் பல புதுக்கலைகள் உலகில் உலவுகின்றன. அவற்றிற்குரிய நூல்கள் பல ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வருதல் வேண்டும். பண்டைக் காலத்தினர் பிறமொழியிலுள்ள கலைநூல்களை மொழி பெயர்த்துக் கொண்டது போல இக்காலத்துக்கேற்ற நூல்களையும் பிறமொழியிலிருந்த அறிஞர்கள் பெயர்த்தமைத்தல் முறையேயாகும். நம் நாட்டில் சிறந்தோங்கியிருந்த சிற்பம் முதலிய கலைகளில் திறத்திலும் நம்முடைய முயற்சி சிறக்கவேண்டும். ஏட்டுச்சுவடிகளில் உள்ள கலை நூல்களை ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்த வேண்டும். கலைவல்லர்களுடைய குடும்பங்களிலுள்ளோரிடம் பல செய்திகளை வாய்மொழியாகக் கேட்டறியலாம். அவ்வாறு அறிந்து பலவற்றைத் தொகுக்கலாம். என்னுடைய இளமையில் திருவீழி மிழலையில் சிறந்த சிற்பியொருவர் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். அவர் பல விஷயங்களைத் தெளிவாகச் சொன்னார். சீவக சிந்தாமணியல் வந்துள்ள யானைப் பேச்சு இப்பொழுதும் வழங்கி வருகின்றனவாவென்று திருவிடைமருதூரிலிருந்து ஒரு யானைப் பாகனைக் கேட்டேன். அவன் அவை அப்படியே வழங்குகின்றன வென்றும். யானையின் இலக்கணங்கள் முதலியனவற்றைப் பற்றித் தமிழில் எழுதப் பெற்றுள்ள சுவடியொன்று உள்ளதென்றும் கூறினான், அதைப் பார்க்க வெண்ணிப் பெற முயன்றும் அது கிடைக்வில்லை.*

## *2. சங்க நெறிகள்*

முனைவர் வ.சுப.மாணிக்கம்

### அன்பு நெறிகள்

தமிழ் மொழிக்கு உயிரும் உடம்பும் என்று மதிக்கத்தக்க சங்க இலக்கியம் என்பது பெரும்பாலும் காதல் வாழ்வு பற்றிக்கூறும் அகவிலக்கியமாகும். அகப்பொருள் இலக்கியம் என்ற பெயர் பெற்றிருப்பினும், இல்லற வாழ்வுக்குத் தொடர்பான உலகச் செய்திகளும், இயற்கைச் சூழல்களும், அரசியல் போரியல் நெறிகளும், உயர்ந்த எண்ணங்களும், நல்ல வழக்கவொழுக்கங்களும் இவ்விலக்கியத்தில் நிரம்பவும் தெளிவாகவும் பொதிந்த கிடக்கின்றன. சங்கத்தொகை நூல்களுள் அகநானூறு நீண்ட அடிகளுடன் பல்வேறு குறிப்புக்களும் நெறிப்பாங்குகளும் கொண்டதாக விளங்குகின்றது. மேலும், சங்கப் புலமைச் சான்றோர்கள் இயற்கைச் சூழ்நிலையில் வாழ்ந்து மரஞ்செடி, கொடி, புல், பறவை, விலங்கு முதலான இயற்கையுயிர்களின் வாழ்வியலையும் உணர்வியலையும் கசடற அறிந்தவர்களாதலின் அவர்தம் அறிவாற்றலை அகநானூறு விரிவாகப் பகர்கின்றது.

அன்பு என்பது மக்கட்கு மட்டும் உரிய உணர்வன்று. எல்லாவுயிர்க்கும் உயிராக விளங்கும் குணம் அன்பாகும். அதனாற்றான் ‘அன்பின் வழியது உயிர்நிலை’ என்று பொது நோக்கிற் கூறினார் வள்ளுவர். அன்பு பொதுப்பெருஞ் சிறப்பினது ஆதலின் ‘அன்பென்பது ஒன்றின் தன்மை அமரரும் அறிந்ததில்லை’ என்று கம்பர் அதன் தனித்தன்மையை அழுத்தமாகப் பாடினார். பறவை விலங்கு இனங்கட்கும் அன்புவெளிப்பாடு உண்டு. மரஞ்செடி கொடிகட்கும் அன்புச் செயல் உண்டு. இவ்வுண்மை எங்குஞ் செயற்கையறிவும் செயற்கை மோகமும் உடைய இக்காலத்தவர்க்கு எளிதிற் படாது. அகநானூற்றுக் காலம் இயற்கையறிவுக் காலம்.

ஆண் மான், பெண் மான், குட்டிகள் என்ற ஒரு குடும்பம். கொலை வில்லை ஏந்திய வேட்டுவன் அம்பு தொடுத்தபோது பெண் மான் இறந்துவிட்டது. அந்த இறப்பைப் பொறாது துயருற்ற ஆண் மான் புல் மேயவில்லை. சிறிதும் நீர் பருகவில்லை. நடக்கவும் முடியவில்லை. தன்னுடலில் அம்பு தைத்ததுபோல மாழ்கி அந்த இடத்திலேயே சோர்ந்து கிடந்துவிட்டது. கைம்மைப்பட்ட இவ்வாண்மான் செத்திருக்கவும் செய்யும் ; தான் காக்க வேண்டிய மறிக்குட்டிகள் இருப்பதை நினைத்து மடியவில்லை.

*“கணையிடக் கழிந்ததன் வீழ்துணை யுள்ளிக்*
*குறுநெடுந் துணைய மறிபுடை யாடப்*
*புன்கண் கொண்ட திரிமருப் பிரலை*
*மேய்பதம் மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து*
*நெய்தலம் படுவிற் சின்னீர் உண்ணாது*
*எஃகுறு மாத்தரின் இணைந்துகண் படுக்கும்”* (அகம்371)

என்ற இளங்கீரனார் பாடலில் இரலைக் கணவன்மான் மனையாளிடத்தும் மறிக் குழந்தைகளிடத்தும் கொண்ட அன்பும் குடும்பப்பொறுப்பும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. வழி காட்டவும் செய்கின்றன.

ஒரு யானைக் குடும்பத்தின் அன்பு. ஆண் யானையாகிய களிறும் பெண் யானையாகிய பிடியும் உணவுதேடி மலைப்பக்கம் சென்றன. ஓரிடத்துச் சுரபுன்னையும் வாழையும் வளர்ந்தோங்கிய சாரல் இருந்தது. முதற்கண் அவற்றைத் தின்னச்சென்ற களிறு விரும்பித் தின்னும் மகிழ்ச்சியில் அறியாது அருகிருந்த படுகுழியிற் காலை வைத்து உள்ளே விழுந்து விட்டது. நேர்குத்தான ஆழ்குழியாதலின் ஏற முடியவில்லை. இல்லறத் காதலும் ஒட்பத் திறலும் வாய்ந்த பெண் யானை உடனே அடுத்திருந்த பெருமரக்கிளைகளை முறித்து வருந்தும் தன் யானைக் கணவன் ஏறி வருவதற்குப் படிகள் அமைத்துக் கொடுத்தது. ஆண் யானையும் தப்பிப் பிழைத்துத் தன் காதற்பிடியோடு புறப்பட்டது. இந்த அகநானூற்றுச் செய்யுளில் வரும் அன்புடை யானைக் குடும்பத்தை எண்ணித்தான். “காதன் மடப்பிடியும் களிறு வருவன கண்டேன்” என்று அப்பரடிகள் பாடினார் போலும். பெண் யானை இத்தந்திரம் செய்திராவிட்டால் கானவர்கள் ஆண் யானையைப் பிடித்து அடிமைப்படுத்தியிருப்பார்கள். தற்காத்துத் தற்கொண்டயானையும் காத்த சிறப்பு இந்தப் பிடிக்கு உண்டு. இந்த அன்பு நிகழ்ச்சியை,

> “கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு
> வாழை யோங்கிய தாழ்கண் அசும்பில்
> படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப்
> பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்” (அகம் 8)

என்று நான்கு அடிகளில் பாடுபவர் பெருங்குன்றூர்க் கிழார்.

ஆய் எயினன் என்ற வீரன் பறவை இனங்களை நன்கு வளர்த்துக் காப்பவன். ஆதலால் எல்லாப் பறவைகளும் அவன்பால் அன்பு காட்டின. பாழி என்ற போர்க்களத்தில் மிஞிலி என்பவன் ஆய்எயினனைக் கொன்றுவிட்டான். கொன்ற நேரம் கடுமையான நண்பகல். எயினனது சிதைந்த உடம்பு போர்க்களத்தில் வெயிலிறிற் கிடப்பதைக் காணப்பொறாத பருந்து முதலான பறவைகள் ஒருங்கு கூடித் தஞ்சிறகுகளையெல்லாம் மேலே குடையாகப் பரப்பிப் பறவைக் காதலன் உடலை வெயிலிற்படாமற் காத்தன. பகலிற் கண் தெரியாத கூகை தான் இந்தச் செய்ந்நன்றி நிகழ்ச்சியிற் கலந்துகொள்ள முடியவில்லையே என்று வருந்திற்றாம். பறவையினம் ஒரு மனிதனிடம் காட்டிய வியத்தகு அன்புச் செயலைப் பரணர் நான்கு பாடல்களில் பாராட்டுகின்றார். எனவே அகநானூறு மக்களின் அன்பொன்றனையே பாடவில்லை. ஏனையுயிர்களின் அன்புகளையும் பாராட்டுகின்றது. இதுவே சங்கவிலக்கியத்தின் தனி மாண்பு.

**மனிதநெறிகள்**

‘அறிவறிந்த மக்கட்பேறு’ என்று வள்ளுவப் பெருமகன் சொல்லியபடி, அறிவுடையவனே மனிதன் எனப்படுவான். பிறிதோர் உயிரின் துன்பத்தை உணரும்போது தான் நமக்கு அறிவுண்டு என்று சொல்லவேண்டும். அங்ஙனம்

உணராத நிலை அறிவு என்ற பெயருக்குத் தகுதியில்லை. இவ்வுலகமும் இவ்வுலகத்து உயிர்களும் நமக்காக இருக்கின்றன எனவும், நமக்குப் பணிசெய்ய வேண்டும் எனவும் மனிதவினம் மடம்பட்டு வீறு பேசுகின்றது. இவ்வுலகம் எல்லாவுயிர்க்கும் பொது என்ற அறிவும், ஏனையுயிர்கட்கும் மனிதன் தொண்டு செய்ய வேண்டும் என்ற அறிவும் இன்றைய மக்கள் வாழ்வில் பதியவில்லை. தன்னலத்துக்காகப் பிறவுயிர்களை வருத்தி வாழும் போக்குத்தான் இன்று வளர்ந்துவரும் அறிவியலுலகில் பெருகிவருகின்றது. அகநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் படிப்பது பரவினால், பரப்பப்பட்டால், மனிதநெறி என்ற இரக்கப் பண்பும் தன்னல மறுப்பும் நாட்டில் வளரும். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்ற தொடரை நாம் அடிக்கடி கேட்கின்றோம். இத்தொடர் அழகுத்தொடர் என்று நினைவூட்ட விரும்புகின்றேன். முறைப்படி கற்பித்தால் அகநானூற்றுச் செய்யுள் ஒவ்வொன்றும் சிறுகதை போலவும், விறுவிறுப்பாக இருக்கும். மனிதர்கள் பின்பற்றவேண்டிய அவ்வளவு அறநெறிகள் அகநானூற்றில் உள்ளன.

தலைவனும் வண்டும் பற்றிய ஒரு காட்சி. தலைவியைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்ற தலைவன் வினையை வென்றியோடு முடித்துக் கொண்டு கார்காலத் தொடக்கத்தில் வீடு திரும்புகின்றான். வீடு நெருங்குகின்றது. மாலைப் பொழுதிற்குள் தலைவியைக் கண்டு இன்புற வேண்டும் என்று அவன் நெஞ்சு வேகப்படுகின்றது. மனவேகத்திற் கேற்பக் குதிரையும் வேகம். அத்தலைவன் வேகத்தேரில் வருகின்ற வழியோ பெருஞ்சோலை. வண்டுகள் மலர்களோடு பிணைந்து கிடக்கின்றன. ஒரு சிந்தனை தலைவனுக்கு வருகின்றது. ஓடுகின்ற தேரில் கிண் கிண் என்ற ஓசை செய்யும் மணியின் நாவினைக் கயிற்றாற் கட்டி ஓசையை அடக்குகின்றான். குதிரை பறக்கின்றது. ஆதலால், மணியொலியில்லை. ஏன் இவ்வாறு செய்தான்? தன் இன்பவேட்கைக்காகப் பூஞ்சோலையிற்பிணைந்து கிடக்கும் வண்டுகளின் இன்பத்தைக் கலைக்கலாமா? கெடுக்கலாமா? தொல்காப்பியர் கூறியபடி இவ்வுலகில் எல்லாவுயிர்க்கும் இன்பந்துய்க்கும் உரிமை யுண்டல்லவா? இந்தப் பொதுச் சிந்தனை தோன்றியதும் தலைவன் மணியின் நாவைக் கட்டினான். நாலறிவுடைய வண்டின் இன்பத்தை மதித்ததனால் இத்தலைவன் ஆறறிவுடைய மனிதன் ஆனான்.

"பூத்தபொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்" (அகம் 4)

என்று குறுங்குடி மருதனார் அவன் செயலை மாண்வினை என்று பாராட்டுகின்றார்.

வேட்டுவனும் ஆண் பன்றியும் எதிர்ப்பட்ட ஒரு காட்சி. ஓர் ஆண்பன்றி தன் பெண் பன்றியொடும் குட்டிகளோடும் இரைதேடிப் புறப்பட்டது. அப்போது வேட்டுவன் ஒருவன் தன் வேட்டை நாயைப் பன்றியின் மேல் ஏவினான். ஆண் பன்றி அந்நாயைத் துரத்திக் கொண்டு ஓடியது. மேலும் வேட்டுவர்கள் தன்மேல் வராமல் எதிர்த்து விலக்கியது. விலக்கியதோடு போய்விடாமல் தன்

குட்டிகளையும் பன்றிப் பெண்ணையும் காவலான இடத்தில் வைத்துவிட்டு வில்வேட்டுவன் வருகின்ற வழிபார்த்து அவனைத் தாக்குவதற்காக அசையாது சினத்தோடு நின்ற கொண்டு இருந்தது. இவ்வீரக் காட்சியைக் கண்டான் வேட்டுவன். ஒரு சிந்தனை அவனுக்குப் புலப்பட்டது. அதுதான் மனிதச் சிந்தனை. அவ்வாண் பன்றியைக் கேவலம் பன்றியாக அவன் நினைக்கவில்லை. அதனைத்தன் தலைவனாகக் காண்கின்றான். வழி பார்த்து நிற்கும் அதன் எதிர்ச் செயலைத் தன் தலைவன் போர்க்களத்துப் பகைவர் படையை விலக்கித் தடுப்பதற்கு முன்னிற்பதாகக் காண்கின்றான். வீரவுணர்ச்சி விலங்கிற்கும் உண்டு என்று உணர்ந்தவுடனே, பன்றியே நீ என் தலைவனுக்கு ஒப்பாவாய் என்று பாராட்டிவிட்டுத் தொடுத்த அம்பை எடுத்துக் கொண்டு செல்கின்றான் என்று கபிலர் ஓர் அரிய நிகழ்ச்சியை வெளிப்படுத்துகின்றார்.

> *“அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற*
> *தறுகட் பன்றி நோக்கிக் கானவன்*
> *குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி*
> *மடைசெலல் முன்பின்தன் படைசெலச் செல்லாது*
> *அருவழி விலக்குமெம் பெருவிறல் போன்மென*
> *எய்யாது பெயரும்”* (அகம் 248)

என வரும் பண்பு மனிதநெறி தழுவியது. ஒரு மனிதன் தன் மனைவி மக்களைக் காக்க நினைக்கிறான். ஓர் ஆண்பன்றி தன் பெண்ணையும் குட்டிகளையும் காப்பாற்றும் பொருட்டு வீரங்கொள்கின்றது. இத்தற்காப்புச் செயலைத் தன் செயல்போல் உணர்பவன்தானே மனிதன். அத்தகைய அறிவுடைய இரக்க மனிதர்களை அகநானூற்றில் நிறையப் பார்க்கலாம்.

### பொருள் நெறிகள்

‘பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை’ என்று மிகவும் வெளிப்படையாக மனத்திற் பதியும்படி திருக்குறள் கூறுகின்றது. தமிழ் நூல்கள் செல்வத்தை நன்கு ஈட்டித் திரட்டி நல்ல வழியில் தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்த வேண்டுமென்று கூறுமேயன்றிச் செல்வத்தைத் தேடவேண்டாம் என்று முயற்சியைத் தடுப்பதில்லை. தமிழர் திருமண வாழ்வைக் குடும்ப வாழ்வு என்று சொல்லாமல் இல்லறம் என்று உயர்த்துக் கூறுவதில் இருந்தே கணவனும் மனைவியும் இன்பம் துய்க்கும் அளவில் நில்லாமல் அறங்களும் செய்ய வேண்டுமென்ற கருத்துப் பெறப்படும். அகப்பொருளிற் பொருள் வயிற் பிரிவு என்பது இன்றியமையாத பிரிவாகும். சங்க இலக்கியங்கள் இன்பப்பொருள் பற்றிப் பாடினாலும் இன்பத்துக்குத் துணையான ஏனைச் செய்திகளை விரிவாகக் கூறுகின்றன. ஆதலின் சங்கப் பனுவல்களை வாழ்க்கையிலக்கியங்கள் என்று மதிக்க வேண்டும். பொருள் ஏன் தேடவேண்டும்? உள்ள செல்வம் போதாதா? பொருளீட்டத்துக்காகத் துன்பப்படவேண்டுமா? இளமையில் இன்பத்தைத் துறந்து மனைவியைப் பிரிந்து நெடுந்தொலைவு செல்லலாமா? இன்பம் பெரிதா? என்ற பல பொருள் நெறிகளை அகநானூறு தெரிவிக்கிறது.

திருமணமாவதற்முன் செலவும் தொடர்பும் பொறுப்பும் குறைவு. மணமானபின் தன் குடும்பம் என்ற கட்டு ஏற்படுவதால் உறவுகள் பெருகுகின்றன. உலகத் தொடர்புகள் விரிகின்றன. பழியின்றிப் புகழ்பெறும் எண்ணங்கள் மலர்கின்றன. பெற்றோர், மனைவி, மக்கள் இவர்களைப் போற்றவும் உறவினர்க்கும் ஊரார்க்கும் உதவவும், வறியவர்க்கு வழங்கவும் தம்மை இகழ்ந்து செருக்கித் திரிவாரை அடக்கவும் பொருளின் துணை வேண்டும்.

*"கேள்கே டூன்றவும் கிளைஞ ராகவும்*
*கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்"* (அகம் 93)

என்று நக்கீரனார் கூறுவதுபோல, குடும்பமானவுடன் முதற்கண் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்குச் செல்வம் வேண்டுமல்லவா? ஒரு கணவன் சிந்திக்கின்றான். இளைய மனையாளின் புதிய இன்பத்தையே நினைந்துருகி ஊரிலிருந்தால், நண்பர்கள் நெருங்கமாட்டார்கள். குறைவார்கள். உற்றார் துன்பம் பெருகிக் கொண்டிருக்கும். செல்வம் ஈட்டிவந்து பக்கத்து நன்றாக வாழ்பவர்களின் வளத்தைப் பார்க்கும்போது பொறாமையும் ஏற்படும்.

*"நட்டோ ரின்மையும் கேளிர் துன்பமும்*
*ஒட்டா துறையுநா பெருக்கமுங் காணூஉ*
*ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல"* (அகம் 279)

என்று இவ்வாறு ஒரு குடும்பத் தலைவன் புகழையும் ஒப்பிட்டுப் பார்த்து, ஊரில் இருக்க விரும்பாமல் பொருளீட்ட நெடுந்தொலை செல்லுகின்றான்.

சில குடும்பங்களில் பெற்றோர் தொகுத்த செல்வம் பிள்ளைகட்கு இருக்கும் முன்னோர் ஈட்டிய பொருளை வைத்து செலவு செய்து இளங்காதலர்கள் இன்பக்காலம் கழித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா? இப்போக்கை நன்னெறியென்று சங்க நூல்கள் போற்றுவதில்லை. இன்பம் துய்த்தாலும் ஈதல் வழங்கினாலும் ஒவ்வொருவரும் தாந்தாம் புதிதாக ஈட்டிய பொருளிலிருந்தே வாழ்க்கை நடத்துதல் வேண்டும் எனவும், இன்னொருவர் தேடிய செல்வத்தைக் கொண்டு வாழ்தல் பகைவர்களின் கேலிக்கு இடமாகும் எனவும் பாலை பாடிய பெருங்கடுங்கோ எச்சரிக்கின்றார்.

*"உள்ளங் குவத்தல் செல்லார் கறுத்தோர்*
*எள்ளல் நெஞ்வத் தேஎச்சொல் நாணி"* (அகம் 111)

என்று இவ்வாறு ஒரு குடும்பத் தலைவன் புகழையும் இகழையும் ஒப்பிட்டுப் பார்த்து, ஊரில் இருக்க விரும்பாமல் பொருளீட்ட நெடுந்தொலை செல்லுகின்றான்.

திருமணமாகிப் பல்லாண்டுகள் மனைவியோடு கூடி வாழ்வதைச் சங்கச் சமுதாயம் விரும்புவதில்லை. பாராட்டிப் பாடுவதுமில்லை. அங்ஙனம் பல்லாண்டு தங்கிவிட்டால் பின்னர்ப் பிரியவிரும்புவான். மடியனாவான். பிறருக்குப்

பாரமாகவும் ஆகிவிடுவான். இவன் பிறரைத் தாங்குவது போய் உறவெல்லாம் இவனைத் தாங்கவேண்டிய மாறுநிலை ஏற்படும். ஆதலால், பொருள் காரணமாகவோ, போர் காரணமாகவோ திருமணமான புதிதிலே பிரிந்து செல்வதைத்தான் சங்கப் பனுவல்கள் வலியுறுத்துகின்றன.

"வண்டுபடுபு இருளிய தாழிருங் கூந்தற்
கரும்புண விரிந்த பெருந்தண் கோதை
இவளினுஞ் சிறந்தன்று ஈதல் நமக்கு" (அகம் 131)

என்றபடி, மாலைமணமும் கூந்தல் வனப்பும் உடைய இவளைவிட ஈதலறமே சிறந்தது என்று கடமையுணர்வோடு ஓர் இளந்தலைவன் கடிதிற் பிரிகின்றான்.

சங்ககால மகளிர்கள் இன்பக் கருவிகள் அல்லர். பிரிவில் பெரிதும் இரங்கித் துயருற்றாலும், தலைவன் கடமை செய்யப் புறப்படுவதை முழுதும் தடுப்பதில்லை. வருந்தி விடுத்தாலும் வாழ்த்திக் கொண்டிருத்தல் சங்கப் பெண்களின் சார்பாகும். தன் கணவன் வீரத்திலும் கொடையாம் குடிக்கும் புகழ் சேர்ப்பதையே அவர்களும் விரும்பினர். எத்தனையோ தலைவியர்கள் சென்ற தலைவன் கடமைக்கு வேண்டிய நாளெல்லாம் இருந்து, வினை முடித்துப் பொருளீட்டி, நோயின்றி நலமாக வருக என்று இல்லிலிருந்து நாளும் வாழ்த்துவதை அகநானூறு எடுத்துக் காட்டுகின்றது.

"என் ஆய்நலம் தொலையினும் தொலைக வென்று
நோயில ராகநங் காதலர்" (அகம் 115)

"நோய்நாம் உழக்குவ மாயினுந் தாந்தஞ்
செய்வினை முடிக்க தோழி" (அகம் 155)

"நாமழத் துறந்தன ராயினும் தாமே
செழுநகர் நல்விருந் தயர்மார் ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக" (அகம் 205)

என்று கணவன் தன் பொருளீட்டுங் கடமையிலும் பிறர்க்கு உதவி செய்யும் குறிக்கோளிலும் சங்கப் பெண்குலம் ஒத்துழைத்தது என்பதனை அகநானூற்றில் அறிகின்றோம்.

**உலக நெறிகள்**

உலக நடப்பிற்கும் ஒரு குடும்பத்தின் பல்வேறு அறங்கள் தேவைப்படுகின்றன. விரும்பினும் விரும்பாவிடினும், ஏற்பினும் ஏலாவிடினும் ஒவ்வொருவர்க்கும் பிறரோடும் பிறவுயிரினங்களோடும் தொடர்புகள் நரம்பு மண்டலம் போல் பின்னிச் செறிந்து கிடக்கின்றன. பல அறங்களை வாழ்வில் கடைப்பிடிப்பவர்கள் அமைதியான உலக இயக்கத்துக்கு வழி செய்பவர்கள் ஆவர். அகநானூறு இல்லற வாழ்வு பற்றி மொழியும் பனுவலாயினும் சமுதாய நலத்துக்கு வேண்டிய பல நெறியறங்கள் நல்ல தெளிவான மொழி நடையிற் சொல்லப்பட்டுள்ளன.

உலகம் என்பது குடும்பங்களின் தொகுதி, வாழைத்தோப்பில் ஒரு மரம் நோயுற்றாலும் அந்நோய் ஏனையவற்றிற்கும் பரவுமாப்போல, ஓர் ஊரில் ஒரு குடும்பம் இயல்பான அறநெறி பிறழ்ந்தால் அந்நெறி எங்கும் பரவிவிடும். ஆதலின் நன்னெறியைப் போற்றுவது ஊரார் கடனாகும். இன்று எல்லாம் அரசின் பொறுப்பு என்று விட்டுவிட்டு அவரவர் காரியம் பார்ப்பது போன்ற தன்னலப் போக்கு சங்ககாலத்து இருந்ததில்லை. ஊரில் ஒழுங்கு தம் பொறுப்பு என்று ஒவ்வொரு ஊராரும் கருதினர். குற்றம் இழைப்பாரை ஊர்ப்பெரியோர் கூடித் தண்டித்தனர். ஓர் இளம் பெண்ணின் கற்பைக் கெடுத்த கயவனுக்கு ஊர்ச்சான்றோர் தண்டனை கொடுத்த செய்தியை அகநானூறு கூறுகின்றது.

"*திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய*
*அறனி லாளன் அறியேன் என்ற*
*திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்*
*முறியார் பெருங்கிளை செறியப் பற்றி*
*நீறுதலைப் பெய்த ஞான்றை*
*வீறுசால அவையத் தார்ப்பினும் பெரிதே*" (அகம் 256)

காதலித்த பெண்ணை ஒருவன் கைவிட்டு விட்டான். தனக்குத் தொடர்பில்லை என்று பொய் கூறினான். சான்றுகளால் தொடர்புண்டு என்ற உண்மையைத் தெளிந்த ஊர்க் கூட்டத்தார் மரத்திற் கட்டிச் சுண்ணாம்பு நீற்றினை அவன் தலையில் வைத்து ஒறுத்தார்கள் என்ற வரலாற்றுக் குறிப்பினால் சங்கத் தமிழ்க்காலம் கற்புக்கு உயர்ந்த தனிமதிப்புக் கொடுத்த காலம் என்பது பெறப்படும்.

உலக நடப்பிற்குத் தொழில் வேற்றுமைகள் உடம்பின் உறுப்புகள் போல வேண்டும். தொழில் வேற்றுமை குலவேற்றுமையாகவும், உயர்வு இழிவாகவும் கருதல் கூடாது. பிறர் உழைப்பால் நாம் வாழ்கின்றோம். நம் உழைப்பினால் மற்றவர் வாழ்கின்றனர். இவ்வுண்மையை உணர்ந்த சங்க மக்கள் ஒத்த மதிப்பொடு யாரொடும் பழகினர். அகநானூற்றில் வரும் முல்லைப் பாடல்கள் உலகச் சமநெறியைக் காட்டுகின்றன. வினையை முடித்த தலைவன் பாகன் ஓட்டத் தேரில் வேகமாக வருகின்றான். வீடு வந்து விட்டது. இறங்குக என்று பாகன் சொல்லும்போது, தலைவன் 'இவ்வளவு விரைவாக எப்படி வந்தாய்? காற்றையே குதிரையாகப் பூட்டினையா? உன் மனத்தைக் குதிரையாகப் பூட்டினையா? என மனமாரப் பாராட்டி விட்டு, தன்மார்போடு தேர்ப்பாகனைத் தழுவிக் கொண்டு தன் மனைக்குள் புகுந்தான். மனையாளோ தேர்வலவனையும் வரவேற்று விருந்து பெற்றேன் என்று மகிழ்ந்தாள்.

"*வான்வழங் கியற்கை வளியூட் டினையோ*
*மானுரு வாகநின் மனம்பூட் டினையோ*
*உரைமதி வாழியோ வலவ எனத்தன்*
*வரைமருள் மார்பின் நளிப்பனன் முயங்கி*
*மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை*
*விருந்தேர் பெற்றனள் திருத்திழையோளே*" (அகம் 384)

தேரோட்டிதானே என்று எண்ணாது போர்ப் புகழ்த் தலைவன் தோளொடு தோள் தழுவினான் என்பதனையும், திண்ணை வெளியில் இருக்கச் செய்யாது வீட்டிற்குள்ளேயே கொண்டு சென்றான் என்பதனையும், இல்லறநங்கை தேரோட்டிவந்த தொழிலாளியை நல்விருந்தாக மதித்துப் போற்றினாள் என்பதனையும் நினைக்கும்போது, சங்ககாலம் மீண்டும் நம் நாட்டிற்கு இக்காலத்து வாராதா என்று ஆசை பிறக்கின்றது.

உலக வியக்கத்தின் ஒழுங்கு என்பது அரசியல் ஒழுங்கைப் பொறுத்தது. சங்ககாலம் முடியரசுக் காலமாயினும் நடைமுறையில் மக்களை மதிக்கும் குடியரசுப் பண்பு அன்று நிலவியது. அரசனுக்கும் சான்றோர்களுக்கும் பெருந்தொடர்பு இருந்தது. எவ்வகை அரசு முறையிலும் மானவுணவுர்க்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஈனமற்ற மானம் உடையவனே தூய வழி காட்டியாவான். வெண்ணிப் பறந்தலை என்ற போர்க்களத்தில் சோழன் கரிகாலனுக்கும் சேரன் பெருஞ்சேரலாதனுக்கும் கடும் போர் நடந்தது. சோழன் விட்ட அம்பு சேரனது மார்பைத் துளைத்து முதுகு வரை பாய்ந்து முதுகுப் புண்செய்தது. நேர் நின்று சேரன் மார்பிலேதான் அம்பினை ஏற்றான் என்றாலும் புறப்புண் ஏற்பட்டுவிட்டதே என்று மனஞ்சோர்ந்து மானத்தால் மாழ்கினான். இந்த இழிவுக்குப் பின் ஆட்சி எதற்கு என்று அரசைத் தானே துறந்து உயிர்விடும் நோக்கத்தோடு வடக்கிருந்தான். இந்த மானச் செய்தியைக் கேட்ட சேர நாட்டுப் பெருமக்களும் நட்பிற் பிரியாது சேரனோடு வடக்கிருந்து ஒக்க உயிர் துறந்தனர்.

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத் தவனொடு செலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்கு" (அகம் 55)

என்ற அகநானூற்றுச் செய்யுளில் வரலாற்றுக் கவிஞரான மாமூலனார் சங்கத் தமிழர் கொண்டொழுகிய மானத்தையும் நாணத்தையும் நட்பையும் உயிர்த் துறவையும் சிறந்த உலக நெறியாக உவமையில் வைத்துக் காட்டுகின்றார். இதனால் தன்னலமற்ற அரசியல் வாழ்வே சிறந்த உலக நெறிக்கு அடிப்படை என்பது பெறப்படும்.

## *3.கவுந்தியடிகள்*

*முனைவர் கா. .மீனாட்சிசுந்தரம்*

*சிலம்பில் கவுந்தியடிகள் ஓர் ஒட்டுப் பாத்திரம் என்பது என் கருத்து. புகாரின் புறநகரில் தோன்றி, மதுரையின் புறநகரில் தலைமைப் பாத்திரங்களிடமிருந்து விடைப் பெற்றுக் கொள்கின்ற பாத்திரமாகக் கவுந்தியடிகள் அமைக்கப்பட்டுள்ளார். இறுதியில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவர். கவுந்தி என்பது சைன மதப் பெண் துறவியைக் குறிக்கும் என்று திவாகரம் பேசுகிறது. அம்மையின் இயற்பெயர் ஐயை ஆகும். இவர் முன் வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் அறிய இயலவில்லை.*

*புகாரின் புறநகரில் இருந்த கவுந்தி ஐயையைப் புகாரை விட்டுப் புறப்பட்ட கோவலனும், கண்ணகியும் கண்டு அடிதொழுதனர். சமணசமயப் பெண் துறவி இவர் என்பதும், தோற்றத்திலேயே வணங்கத்தக்க பெருமையைத் தன்பால் கொண்டிருந்தவர் என்பதும் அறிமுகப்படுத்தும் போதே அறியப் படுபவையாம், தோற்றத்திற்கு இவர் பெருமதிப்புக் கொடுப்பவர் என்பதனைக் கோவலன் கண்ணகியரை முதல் முறை பார்த்த உடனேயே*

> *“உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்*
> *பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்*
> *உடையீர்”* (சிலம்பு- நாடுகண்)

*என அழைப்பதிலிருந்து அறிகிறோம். கோவலனின் தோற்றம் அவனைச் சாவக நோன்பி என்பதனை அறிவிக்கின்றது. அதனால் கவுந்தியடிகள் சமணப் பற்று மிக்க ஒரு பெண் துறவி என்பது நம் மனதில் ஊன்றப் படுகிறது. அடிகள் அவர்களைக் கண்டதும் பரிவுடன், ஊரையும் உற்றாரையும் நீங்கி வருவதற்கான காரணத்தைக் கேட்கிறார். ஆனால் அதற்கு மறுமொழியாகக் கோவலன் தான் மதுரைக்குச் சென்று பொருளீட்டும் நோக்கங் கொண்டு செல்பவன் எனப் பதில் தருகிறான். அடிகள் கேட்ட கேள்விக்கு ஏற்பதில் இது இல்லை. ஆயினும், கவுந்தி அடிகள் பதிலைப் பற்றிக் கருதாமல் காடும் நாடுமாக அமைந்த வழியில் கண்ணகி எப்படி நடப்பாள் என நினைந்து வருந்துகிறாள். “இந்தச் செலவு கொள்ளத்தக்கத அன்று, நீங்குக என்றாலும் இவர்கள் ஏற்கமாட்டார்களே” என அவர் நெஞ்சம் நோகிறது. இவை இவர்கள் தோற்றத்தையும், குறிப்பையும் கண்டு எனப்படுவதேயல்லாமல், அடிகள் அவர்கள் பாலிருந்து கேட்டு அறிந்தவை என்பதற்குச் சான்று ஒன்றுமில்லை. எனவே கவுந்தி அடிகள் அவர்கள் வழிச் செலவைத்தடுக்க முயன்றார்கள் எனச் சொல்வதற்கில்லை.*

*அதையடுத்து மதுரைக்குப் போய் மாசறு கேள்வியரின் அறிவுரை கேட்டு அறிவனை வணங்க உள்ளம் உடையராய்த் தானும் அவர்களோடு வருவதாகக் கூறுகிறார். கண்ணகியின் துயர் தீர்க்க இயலும் எனக் கோவலன் நினைத்தால் அடிகள் வர இருப்பது கோவலனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இவற்றை நோக்கும்போது கோவலன் கண்ணகியர் யாரென நன்கு ஆய்ந்து வழிச் செலவினைத் திட்டமிட்டு முடிவெடுத்தார் என கவுந்தியடிகளைச் சொல்ல*

இயலாது. அவர் நோக்கத்திற்கு ஒரு துணையாக அமைந்து விட்டதைப் போல் நுணுகி அறிவார்க்குத் தோன்றுகிறது.

புறப்படுவதற்கு முன், கவுந்தியடிகள், செல்லும் வழியில் ஏதந்தருவனாக அமைந்தள்ளவை யாவை என ஒரு பட்டியல் தருகிறார். அப்பட்டியலில் சமண மதத்தார் ஒதுக்கக்கூடிய பல செய்திகள் தரப்பட்டுள்ளன. வயலிலும் சோலையிலும் நடந்து செல்ல வேண்டிய முறை பற்றி எச்சரிக்கை தருவது அவர் மதப் பற்றையே காட்டுகிறது. அவர், குற்றமற்ற கடிஞை, தோளின் மேல் ஓர் அறுவை, கையில் பீலி ஆகியவற்றுடன் மொழிப் பொருள் தெய்வம் வழித் துணையாகக் கொண்டு இருவருடன் புறப்படுகிறார்.

ஒரு நாளைக்கு ஒரு காவதம் நடக்கின்றனர். அவ்வாறு செல்லும்போது ஒரு நாள் ஆற்று வீயரங்கத்தில் சாரணர் தோன்றினர். அவர்களைக் கண்டு அறிந்த கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் “பண்டை தொல்வினை பாறுக” என்று சாரணர் காலில் வீழ்ந்து வணங்கினர். கோவலன் கண்ணகியர்க்குத் தீங்கு வரும் என்பதை அச்சாரணர் அறிவாராயினும், விருப்பு வெறுப்பு இல்லாதவராகையால் அதனைக் கூறவில்லை. கவுந்தியடிகளைப் பார்த்து

“ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை
இட்ட வித்தி னெதிர்வந் தெய்தி
ஓட்டுங் காலை யொழிக்கவு மொண்ணா
கடுங்கால் நெடுவெளி யிடுஞ்சுட ரென்ன
ஒருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்கள்” (சிலம்பு- நாமுகாண்)

என்றவாறு சாரணர் கூற, கவுந்தியடிகள் தம் கை கூப்பித் தலை மேற்கொண்டு தம் அருகப் பற்றினை வெளியிடுகின்றார். வருவது அறியும் திறன் கவுந்தியடிகட்கு இல்லை என்பதைக் “கண்டறி கவுந்தி” என்ற சொற்றொடர் காட்டும். தீவினையின் பயனாகத் துன்பம் நுகர்வதை நீக்க இயலாது என்று சாரணர் சொல்வதைக் கவுந்தி பொது அறமாகக் கொள்கிறாரேயல்லாமல் கோவலன் கண்ணகியரைக் கருதி உரைப்பாக உணரவில்லை.

“ஒருமூன் றவித்தோள் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்றா னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா
ஐவரை வென்றோ னடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா வென்கண்
...............................................................................................
...............................................................................................
அருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகை யுங்கூடி ஒருவழிக் குவியா (சிலம்பு- நாமுகாண்)

எனக் கவுந்தியடிகள் அருகப் பற்றினை வெளியிடும்போது அருக தேவனை வாழ்த்துவதற்குப் பதிலாகப் பிற கடவுளர்களைப் பரவேன் என எதிர்மறையாகக் கூறுவது அவர் வழிபாட்டில் குறையுள்ளது என்பதைக் காட்டும். பிற சமய வெறுப்பு அவர் முதிர்ச்சியின்மையை உணர்த்துகிறது. இப்புகழ் மொழியைக் கேட்ட சாரணர், "பவந்தரு பாசம் கவுந்திகெடுக" "பந்தம் அறுக" என வாழ்த்தி விடைபெற்றனர்.

மூவரும் தென்கரைப் பூம்பொழிலில் தங்கியிருந்த காலத்து வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் காமனும் தேவியும் போன்றிருக்கிற கோவலன் கண்ணகியரை யாரென அறிவதற்காகக் கவுந்தியடிகளை வினவினர். அதற்கு அடிகள் "எம் மக்கள் ஆவர் ; வழிச் செலவால் துன்புறுத்துகின்றனர் ; அவர் பக்கம் செல்லாதீர்கள்" எனக் கூறினார். அதனைக் கேட்டு கற்றறிந்தீர் உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை நடத்துவதுண்டோ? என அவர்கள் வினவினர். அம்மொழி கேட்ட கண்ணகி, காதலன் முன் நடுங்கினாள். தவ ஆற்றல் பெற்ற கவுந்தியடிகள் தன் "பூங்கோதையை" எண்ணியதால் அவர்களை முது நரிகளாக ஆகுமாறு சபித்தார். அப்பொழுது நரிகள் விளித்தன. கண்ணகியும் கோவலனும் நடுங்கி, "செய் தவத்தீர்! நெறியின் நீங்கியோர் நீரல கூறினும், அறியாமை யென்று அறிதல் வேண்டும். ஆகையால் அவர்கட்கு உய்திக் காலம் உரைக்க வேண்டும்", என வேண்ட, அடிகள் பன்னிரண்டு திங்களுக்குப் பிறகு முன்னை உருவம் பெறுவர் எனச் சாபவிடைதந்தார்.

இந்நிகழ்ச்சி மிகக் கூர்ந்து கவனிக்கத் தக்கது. கண்ணகி, கோவலன் ஆகியவர்களின் அழகு வம்பப்பரத்தரைக் கவர்ந்திருக்கிறது. கவுந்தியடிகளின் தோற்றம் நோற்று உண்ணுகின்ற உடலைக் கொண்ட நுண்ணிய தவத்தைச் செய்பவர் என்ற அளவுக்கு அவ்வீணர்களுக்குப் படிய வைத்துள்ளது. கவுந்தியடிகள் கொடுத்த பதில் அவருடைய பரந்த மனப்பான்மையைக் காட்டுமாயினும், உண்மையாகாது. கவுந்தியடிகள் "கயல் நெடுங்கண்ணி காதற் கேள்வ!" என்று கோவலனை முன்பே விளித்துள்ளாராதலினாலே, அவ்விருவரும் கணவன் மனைவியர் என்பதை அவர் அறிவார். அவ்வீணவர்கள் "கற்றறிந்தீர்" என விளித்தது வஞ்சப் புகழ்ச்சியேயல்லாமல் உண்மையன்று. அடிகள், கண்ணகியை அவர்கள் எள்ளினார்கள் என எண்ணுவதற்கு இங்கு இதைத் தவிர யாதொரு இடமும் காணோம். கவுந்தியடிகள் சொன்ன நாகரிக முறையை வீணர்கள் புரிந்து கொள்ளாமல் சொல்லுக்குரிய நேர்ப் பொருளைக் கொண்டது அவர்கள் அறியாமையையே காட்டும். இந்நிகழ்ச்சியிலிருந்து கவுந்தியடிகள் முன்சினம் கொள்பவர் என்பதும் உலகியல் பட்டறிவு குறைந்தவர் தீச்சொற்களைக் கேட்க நாணுபவர்கள் என்பதும், அறியாமல் பிழை செய்பவர்களை மன்னிக்க வேண்டும் என்ற மனமுடையவர்கள் என்பதும் இந் நிகழ்ச்சியிருந்து தெரிகின்றன. இவ்விடத்தில் கவுந்தியடிகள் கண்ணகியை "என் பூங்கோதை" என்ற சொற்தொடரால் குறித்திருப்பது கூர்ந்து நோக்குதற்குரியது, இதனால் கண்ணகியை உரிமை மகள் போலக் கவுந்தியடிகள் கருதுகிறார் என நாம் நினைக்கக்கூடும்.

மதுரையுள் நுழையுங்கால் மாங்காட்டு மறையவனை மூவரும் சந்திக்கின்றனர். அவனை மதுரைக்குரிய வழி எது எனக் கோவலன் கேட்டான். அவன் சிறிது தூரம் சென்றதும் மூன்று வழிகள் தோன்றும் என்றும், ஒவ்வொரு வழியின் நுட்பம் இன்னது என்றும் கூறினான். அதைக்கேட்ட கவுந்திஐயை அவனை "நலம் புரி கொள்கை நான்மறையாள"என விளித்தமை கிண்டல் செய்வதுபோல உள்ளது. அவன் கூறிய பிலம்பின் வழிசெல்ல வேண்டியதில்லை என்றும், அவ்வழியில் கிடைக்கும் நலங்கள் எல்லாம் ஐந்திரத்தில உள்ளன ஆகையால் பிலம்புக வேண்டுவதில்லை என்றும் கூறியதோடு நிறுத்தாமல், "காமுறு தெய்வம் கண்டடி பணிய நீபோ யாங்களும் நீள் நெறிப்படர்குதும்"என அடிகள் கொடுத்த பதில் அவர் நிலைக்குப் பொருத்தம்தானா என்பது ஆய்விற்குரியது.

கோவலனிடத்தில்தான் மாங்காட்டு மறையவன் பேசிக் கொண்டிருந் தானேயல்லாமல், கவுந்தியடிகளிடத்தில் பேசவில்லை. இவ்வாறிருக்க, சமயக் காழ்ப்பு அடிகளை அவ்வாறு பேசத் தூண்டிற்றே என ஐயுற வேண்டியுள்ளது. ஒரு சமயம் அவன் பேச்சு, கோவலன் மனத்தை மாற்றிப் பிலம்பின் வழியாக மதுரைக்குப் போகத் தூண்டிவிடுமோ என அடிகள் எண்ணியிருக்கவும் கூடும். மூவரும் மாங்காட்டு மறையவன் கூறிய பிலம்பு வழியில் சென்றிருப்பார்களேயானால் கதையின் போக்கே மாறியிருக்கும். ஏன் எனில் அவ்வழியில் அவர்கள் பழம் பிறப்பு உணர்ச்சி பெற்று உண்மைகளை உணர்ந்து இருப்பார்கள். கோவலன் கண்ணகியர்க்குத் துன்பமே நேராமல் இருந்திருக்கக்கூடும். இதனை எண்ணித் தான் கவுந்தியடிகள் பிறகு உண்ணா நோன்பிருந்தார்களோ என நினைக்கவும் கூடும்.

மாங்காட்டு மறையோன் கொடுத்த எச்சரிக்கை கோவலனுக்கு உதவியுள்ளது என்பதனைக் காப்பியத்தில் அறிகிறோம். மருட்டிய தெய்வம் உண்டெனக் கூறியதால் கோவலன் விழிப்போடு அத்தெய்வம் வந்த காலை செயல்பட்டானன்றோ இவற்றிலிருந்து கவுந்தியடிகளுக்கு மதுரைக்குச் செல்லும் வழிகள் நன்கு தெரியா என்பது அவர்களின் சமய நெறிக்குத் துன்பம் தரும் வழி ஏதங்களையே அறிவார் என்பதும் அறியக் கிடக்கின்றன.

மதுரைப் புறஞ்சேரியருகில் பாணருடன் சேர்ந்து கோவலன் யாழ் வாசித்து மகிழ்ந்த பிறகு அவர்களை வழி கேட்டான் என்ற குறிப்பு உள்ளது. அச்சமயத்தில கவுந்தியடிகளும் கண்ணகியும் அங்கேயே இருந்தனர். ஆனால் அந்நிகழ்ச்சியைக் கவுந்தியடிகள் வெறுத்ததாகவோ, விரும்பியதாகவோ எவ்விதக் குறிப்பும் இல்லை. இசை பற்றிய கவுந்தியடிகளின் கருத்தை அறிய இயலவில்லை. இந் நிகழச்சியாலும் கவுந்தியடிகளுக்கு மதுரைக்குரிய வழி நன்கு தெரியாது என்பது வலுப்பெறுகிறது.

மதுரைப் புறஞ்சிறைப் பொழில் கவுந்தி ஐயை கொள்கையில் இருந்த காலத்துக் கோவலன் சென்று வணங்கி

*“நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி*
*நறுமலர் மேனி நடுங்குதுய ரெய்த*
*அறியாத் தேயத் தாரிடை யுழந்த*
*சிறுமை யுற்றேன் செய்தவத் தீர்யான்*
*தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்*
*கென்னிலை யுணர்த்தி யான்வருங் காறும்*
*பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்*
*ஏதமுண்டோ அடிகள் ஈங்கு”* (*சிலம்பு, ஊர்காண்*)

என்று வினவினான்.

பழைய வினையை அனுபவிக்கும்போது கற்றவர்கள் வருந்த மாட்டார்கள் எனக் கவுந்தியடிகள் கூறிவிட்டு, பெண்டிரும் உண்டியுமே இன்பம் என்று காமஞ் சார்பாகக் காதலில் உழல்பவர்கள் இடும்பை எய்துவது இயல்பு எனக்கூறி, இராமன் வாழ்க்கையையும், நளன் வாழ்க்கையையும் ஒப்பிட்டு அவர்களைப் போல் அல்லாமல் மனைவியோடு கோவலன் இருப்பதால், அவன் தொல்லை பெரிதில்லை என்று ஆறுதல் கூறுகிறார்.

நொந்த மனதிற்கு இவ்வாறு கூறுதல் தக்கதும் ஆறுதலுமாம். ஆனால் கோவலன் முன்வாழ்க்கையை எண்ணினால் அவனுக்கு தக்க இழப்புரையாகும். ஒரு சமயம் கவுந்தியடிகள் கோவலினின் முன்வாழ்க்கையை அறிந்திருப்பாராயின், அவர்களோடு புறப்பட்டிருப்பாரா என்பது ஐயத்திற்குரியது. ஆழ்ந்து சிந்திக்குபோது கவுந்தியடிகள் யாருடைய தனிவாழ்க்கையைப் பற்றியும் தாம்கேட்டு அறிந்து கொள்வேண்டும் என்ற ஆசை அற்றவரோ என எண்ணத் தோன்றுகிறது. துன்புறுவோர்க்கு நலஞ்செய்ய இக் கொள்கை மிக இன்றியமையாதது போலும்.

கவுந்தியடிகள் மிகப் பொறுமையுடையவர். மதுரையின் பெருமையையம், பாண்டியனின் கொற்றத்தையும் மாதவத் தாட்டியிடம் கோவலன் கூறினான். அந்நேரத்தில் மாடலன் அங்கு வந்தான். கோவலனின் முன்னைய வாழ்க்கையைப் பேசினான். அப்பொழுது கோவலன் தான் கண்ட கனவை அவர்களிடம் குறிப்பிட்டான். அதைக்கேட்ட இருவரும் புறஞ்சிறையில் அறத்துறை மாக்கள் அல்லாதார் பொருந்துவது பிழையானது என்றும், வணிகர் கோவலனை விரும்பி வரவேற்பர் என்றும கூறி, மாலைக்குள் காதலி கண்ணகியுடன் நகருள் செல்லுமாறு மாதவத்தாட்டியும மாமறை முதல்வனும் கூறினார்கள். அந்நேரத்தில் ஆயர் முதுமகள் மாதரி என்பாள், கவுந்தியடிகளைக் கண்டு அடி தொழுதாள். கவுந்தியடிகளின் எண்ணத்தில மாதரியுடன் கண்ணகியை இருத்தலாம் எனத்தோன்றியது. அவளிடம் கண்ணகியின் பெருமைகளை எடுத்துச் சொல்லி அடிகள் அடைக்கலப்படுத்தினார். அவள் மனங்கொள்ளுமாறு தவமுடையவர்கள் தரும் அடைக்கலப்பொருள் சிறிதானாலும் மிக்க பேரின்பத்தைத் தரும் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டி மாதரியை மனங்கொள்ள வைத்தார். ஆதனால் அவருடைய பொறுப்பு உணர்ச்சி வெளியாகின்றது.

மாடலன், கோவலனுக்கு மாதவியிடத்துப் பிறந்த மணிமேகலையைப் பற்றிக் கூறியதைக் கவுந்தியடிகள் கேட்டுக் கொண்டிருந்தார். அத்துடன் கோவலன் சொல்லிய கனவிலும் மணிமேகலை, மாதவி குறிப்புகள் வந்தன. ஆயினும் கவுந்தியடிகள் அவர்களைப் பற்றிச் சிறிதும் அறிந்து கொள்ள முயலவில்லை எனத் தெரிகிறது. கோவலன் கூறிய கனா அடிகளின் உள்ளத்தில ஏதோ ஒருவிதமான எழுச்சியை உண்டாக்கியிருக்க வேண்டும். கனாப் பற்றி எதுவும் கூறாமல் அவர்கள் இருவருரையும் மிக விரைவில் புறஞ்சிறையில் இருக்கக்கூடாது என அனுப்ப விரும்புவதும் அவர்காட்டும் பரபரப்பும் அவருக்குத் தீமை வரும் என்ற உணர்வு ஏற்பட்டுத்தான் அவ்வாறு செய்தாரோ எனத் தோன்றுகிறது. ஆனால் "கண்டறி கவுநதி"என இளங்கோவடிகள் சொல்லியிருப்பதனால் அவருக்கு எதிர் காலத்தை உணர்கின்ற ஆற்றல் இல்லையென்றே கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ளவில்லையாயின் கவுந்தியடிகள் தொல்லை வரும்போது அஞ்சிப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்புகிறார் எனக்கருதியாதல் வேண்டும்.

மாதரியைக் கண்டதும் அவளுடைய இனத்தார் வாழ்க்கை கொடுமையுடையதில்லை என்றும மாதரியைத் தீதிலள், செவ்வியள்; அளியள்; முதுமகள் என்றும் கவுந்திஅடிகள் மனத்தில் நினைப்பவை கவனிக்கத் தக்கவை. முன் அறியாத ஒருத்தியை இவ்வாறு புகழ்ந்து நலனுரைப்பது எவ்வாறு என்ற ஐயம் எழும். தோற்றத்தை வைத்து உடனே அபிப்பிராயம் கொள்பவர் இவர் என்பது இதனாலும் வலுப்பெறுகிறது. மேலும் கண்ணகியை ஏற்றுக்கொள்வேண்டும் என்பதனால் புகழ்கிறாரோ என்ற ஐயமும் எழலாம்.

மாதரியிடம் கோவலனின் பெற்றோர் பெருமையையும், அவனுக்கு அகனகரில் கிடைக்கக்கூடிய வரவேற்பு இவ்வாறு இருக்கு மென்பதையும் கவுந்தியடிகள் கூறி இடைக்குல மடந்தையிடம் அடைக்கலம் தருகிறார். இவை எப்படிக் கவுந்தியடிகட்குத் தெரியும்? வரவேற்புத் குறித்துக் கூறுவது இவர் ஊகமா? அடைக்கலப் பொருளை எவ்வாறு பேண வேண்டும் எனக் கூறுவது அவரது தாய்மை உணர்ச்சியைக் காட்டும்.

> *"மங்கல மடந்தையை தன்னீ ராட்டிச்*
> *செங்கயல் நெடுங்கண் அஞ்சனத் தீட்டி*
> *தேமென் கூந்தல் சின்மலர் பெய்து*
> *தூமடி உடீமத் தொல்லோர் சிறப்பின்*
> *ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்*
> *தாயும் நீயே யாகித் தாங்கு"* (*சிலம்பு, அடைக்கல...*)

என அடிகள் கூறுவது ஏதோ ஒரு சிறு குழந்தையைப் பேணிப் பாதுகாப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது. கண்ணகியின் தியாக உணர்வைத் "தன் துயர் காணாத் தகைசால்பூங்கோடி" எனப் பேசுவது கவனித்தற்குரியது. கண்ணகியுடன் வந்த அடிகளாதலின் கண்ணகி துன்பத்தை எவ்வாறு பொறுத்துவந்தாள் என்பதனை இவர் கூற்றிலிருந்து நாம் அறியலாம்.

கண்ணகியின் கற்பை எடுத்துக் காட்டி அவளையே தெய்வம் என்று சுட்டுவது ஆராய்வதற்குரியது. பத்தினிப் பெண்டிர் உள்ள நாட்டில் "வானம் பொய்யாது; வளம் பிழைப்பறியாது; நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது" எனக் கவுந்திமாதரியிடம் கூறுகிறார். அடைக்கலப் பொருள் சிறியதில்லை; மிகப்பெரியது; உயர்ந்தது என்பதை மாதரியின் உள்ளத்தில் படிய வைக்கவேண்டும் என்பதும் கவுந்தியடிகளின் நோக்கமாகும்.

சாரணரிடம், "அருகர் அறவன் அறிவோர்க் கல்லது என் இருகையும் கூடி ஒரு வழி குவியா" என்றும், "காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு நாமமல்லது நவிலாது என்நா" என்றும் கூறிய அம்மையார், "கற்புக் கடம் பூண்ட இத்தெய்வ மல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்" எனக்கூறுவது வியப்பை ஊட்டுகிறது. அதனாலும் அவ்வாறு எண்ணியிருந்த கவுநதியடிகளையே உளமாற்றம் செய்கின்றவாறு கண்ணகியின் தியாக உணர்வும் கற்புத் திணமையும் இந்தன எனக் கொள்வோமாயின் வியப்பு நீங்கி கவுந்தியடிகளோடு நாமும் கண்ணகியை வழிபடத் தொடங்கி விடுவோம். கவுந்தியடிகள் தந்த கடைசிச் சான்றிதழ் இது. கண்ணகியை விட்டுப் பிரியும் போது கவுந்தியடிகள் அவளைத் தெய்வமாகவே கருதிப் பிரிகிறார். தெய்வமென எண்ணியதால்தான் குழந்தைக்குச் செய்வது போன்றே தெய்வ வழிபாடுகளை வளர்ந்த பெண்ணுக்குச் செய்யுமாறு வேண்டியுள்ளார் போலும். குழந்தையும் தெய்வம் கொண்டாடும் பக்கமன்றோ?.

கோவலன் கொலையுண்ட பின் கண்ணகியை வானுலகிற்கு அழைத்துப் போனான் என்ற செய்தி கவுந்தியடிகள் காதுகட்கு எட்டிற்று. உள்ளம் உருகிற்று; உறுத்திற்று; இறந்தபிறகு யார் காரணம்? அடிகள் எண்ணினார் ; எண்ணி எண்ணி ஏங்கினார். அறிவு அலகியது. கோவலன் கண்ணகியரைப் பேணாமை, நெறிப்படுத்தாமை தம் குற்றமோ என உள்ளங் குத்திற்று. ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் கண்டாலன்றோ உயிருக்குத் தீது இல்லை. செய்தியைக் கேட்டதும் கவுந்தியடிகட்குச் சீற்றம் வந்தது உண்மை. ஆனால் கொடுங்கோலைச் செங்கோலாக்கி நிமிர்த்திய பாண்டியனின் உயிர் அச்சீற்றத்தைத் தாங்கிக் கவுந்தியடிகட்குப் 'பொறைசாலாட்டி' என்ற பட்டத்தை வழங்கியது. எனவே அடிகளின் சிந்தனை அவ்விருவர் இறப்பிற்கு அவர்கள் வினையோடு தாமும் காரணம் எனச் சீர்படுத்தியது. தக்க முறையில் தக்கார்பால் அடைக்கலப் படுத்த வில்லையோ? தக்கார்பால் ஒப்படைத் திருப்பின் இது நிகழுமா? அல்லது மறையவன் கூறிய வழியில் சென்றிருந்தால் துன்பமிருக்காதோ?

மாதரி கோவனுடன் கண்ணகியையும் அழைத்துக் கொண்டு கடைத் தெருவிற்குச் சென்றிருக்கலாமே! கோவலனுக்கு துணையாக யாராவது ஒருவரை வழிகாட்டியாக ஆற்றுபடுத்தி யிருக்கலாமே! கண்ணகியின் நலம் கோவலனின் நலத்தையொட்டியது என்பதை மாதரியும் கவுந்தியடிகளும் அறிந்தவர்கள் அல்லவா! கோவலன் இல்லையானால் கண்ணகியைக் கற்புடைச் செல்வியாக, பொற்புடைத் தெய்வமாக எவ்வாறு அடிகளால் போற்ற முடியும்? எனவே பல கோணங்களில் அடிகள் மனம் ஆராய்நிருக்க வேண்டும். மனச் சான்று

மருட்டியிருக்க வேண்டும். பெரியோர்க்குப் பிறர் கூற வேண்டியதில்லை. தம் உள்ளங்களே தாண்டவ மிட்டுச் சுட்டி உறுத்தும். மருண்ட கவுந்தியின் மனம் இருண்டது. சோறின்றி உடல் சுருண்டது. சுருங்கிச் சுருங்கி உயிர் உடலை விட்டு உயர்பதிப் பெயர்ந்தது. இளங்கோவின் இழைப்பில் இவ்வரிகளைப் பாருங்கள்.

"தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோல் நீள் நில வேந்தன்
போகுயிர் தாங்காப் பொறைசா லாட்டி
என்னோடு இவர்வினை யுறுத்த தோஎன
உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்த்ததும்" (சிலம்பு)

இவ்வரிகளை மாடலன் செங்குட்டுவன்பாற் சொல்வதாக இளங்கோவடிகள் அமைத்துள்ளார். தம்மிடம் வந்த மாசினைத் தாமே தூய்மைப் படுத்தத் தம்மையே வருந்திக்கொள்ளும் மனச்சான்றை இளங்கோவடிகள் மிக அருமையாக இழைத்துள்ளார்.

எனவே அடைக்கலம் தந்து பிரிந்துவிட்டாலும் அவர்கள் வாழ்க்கையைக் கவனித்துக் கொண்டே கவுந்தியடிகள் இருந்தார் என்பது தெரிகிறது. மேலும் அடிகள் பொறுப்புணர்ச்சியும், தெளிந்த மனம், மனச் சான்றின் உறுதியும் நன்கு வெளிப்படுகின்றன.

கவுந்தியடிகள் இளங்கோவடிகளால் உண்டாக்கப்பட்ட கற்பனைப் பாத்திரம் என்று சொல்வார் உண்டு. அவ்வாறு பார்ப்போமேயானால், எல்லாமே கற்பனைகளாக அமைந்து விடும். இப்பாத்திரம் இல்லையாயினும், கதையில் பெரும் மாற்றம் ஒன்றும் விளையாது. ஆனாலும் கதைத்தலைவன், தலைவியரின் பண்பு நலன்களையும், போக்கையும் அறிந்து கொள்ள இவர் நன்கு உதவுகிறார்.

கவுந்தியடிகள் இணைந்ததால் கோவலன் கண்ணகி வழிநெடுகச் செல்லும்போது குடும்பக் கூட்டு வாழ்க்கை நடத்த இயலாது போயிற்று, என்று குறை கூறுவார் உண்டு. கூட்டு வாழ்க்கை இருக்கலாம். கூடி மகிழ வாய்ப்பில்லை யாயினும் கோவலனுடன் தங்கி வாழ்வதே மகிழ்ச்சி யூட்டவல்லது என்பதனைக் கண்ணகி உணர்கிறவாறு செய்வதற்காகவே கவுந்தியடிகள் வருகை கோவலனுக்கும் கண்ணகிக்கும் மகிழ்ச்சி யூட்டியதே யல்லாமல் துன்பந் தரவில்லை. உடல் கூடிக் கிடப்பதே குடும்பம் என்பது இலக்கணமன்று.

கோவலன் கண்ணகி ஊடலைத் தணிவிக்கும் "வாயிலா" க் கவுந்தியடிகள் காப்பியத்தில் வருகிறார் என்ற ஒரு கருத்து உள்ளது. 'அறவோர்' வாயிலாக வரலாம் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால் கண்ணகி கோவலனோடு ஊடல் கொண்டாள் என்பதற்கு உரிய மனச் சூழ்நிலை இங்கு இல்லை. துன்புற்று வரும் கோவலனை அணைத்துக் கொள்ள வரும் மனப்போக்கே கண்ணகியின்பால் இருந்தது. ஊடியிருந்தாலும் கோவலன் பணிந்திருப்பான்

*போல் தோன்றுகிறதே யல்லாமல் எதிர்த்து நின்றிருப்பான் எனச் சொல்லுவதற்கில்லை.*

*ஊடலில் தோற்று பெருமகிழ்வே எய்திருப்பான் எனக் கூறக் கூடிய சூழ்நிலையே அமைந்துள்ளது. மேலும் கண்ணகி தன் வாழ்வில் ஊடலே கொள்ளவில்லை என்பது என் கருத்து. இளங்கோவடிகளின் கண்ணகி மாறா உள்ளங் கொண்டவள் என்பதனை இவ்விடத்தில் நினைப்பூட்ட விரும்புகிறேன். இளங்கோ ஊடல் என்ற சொல்லைக் கண்ணகியுடன் இணைத்துச் சிலம்பில் எங்கும் பேசவில்லை என்பது எல்லோரும் அறிந்த செய்தி. எனவே கவுந்தியடிகள் கண்ணகி கோவலனின் ஊடல் தீர்க்க அமைக்கப்பட்ட பாத்திரம் என்று சொல்வது ஏற்றத்தக்கதாகத் தோன்றவில்லை.*

*கோவலன் கண்ணகி என்ற இருவர் மனப்பாங்கை விளக்கக் கவுந்தியடிகள் உதவுகின்றார் என்ற கருத்துண்டு. மூவர் செல்லும் வழிச் செலவை நோக்கினால் இக்கருத்தை அப்படியே என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிறிய குற்றத்தையும் மிகப் பெரிதாகக் காணும் கவுந்தியடிகளின் கண்ணுக்கு இவர்களிடம் எவ்விதக் குற்றமும் காண முடியவில்லையே! கவுந்தியடிகள் மனப்பாங்கு இவர்கள் வழியாக வெளியாகிறது, என்று சொல்லலாமேயல்லாமல், இவர்கள் மனப்பாங்கை அடிகள் வழி விளங்கிக் கொள்கிறோம் என ஓரளவு கூற இயலும். கவுந்தியடிகள் மனப் பாங்கு இவர்களுடன் தொடர்பு கொண்டபின் விரிவு பெற்று இருக்கிறது என்று வேண்டுமானால் கூறலாம். ஒருவரோடு ஒருவர் பழகும்போது இருவர் மனப்போக்கும் வெளியாகுவது இயல்பாவதேயன்றி ஒருவருடைய மனப்பாங்கு மட்டும் புலனாகிறது எனச் சொல்வது பொருத்தமற்றது. மூவரும் பழகுவதைப் பார்த்த நம் மூவரின் மனப் பாங்குகளையும் அறிகிறோமேயன்றிக் கோவலன் கண்ணகி மனப்பாங்கு மட்டும் விளக்கம் பெறுகின்றது எனக் கூற இயலாது.*

*கவுந்தியடிகள் சமண மதத்தைக் கூறவே காப்பியத்தில் வருகிறார் என்ற கொள்கை சிலரால் சொல்லப்படுகிறது. காப்பியப் போக்கில இளங்கோவை ஆராய்ந்தால், கவுந்தியடிகளைச் சமண மதத் தலைவராக இளங்கோ எங்கும் கூறவில்லை. கவுந்தியடிகள் சமண மதத்தில் சிறந்து நின்றவர் என்றும் கூறவில்லை. சமணமதத்தைச் சிறப்பாகப் பேசுகின்றவர்கள் காப்பியத்தில் தோன்றும் சாரணர்களே என்பது உண்மை. சமண மதத்தார் சினம் கொள்வதை ஏற்றுக்கொள்கின்றனரா? விருப்பு வெறுப்பு கவுந்தியடிகளிடம் உண்டா? கவுந்தியடிகளை விடக் கண்ணகியையன்றோ இளங்கோ புகழ்கிறார். துறவைமேற்கொள்ளும் சமண நெறி இல்லறத்தை முதன்மையாகக் கொள்வதில்லையே? அவ்வறிருக்க இல்லறநெறியில் செல்லும் பெண்ணைச் சமணத் துறவி போற்றுவாரா?*

*செங்குட்டுவனின் வடநாட்டுப் பயணத்தைவிட மூவரின் மதுரைப் பயணம் நீளச் சொல்லப்படுகிறது. இதன் வழியாகக் கண்ணகியின் மன வளர்ச்சியை இளங்கோ அடிகள் கவுந்தியடிகளின் வாயிலாகக் காட்டுகிறார். வழிநடைப்பயணத்திற்கு மட்டு மல்லாமல் கதையின் விளக்கத்திற்கு கவுந்தியடிகள் உதவுகிறார் என்பது ஏற்கத் தக்கதே.*

கோவலன் மீது நம் பரிவு கொள்கின்றவாறு அவன்பால் அமைந்த நல்லியல்புகளை விளக்கவும் கவுநதியடிகள் உதவுகிறார். கோவலன் தன் முன் வாழ்க்கை குறித்து வருந்தி அடிகளிடம் உரையாடும் இடங்களெல்லாம் அவன் மேல் நமக்கு அன்பை ஊட்டுகின்றன. புகாரில் ஏற்பட்டவெறுப்பு படிப்படியாக நம் மனத்தில் இந் நிகழ்ச்சிகளால் மறைந்து வருகின்றது. மாடலன் கோவலனைப் புகழும்பொது முழுமையாக நாம் ஏற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான மனப் பாங்கைக் கவுநதியிடிகளின் வரவும் நமக்கு ஊட்டுகிறது.

கவுந்தியடிகள் கோவலன் கண்ணகியைப்போல இறுதியில் உயர்பதிக்குச் சென்றதாகவே இளங்கோ குறிப்பு இருக்கின்றது. கவுந்தியடிகள் மீண்டும் பிறக்கவில்லை. இறந்தவர்களுள் மீண்டும் பிறந்தவர்கள் பட்டியலை மாடலன் தருகின்ற காலத்துக் கவுந்தியடிகளின் பெயரை இணைக்கவில்லை. மாதரி, கண்ணகியின் தாய், கோவலனின் தாய் மூவரும் பிறந்து உள்ளதாகக் கூறி,

> "*நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்*
> *அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்*
> *புதுவதன்றே*" (*சிலம்பு.வரந்தரு*)

என்று மாடலன் பேசுகின்றான்.

> "*குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி*
> *கணமேயும் காத்தல் அரிது*" (*குறள், 29*)

அன்றோ வெகுளி நீங்கிக் குணமென்னும் குன்றேறி நின்று நற்றிறம் புரிந்த கவுந்தி பொற்படி எய்தினார் என்பது இனிது விளங்குகின்றதன்றோ?

## அலகு - 4

## 4. அறிவியல் பார்வை

முனைவர் வா.செ.குழந்தைசாமி

மனித முயற்சியின் முழுமையையும் ஒன்றுபடுத்திக் கூறுவதானால் அதன் முக்கியமான நோக்கம் உண்மை காண்பதுதான். இந்த உண்மையைக் காணும் பணியில் தான் தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயம் ஈடுபட்டு வந்திருக்கிறது. அறிவியலாயினும், தத்துவமாயினும், சமயமாயினும் அவற்றின் அடிப்படை இலக்கு, உண்மை என்னும் இடத்தை அடைவதுதான், பொதுவாக உண்மையைக் காண்பதற்கு விருப்பு, வெறுப்பு, பற்று நம்பிக்கை ஆகியன,அவை எவ்வளவு உயர்ந்தவையாக இருந்தாலும் தடைகளே ஆகும். தேசப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, சமயப்பற்றுப் போன்றவை உயர்ந்த பண்புகளாகக் கருத்தப்படலாம் ; என்றாலும் தனது தேசம் பற்றி, தனது மொழி பற்றி தனது இனம் பற்றி உண்மையைக் காண்பதற்கு அவற்றின் மீது இருக்கும் பற்று ஒரு திரை போல நின்று பார்வையை மறைக்கலாம், மறைக்காவிட்டாலும் மங்கச் செய்யலாம். திரைகள் இல்லாத வாழ்க்கை சாதாரண மனிதனுக்கு இயன்ற ஒன்று அல்ல. உண்மையைக் காணும் ஒளி பெற்றவன் தான் அறிஞன், ஆய்வாளன் என்ற தலைப்புக்குத் தகுதி பெற்றவன். இயற்கையின் நிகழ்வுகளில் வாழ்வியலில் உண்மையைக் காண்பதற்காக இன்றைய ஆய்வுலகம் பயன்படுத்தும் நெறிமுறையை அறிவியல் அணுகுமுறை என்று கூறலாம். இது ஏதோ அறிவியில் அணுகுமுறை என்று கூறலாம். இது ஏதோ அறிவியல் துறைக்கு மட்டும் உரித்தானது அன்று. அறிவியல் அறிஞர் மட்டுமே பயன்படுத்தக் கூடியதும் அன்று. அறிவியல் வேறு; அறிவியல் அணுகுமுறை வேறு. அறிவியலைக் கற்றவர்கள் எத்தனையோ பேர் அறிவியல் அணுகுமுறையை அறிந்திராதவர்களாக, அறிவியல் அணுகுமுறை இல்லாதவர்களாக இருக்கலாம். அறிவியல் அணுகுமுறை உள்ளவர்களாக இருக்கலாம். பொதுவாக உண்மையைக் காண்பதில் ஒரு மனிதன் தனது சிந்தனைக்கு, அறிவிற்கு முழு உரிமையும் கொடுத்து, அதன் அடிப்படையில் அமைந்த முடிவுகள் எப்படிப்பட்டவனாக இருப்பினும், விருப்பு வெறுப்பு இன்றி அவற்றை ஏற்கும் மனநிலை பெற்று இருந்தால் அதை அறிவியல் பார்வை என்கிறோம். அதன் வழி அமைந்த செய் முறையை அறிவியல் அணுகுமுறை என்று குறிப்பிடுகிறோம். "அறிவியல் முறை" அல்லது "அறிவியல் ஆய்வு முறை" (Scientific Method) என்பது வரையறுக்கப்பட்டு இடம் பெற்றது 17 - வது நூற்றாண்டில் இருந்துதான். அந்தக்காலப் பகுதியிலிருந்து உண்மை காண்பதற்கு அறிவியல் ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டதோடு, அதற்குக் கிட்டத்தட்ட இலக்கணமும் வகுக்கப் பட்டது. இன்று அது ஓர் ஆய்வுக்கருவியாகப் பலராலும் பயன்படுத்தப்படுகிறது. பழைய காலத்தில் இருந்த மேதைகள் பலர் இயற்கையிலேயே அறிவியல் அணுகு முறையைப் பயன்படுத்தும் சிந்தனை வளமும், தெளிவும் பெற்றிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த கால எல்லையைத் தாண்டி, மரபுகளையும் மீறி எதிர்காலத்திற்குள்ளும் ஊடுருவும் திறனோடு பிரச்சினைகளை அவர்களால் அணுக முடிந்தது. இந்தக் கூறுபாடு வள்ளுவர் குறளில் பரவி இருப்பதைக் காணலாம்.

*"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினக்கப் படும்"* (169)

என்கிறார் வள்ளுவர். சில சமயங்களில் நல்லவர்கள் நலிகிறார்கள். அல்லவர்கள் பலர், இன்பத்தோடு ஆடம்பர வாழ்வு வாழ்கிறர்கள். நாம் இன்றும் அதைப் பார்க்கிறோம் ; கடந்த காலத்தில் பார்த்திக்கிறோம் ; நாளைய நடைமுறையிலும் இது இருக்கும். பொதுவாக நன்மை சிறப்படைய வேண்டும். தீமை புறக்கணிக்கப்பட வேண்டும். நல்லவர்கள் இன்புற வேண்டும்.; அல்லவர்கள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் காட்சி ஆங்காங்கு மாறாக இருக்கிறது; இது ஏன் என்ற கேள்வியை வள்ளுவர் எழுப்புகிறார். வள்ளுவர் வாழ்ந்த கால கட்டத்தில் அவரது நம்பிக்கைகளின் பின்னணியில் இப்படியொரு கேள்வியை எழுப்பி இருப்பதே வியபிற்குரியது. வள்ளுவர் கடவுள் நம்பிக்கை உள்ளவர். முன்பிறவியை நம்புகிறார். பழைய வினைகளின் பயனை நம்புகிறார். முன்பிறவி, இப்பிறவி என உயிர் பல பிறவிகள் எடுக்குந்தன்மை உடையது என நம்புகிறார். சொர்க்கம் நரகங்களைப் பற்றிப் பேசுகிறார். எனவே இப்பொழுது நல்லவனாயிருப்பவன் நலிவானாயின் அவன் சென்ற பிறவியில் தீவினைகள் செய்திருப்பான் ; பயனாக இன்பமாக வாழ்கிறான் என்று கூறலாம். எனவே மிக எளிதாக இப்பிறவியில் நல்லவர்களாக இருந்தும் நலிந்தவர்களாக இருப்பதற்கு முந்தைய பிறவியில் செய்த தீமையும், இப்பிறவியல் தீயவர்களாக இருந்தும் இன்பத்தை அனுபவிப்பதற்கு அவர்கள் முன் பிறவியில் செய்த நன்மையும் காரணம் என்று கூறிவிடலாம். முன்பிறவி இருந்ததா? இருந்ததெனில் குறிப்பிட்ட ஒரு நபர் என்னவாக இருந்தார் ; என்ன செய்தார் என்று யாரும் நிரூபிக்க முடியாது; எனவே இதுபோன்ற வாதங்களை யாரும் ஆதாரத்தோடு மறுக்க முடியாது. ஆனால் வள்ளுவர் அதைச் செய்யவில்லை. "நினைக்கப்படும்" அதாவது ஆராயப்பட் வேண்டியது என்கிறார். கடவுள், விதி, பல பிறவிகள், முன் பிறவியில் செய்த வினையீன பயன்பகள், சொர்க்கம், நரகம் ஆகிய அனைத்தின அடிப்படையிலும் விளக்க முடியாத சில கேள்விகள் இருக்கின்றன. சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றிற்கு விடை காண நமது இன்றைய கல்வியறிவு, மெய்யறிவு போதாது. நாம் இன்னும் ஆய வேண்டும் என்கிறார். வள்ளுவர் அணுகுமுறையைத் தெளிவு படுத்துவதற்கு இதைவிட ஏற்ற ஒரு குறளைக் காண்பது அரிது. ஏனோ இது அவ்வளவாகப் பேசப்படுவது இல்லை.

பொதுவாக அன்றாட வாழ்வில் மனிதனுக்குத் தன்னுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அவனது வாழ்வின் வசதிக்கும் வளத்திற்கும் அவனுடைய அறிவு வளமும், சிந்தனையும், முயற்சியும் அவன் செய்யும் செயலும் தான் அடிப்படை என்பதுஇன்றைய உலகம். பெரும்பாலும் ஒப்புக் கொண்ட ஒன்று. பண்டைக் காலத்தில் இது பழக்கமும் அன்று. பரவலாக இடம் பெற்ற பார்வையும் அன்று. அறிவு பற்றிக் கூறவந்த வள்ளுவர்,

*"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனும் இலர்"* (430)

என்கிறார். "அறிவுடையார் எல்லாம் உடையார்," என்று அறுதியிட்டுக் கூறுகிறார். வள்ளுவர் வாழ்ந்த காலப்பகுதியில் இந்த அளவிற்கு அறிவைச் சிம்மாசனத்தில் ஏற்றியவரைக்காண்பது அரிது. இக்குறள் பற்றி நாம் மீண்டும் பேசுவோம்..

கீழ்க்கண்ட குறள்களில் அறிவியல் அணுகுமுறைக்கு வள்ளுவர் கிட்டத்தட்ட இலக்கணமே வகுக்கிறார்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (423)

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (355)

இவை மெய்யுணர்தல் பகுதியில் கூறப்பட்டாலும் அறிவியல் ஆய்வு முறைக்கு வகுத்த இலக்கணம் ஆகும். (It is a definition of scientific approach) எடுத்துக் கொண்ட பொருள் எதுவாயினும், கிட்டத்தட்ட மின் வெளிச்சம் போன்ற ஓர் அசாதாரண ஒளிக்கதிர் சேர்ந்த தெளிவோடு வள்ளுவர் அந்தப் பொருளை நோக்குவதுதான், அது பற்றி அவர் பேசுவது தான், அவரது கூற்றுகள் நிலை பெற்றனவாக அமைவதற்குக் காரணமாகும்.

வள்ளுவர் காலத்தில் சமயம் மனித வாழ்வில் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. அரசனும் கூடச் சமயத் தலைவர்களை மதித்துப் பெரும்பாலும் அவர்கள் வழிநின்று ஆட்சி செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தது. நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்க்கை நெறி அமைந்த சமுதாயத்தில் வாழ்ந்த வள்ளுவர், குறிப்பிட்ட சமயச் சார்புடைய எந்தக் கருத்தையும் கூறவில்லை. பொதுவாகக் கடவுள் வாழ்த்துக் கூறுகிறார். அதைத் தாண்டி வெளிப்படையாகக் கடவுள் கொள்கை பற்றிய வாதங்களில் அவர் ஈடுபடவில்லை. வள்ளுவர் கடவுள் நம்பிக்கை உடையவர். எனவே அவர் ஏதாவது ஒரு சமயத்தைச் சார்ந்தவராக இருந்திருக்க வேண்டுமென்று கொள்ளலாம். ஆனால் அவர் கடவுள் வாழ்த்தில் கூட, எல்லாம் வல்லது என்று இன்றும் நாம் ஒப்பும் ஒரு சக்தி என்ற அளவில் நின்றுதான் கூறினாரே அன்றி எந்தச் சமயத்தோடும் இணைத்துக் கூறக்கூடிய அடையாளமுள்ள கடவுள் கொள்கையை, தத்துவத்தை அவர் குறிப்பிடவில்லை. வள்ளுவர் எந்தச் சமயத்தவர் என்று இன்றும் அடையாளம் காணமுடியாத அளவுக்குப் பொதுவாகவே தமது கருத்துக்களைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். எப்படிப் பார்த்தாலும் இது அசாதாரணமான அணுகு முறையேயாகும்.

திரு.வி.க. "தமிழ் நூல்களில் பௌத்தம்" என்னும் தமது நூலில் "எனது சிற்றாராய்ச்சியில் திருக்குறள் சமண அறத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த பொது நூல் என்று விளங்கியிருக்கிறது" என்கிறார். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, "தமிழ்ச் சுடர் மணிகள்"எனும் நூலில் "கடவுள் வாழ்த்திலே வருகின்ற மலர்மிசை ஏகினான் முதலிய தெய்வப்

பெயர்களை நோக்கும்போது வள்ளுவரைச் சைன மதத்தைச் சார்ந்தவர் என்பதுதான் பொருத்தமாகும்” என்கிறார். திருக்குறளை நன்கு ஆராய்ந்த காஞ்சிபுரம் வச்சிரவேல் முதலியார் தக்க பல ஆதாரங்களைக் காட்டித் “திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே”என மெய்ப்பிக்க முயல்கிறார். மறைமலையடிகள் தமது ‘பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்’ எனும் நூலில் “பௌத்த சமணக் சமயக் குருக்கள்மார் இல்லறத்தை இகழ்ந்து துறவற்ததையே பெரிதும் கொண்டாடி நிற்பர். இவ்வுண்மை கண்டு தெய்வத் திருவள்ளுவர் அவர்தம் கொள்கையை மறுத்தற் பொருட்டே, இன்பத்தின் வழித்தாகிய இல்லறத்தை முன் வைத்து நூல் செய்தும், இல்லறத்தைச் தமிழ்ச் சான்றோர் வழக்குப் பற்றித் துறவறத்திலும் மிக்கெடுத்துக் கூறியதூஉமென்க” என்கிறார். அவர் சார்ந்த சமயம் எதுவாயினும் அதன் தாக்குதல் அடையாளம் தாம் காணும் அளவிற்கு நூலில் பிரதிபலிக்கவில்லை. அவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர் என்று நாம் கோடு காணும் அளவுக்குக்கூட அவர் இடந்தரவில்லை. எனவே சமயம்கடந்து நின்று தமது நூலை எழுதியிருக்கிறார் என்பதே இங்கு நாம் எண்ண வேண்டிய ஒன்றாகும்.

“*அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனும் இவர்*” (430)

என்ற குறள் பற்றி முன்னர் குறிப்பிட்டோம். இக்குறளை ஒரு நூலாகவே விரித்துரைக்கலாம். இதில அடங்கியிருக்கும் கருப்பொருள் பற்றி எண்ணும் பொழுதெல்லாம் வியப்பு மேலிடுகிறது. இதற்கு உரை கூற வந்த பரிமேலழகர் “செல்வங்கள் எல்லாம் அறிவால் படைக்கவும் காக்கவும் படுதலின் அஃது உடையாரை ‘எல்லாம் உடையார் என்றும், அவையெல்லாம் முன்னேயமைந்து கிடப்பினும் அழியாமற் காத்தற்கும், தெய்வத்தான் அழிந்துழிப்படைத்தற்கும் கருவியுடையரன்மையின் அஃதில்லாரை என்னுடையரேனும் இலர்’ என்றும் கூறினார் என விளக்குகிறார். அதாவது அறிவு உடையவர்கள் இயற்கைச் செல்வம் இல்லாத காலத்திலும் கல்வியறிவின் துணை கொண்டு வேண்டிய செல்வங்களைப் படைக்கும் திறன் பெற்றவர்கள் என்பது பொருள். இந்தக் கருத்தின் ஆழம் நம்மைப் பிரமிக்க வைக்கும் ஒன்று. இங்கு ஒரு சான்றுகூறுவது பொருந்தும். பொதுவாக நமக்கு எந்த விதமான பொருள் (Material) தேவைப்பட்டாலும் அதற்கு எற்ற இயற்கைத் தாதுப் பொருள் ஒன்றைத் தேடுகிறோம். இரும்பு வேண்டுமானால் மர்க்னடைட் (Magnetite) என்ற தாதுப் பொருளிலிருந்து எடுக்கிறோம். அதே போன்று அலுமினியம் வேண்டுமானால் பாக்சைட் (Bauxite) எனப்படும் தாதுப் பொருளிலிருந்து எடுக்கிறோம். இப்பொழுது விண்கலன்கள் வானவெளியில் செலுத்தப்படுகின்றன. அவை உறுதியானதாகவும் எடை குறைந்ததாகவும். மிக அதிக வெப்பத்தைத் தாங்கும் ஆற்றலும் ஒருங்கே இணைந்த செய்பொருள் ஒன்றைத் தரும் தாதுப்பொருளைத் தேடி நாம் சென்றால் இயற்கையில் அது எங்கும் கிடைக்காது. அப்படிப்பட்ட செய்பொருள் இன்று சோதனைச் சாலையில் உருவாக்கப்படுகிறது. அறிவின் வளர்ச்சி காரணமாகக் கல்வியறிவையே கருவியாகக் கொண்டு இல்லாத ஒரு செல்வத்தை மனிதன் படைக்கிறான். இது இருபதாம் நூற்றாண்டின் சாதனை.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அறிவின் ஆற்றல் இந்த நிலையை எட்டவில்லை. ஆனால் "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று வள்ளுவர் கூறியிருப்பதும், செல்வம் அழிந்தபோது படைக்கும் கருவியுடையார் அறிவுடையார் எனப் பரிமேலழகர் விளக்கம் கூறுவதும் எண்ணி, எண்ணி வியக்கத்தக்க ஒன்றாகும்.

1955 இலிருந்து 1970 வரையான 15 ஆண்டுக் காலப் பகுதியில் அமெரிக்காவில் தனி மனிதனின் சராசரி ஆண்டு வருவானம் 7500 டாலரிலிருந்து 11500 டாலராக உயர்ந்தது. அந்தக் காலப் பகுதியில் அவர்கள் புதிய கனிவளங்கள், எண்ணெய் ஊற்றுகள் எவற்றையும் தங்கள் நாட்டில் கண்டுபிடிக்கவில்லை. இந்த வளம் முழுவதும் ஆய்வின் அடிப்படையில் சோதனைச் சாலையில் அறிவின் துணை கொண்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஜப்பான் போன்ற நாட்டின் இன்றைய பொருளாதார வளம் அதன் இயற்கை வளத்தைப் பொறுத்தோ, நிலப்பரப்பைப் பொறுத்தோ, மக்கட் தொகையைப் பொறுத்ததோ அமைந்ததாகக் கூறுவதற்கில்லை. இவ்வனைத்திலும், அதனினும் பன்மடங்கு வசதி படைத்த நாடுகள், வறுமையில் வாடுகின்றன.

ஜப்பானின் முன்னேற்றத்திற்கு அதன் மக்கள் தரம், முக்கியமானதாகும். அத்தரத்தின், தகுதியின் தலையான கூறுபாடு அவர்கள் கல்வியும், அறிவியல் தொழில் நுட்பத்துறை மற்றும் அறிவுத் துறைகளில் அடைந்துள்ள வளர்ச்சியுமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் மானிடம் கல்வியுகத்தில் (Knowledge Era) கால் வைத்திருக்கின்றது. அதன் பாடமே "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பதுதான். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பேகன் (Bacon) உயர்ந்த சிந்தனையாளர். அவர் 'அறிவே ஆற்றல்' (Knowledge is Power) என்றார். அவருக்கு ஏறத்தாழ பதினாறு நூற்றாண்டுகட்கு முன்பே வள்ளுவர் "அறிவே அனைத்தும்" என்று கூறிச் சென்றிருக்கிறார்.

இதுபோலவே வள்ளுவர் ஒவ்வொரு துறையிலும் தலைசிறந்த அறிவியல் பார்வையோடு பிரச்சனைகளை அணுகியிருக்கிறார். எல்லோராலும் அடிக்கடி கூறப்படும் குறள் ;

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (517)

என்பதாகும். வினை செய்வதற்குப் பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுப்பது, தேர்ந்தெடுத்தபின் அவரது பொறுப்பை வரையறுப்பது, அன்றும் சரி இன்றும் சரி ஒரு கடினமான பணி. ஆனால் பொறுப்பில்உள்ள ஒருவர் கட்டாயம் செய்ய வேண்டிய பணி. இத்துறையில் வள்ளுவரின் கருத்துகள் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்ததாகக் கூறப்படும் இன்றைய Management துறை நிபுணர்கள்கூட எண்ணி வியக்கத்தகுந்த இயல்பு உடையன ஆகும்.

*“அறந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்*
*சிறந்தானென்று ஏவற்பாற் றன்று”* (515)

என்கிறார். ஒரு பணியைச் செய்யத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவனுக்கு முதலில் அதைச் செய்வதற்குத் தேவையான வழிவகைகளைக் காணும் அறிவு இருக்க வேண்டும். அறிவு மட்டுமே போதுமானதன்று. செயற்படுங்கால் வரும் துன்பங்கள் பொறுக்கும ஆற்றுதலும் தேவை. மலை என்றால்ஏற வேண்டும். நதி என்றால் நீந்த வேண்டும். காடு என்றால் கடக்க வேண்டும். அந்த முயற்சி இல்லாதவர் அறிவுடையார் ஆயினும் வினைசெய்வதற்கு வேண்டப்படாதவர்கள். அறிவும் ஆற்றலும் உடையவர்கள்பால் ஒரு வினையை ஒப்படைக்க வேண்டும் என்று கூற வந்த வள்ளுவர் யாரிடம் கொடுக்கக் கூடாது என்று எச்சரிக்கிறார். கொடுக்கக் கூடாதவர்கள் எத்தனையோ வகையினர் இருக்கலாம். ஆனால் அவர் கூறும்பொழுது.

“சிறந்தானென்று ஏவற்பாற் றன்று” என்கிறார். அதற்குப் பொருள் கூறவந்த பரிமேலழகர் வினை,

*“நம்மாட்டு அன்பு உடைய னென்று, பிறனொருவனை*
*ஏவும் இயல்புடைத்தன்று”*

என்கிறார். சற்று விளங்கும் மொழியில் கூற வேண்டுமானால், நமக்கு வேண்டியவர்கள் என்பதற்காக ஒரு பணியைக் கொடுக்கக் கூடாது என்கிறார். வள்ளுவர் காலத்திலேயே கூட நமக்கு வேண்டியவர்கள் என்பதற்காக ஒருவருக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று கூற வேண்டிய தேவை இருந்தது என்பதை எண்ணும்பொழுது வேண்டியவர்கட்கு வேலை கொடுக்கும் பழக்கம் நீங்கா நிழல் போல நீளத் தொடர்ந்து வரும் குறைபாடு என்று தோன்றுகிறது. வள்ளுவர் காலத்தைவிட இன்றைய நிலையில் இக்குறள் மிகவும் தேவைப்படுவதாக இருக்கிறது என்பது நாம் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒன்று. மேலும் அவர் :

*“எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்*
*வேறாகும் மாந்தர் பலர்”* (514)

என்கிறார். எவ்வளவு கவனமாக ஆராய்ந்தும், எவ்வளவு விழிப்புடன் அளவிட்டும், தெளிந்து, தேர்ந்தும் கொடுத்த வினையைச் செய்யும் நிலையில் மாறுபடும் மனநிலையில் உள்ளவர்களும் இருக்கிறார்கள். எனவே தேர்ந்த பின்னும் அவர்கள் ஆரம்ப காலத்தில் கவனிக்கப் படவேண்டியவர்கள். மேலும் தெளிந்த பின்னர்தான் அவர்கள்பால் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்கிறார்.

முறையாக ஆய்ந்து, தெளிந்து, ஒருவருக்குப் பொறுப்பைக் கொடுத்த பின்னர் அவர் பணியில் தலையிடக் கூடாது. அவருக்கு அவ்வப்போது முடிவு எடுக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பது நிர்வாக இயல் வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய தத்துவம். வள்ளுவர் இக்கருத்தை மிகத் தெளிவாகவும்

*உறுதியாகவும் ஒருபடி உயர்ந்த நிலையில் சென்றும், அந்தப் பணிக்கு அவரையே உரிமையுடையவராகச் செய்ய வேண்டும் என்கிறார்.*

*"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை*
*அதற்குரிய னாகச் செயல்"* (518)

*தெரிந்து வினையாடல் என்ற தலைப்பில் அவர் ஒரு வினைக்கு ஏற்றவரைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, அவரது பொறுப்பை நிர்ணயிப்பது வரை முக்கியமானவையாகக் கருதப்படும் அடிப்படைக் கூறுபாடுகள் அனைத்தையும் சில குறள்களில் தெளிவாகக் கூறுகிறார். இத்தலைப்புகளிலெல்லாம் அவரது அணுகுமுறை அறிவியல் பார்வை வளர்ந்துள்ள இக்காலச் சூழ்நிலையொடு ஒப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.*

*அறம், பொருள், இன்பம், வீடு இவை நான்கில் அறம், பொருள், இன்பம் மூன்றும் இவ்வுலகைச் சார்ந்தவை. வீடு என்பது நாம் வாழும் உலகத்திற்கு அப்பாற்பட்டது. இவற்றுள் இவ்வுலகைச் சார்ந்த பொருள் எதுவாயினும், அதுபற்றிய ஆய்வுக்கும் விவாதத்திற்கும் விருப்பு வெறுப்பு இன்றி உண்மை காண்பதற்கும் பெரிய தடை ஏதும் இல்லை. ஆனால் வீடு என்று வரும்பொழுது "சமயம்" வந்துவிடுகிறது. சமயம் என்றவுடன் நம்பிக்கை கூடவே தொடர்கிறது. நம்பிக்கை என்று வந்துவிட்டால் அங்கே ஆய்வுக்கு வழி இல்லை. அறிவியல் பார்வைக்கு வழி இல்லை. ஒவ்வொரு சமயத்திற்கும் ஒரு வேதம் இருககிறது. அது இறைவன் அருளியது. அதை முழுமையாக நம்புவது அம்மதத்தைச் சார்ந்தவர்க்கு இன்றியமையாதது. நம்பாதவ் வேறு மதத்தினர். வேறு மதத்தினர் வேறானவர். வேறானவர்கள் எல்லாம் தங்கட்கு மாறானவர்கள். மாறானவர்கள் மாற்றார். இந்த அணுகு முறையில்தான் மதங்களின் வரலாறு செல்கிறது. அவை ஏற்படுத்திய பகைமைக்கு அளவில்லை. அவற்றின் அடிப்படையில் நடந்த போர்கள் எண்ணிலடங்கா. இறந்தோர் எண்ணிலடங்கார்.*

*தமிழ்ப் பண்பாடு அகம், புறம் பற்றிப் பேசுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு* (Dharma, Artha, Karma, Moksha) *எனப்படும் நான்கு கூறுபாடுகள்* (Purusharthas) *இந்தியப் பண்பாட்டோடு* (Pan Indian Culture) *இணைந்தவை. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பகுதிகள் வள்ளுவர் காலத்தில் தமிழகத்திற்கு அறிமுகமானவையே. எனினும் வள்ளுவர் வீடு எனும் பகுதியைப் பற்றி நேரடியாகப் பேசவில்லை. அதை விட்டுவிட்டார். இந்த ஒரே முடிவின் மூலம் அறிவியல் பார்வை இடம் பெறுவதற்கிட்டிருந்த தளையை அகற்றுகிறார். வேற்றுமைக்கான வேர்களை அகற்றி விடுகிறார். மதச் சாரபற்ற* (Secular) *மறை ஒன்றை உருவாக்குகிறார்.*

*நியூட்டன் விதிகளைப் பற்றி விவாதிக்கும் பொழுது அதில் பகைமை உணர்ச்சி எழுவதில்லை. ஐன்ஸ்ட்டனின் தத்துவம் பற்றிப் பேசும் பொழுது ஆதரவாளர், எதிர்ப்பாளர் அணி திரள்வதில்லை. மத நூல்கள் அப்படிப்பட்ட ஆய்வுக்கு இடமளிப்பதில்லை. வள்ளுவர் குறள், தமிழ் மறையெனக் கூறப்பட்டாலும், அது உலகம் தழுவிப் பயன்படுத்தத்தக்க வாழ்வியல் பற்றிப்*

பேசுகிறது. அதன் ஒரு பகுதியைப் போற்றவோ புறக்கணிக்கவோ இடமளிக்கிறது.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றோடு நின்றுவிட்ட வள்ளுவர் வீடு என்பதை முழுமையாகப் புறக்கணித்துவிட்டாரா? அதில் அவருக்கு ஈடுபாடே இல்லையா? வீடு பேறு என்பதை அவர் நம்பவில்லையா என்ற கேள்வி எழலாம். அறவழி நின்று வைய வாழ்வை முறையோடு நடத்துபவர்க்கட்கு வீடு என ஒன்று இருந்தால் அதில் தானாக இடம் கிடைக்க வேண்டும். அதை எண்ணி ஒருவர் தமது நடைமுறையை வகுப்பது பெருமைப்படத் தக்கதாகாது. “இம்மைச் செய்தது மறுமைக் காமெனும் அறவிலை வாணிகம்” தமிழ்ப் பண்பின் கூறுபாடன்று. “வீடும் வேண்டாவிறலினர்” என்று பலன் கருதாத வாழ்வினர் போற்றப்படுகின்றனர். எனவே வள்ளுவர்,

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்” (50)

என்று கூறி இந்தப் பிரசசினைக்கு முடிவு காண்கிறார். இக்குறளுக்கு உரை கூறும் பரிமேலழகர்,“ இல்லறத்தோடு கூடி வாழுமியல்பினால் வையத்தின்கண் வாழ்பவன், வையத்தானே யெனினும், வானின்கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்” என்கிறார் ; மீண்டும் விளக்கம் கூறுகையில் “பின் தேவனாய் அவ்வறப்பயன் நுகர்தல் ஒரு தலை (உறுதி) யாகலின் தெய்வத்துள் வைக்கப்படும் என்றார் ” என்கிறார்.

நாம் வாழ்வது இந்த உலகில் நம் கையில் இருப்பது இந்த உலக வாழ்வு. அதை முறையானதாகவும், முழுமையானதாகவும் அமைத்துக் கொள்ளும் வாய்ப்பு ஓரளவுக்காவது நம்மால் இயன்ற ஒன்று. எனவே அதை நெறிப்படுத்துவதும், வளப்படுத்துவதும் நமது முயற்சியாக இருக்க வேண்டும். இம்மையில் ஒழுக்கமும் உயர்வும் காத்தவனுக்கு மறுமையில் செம்மை தானாக வாய்க்க வேண்டும். இம்மை வாழ்வின் விழுமங்கள் என்னும் அடித்தளத்தின் மேல் அமைக்கப்படுவதுதான் வீடேயன்றி, அது இம்மையினின்றும் தொடர்பின்றித் தானாக வருவதன்று. இம்மை வாழ்வெனும் வித்தின் முளைதான் வீடு. அது பழையாகி விட்டால் எந்த எருவும் நீரும் பலன் தராது. எனவே நாம் கவனிக்க வேண்டியத. கவலைப்பட வேண்டியது, இந்த வாழ்வின் ஏற்றம் பற்றியேயாகும் - அது அடுத்த நிலையையும் நிர்ணயிக்கிறது என்பதால். இருபதாம் நூற்றாண்டில் தலைசிறந்த சிந்தனையாளர்கள், அறிவியலுக்கும் **(Science)** சமயத்துக்கும் **(Religion)** பெருத்த முரண்பாடு எதுவும் இல்லை என்கிறார்கள். ஒன்றின் முடிவில் அதன் தொடர்ச்சியாக மற்றொன்று தொடங்குகிறது. “கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு” என்பது என்றும் உண்மை;இன்றும் உண்மை. இது என்றும் உண்மையாகவே இருக்கும். ஒரு கேள்விக்கு நாம் பதில் காணும் பொழுது ஒன்பது புதிய கேள்விகள் பிறக்கின்றன. “அறிதொறும் அறியாமை கண்டற்றால்” என்று மிகத் துல்லியமாக இந்நிலையை வள்ளுவர் கூறுகிறார். கற்ற எல்லை தாண்டிக் கால்வைக்கும் பொழுது “நம்பிக்கை ” தொடங்குகிறது. அங்கு அறிவு முழுஆட்சி செலுத்துவது

இல்லையெனினும், அறிவியல் பார்வையோடு அணுகுபவர்கள் நம்பிக்கையை "வாதப் பொருள்"ஆக்கலாம். ஆனால் "பகையை ஊற்றாக" மாற்ற மாட்டார்கள். அது போலவே, பொருள் வாழ்வு (Materialism) உயர்ந்த விழுமங்களின் அடிப்படையில் அமையுமாயின் அது ஆன்மிகத்திலிருந்து (Spirtualism) மாறுபடாது. மாறுபாடு காணப்படுவதாக வைத்துக் கொண்டாலும் அதனின்றும் தாழ்ந்ததாகாது. எனவே அறிவு பூர்வமாக நோக்கும் பொழுது, இந்த உலகில் இயற்கை யோடிணைந்து வாழ்வது என்பதுதான் நம் எல்லோர் கையிலும் இருக்கும் உளியும், கல்லும் ஆகும். இதைக் கொண்டுதான் நாம் எந்தச் சிலையானாலும் செதுக்க வேண்டும். இதைச் செம்மையாகச் செய்யும் வழி பற்றிய சிந்தனைகளை நம்முன் வைப்பதன் மூலம் அறிவியல் அணுகுமுறைக்கு அடங்கிய கூறுபாடுகளின் விசாரணைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். சமய நம்பிக்கைகளின் அடிப்படையில் எழக்கூடிய சண்டைகளுக்கான வாய்ப்புகளைத் தவிர்க்கிறார். அதே சமயத்தில் சமய வாழ்வின் பயனையும் இழக்க நேராது என்பதை வலியுறுத்துகிறார். காலங்காலமாக இரு வேறுலகம் என்று கருதப்பட்ட சித்தாந்தங்களை, வாழ்க்கை நெறிகளை இணைக்கிறார். வள்ளுவர் வையத்தின் மீது கால்களை ஊன்றி நின்று வானைத் தொடுகிறார். அறிவுலகின் அடித்தளத்தின் மீது அமர்ந்து அதைப் புறக்கணிக்காது அதன் இலக்கணத்தின் துணை கொண்டு, ஆன்மிகத்தைப் பார்க்கிறார். இருபதாம் நூற்றாண்டினர்க்கே இந்த அணுகுமுறை அண்மைக் காலங்களில் உருவானதாகத் தோன்றும் ஒன்று. இருபது நூற்றாண்டிற்கு முன்பு, முடிவு இல்லாத சில பிரச்சினைகட்கு, வாதங்கட்கு இவ்வளவு நுண்ணிய முடிவு கண்டிருப்பது எண்ணும்தொறும் வியப்பளிக்கும் ஒன்றாகும்.

## 5. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகள்

முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம்

பெரும் பேராசிரியரும் தமிழ்ச் சான்றோருமான சொல்லின் செல்வர்ரா.பி.சேதுப்பிள்ளையவர்கள் ஆன்ற தமிழறிஞர், ஆய்வாளர், மேடைத்தமிழ் வித்தகர், நூலாசிரியர், பதிப்பாசிரியர் எனப்பல்துறை வல்லுநராகத் திகழ்ந்தவர். சுற்றி வளைத்துச் சொல்லுவதே பெரும் புலமையின் அடையாளமெனக் கருதப்பட்ட ஒரு காலத்தில் எளிமையும் அழகும் கொஞ்சும் இனிய தமிழ் நடையைத் தமக்கே உரிய தனித்திறனோடு கையாண்ட சிறப்பும் பிள்ளையவர்களுக்கு உண்டு. அவருடைய எழுத்து நடைக்கும் பேச்சு நடைக்கும் இடையில் அகலங்கள் இருந்ததில்லை. படித்தாலும் கேட்டாலும் பச்சைப் பசுந் தமிழிசையைக் கேட்பது போன்ற உயர்வு சேதுத்தமிழில் எழாமல் போகாது.

### பதிப்பாசிரியர்

தமிழ்க்கவிதைகளிலே நெஞ்சம் பறிகொடுத்த பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் பல்வேறு தமிழ்க்கவிதைத் தொகுப்புகளைப் பதிப்பித்து வழங்கிய சிறப்புக்கும் உரியவர் ஆவார். “செஞ்சொற் கவிக்கோவை” என்னும் தொகுப்பைத் தந்தது போன்றே சாகித்ய அகாடமிக்காக, “தமிழ்க் கவிதைக் களஞ்சியம்” என்னும் பெருந் தொகுப்பையும் பதிப்பித்துத் தந்துள்ளார்.

### பாரதியார் பெற்ற தாக்கங்கள்

ஒரு மொழியில் இலக்கியத்தின் பயணம் ஒரு “ஜீவநதி”யின் ஓட்டம் போல் இடையீடற்றது. தொடர்ச்சியானது. நூற்றாண்டு என்ற காலப்பிரிவு கூட அதன் போக்குகளை முடிவு செய்யப் போதுமானதல்ல. ஆனால் தமிழ்க் கவிதையின் வரலாற்றில் சென்ற பல நூற்றாண்டுகளின் தேக்கம் குலைந்து மாற்றத்தின் பெருமுழக்கம் கேட்டது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சுப்ரமணியபாரதியார் இந்த மாற்றத்தின் மையமாகத் திகழ்ந்தார். அவரது கவிதைகளே இந்த நூற்றாண்டுக் கவிதைப் பாங்கையும்., பாணியையும் வடிவமைக்கிற மூலபலப் படைகளாக அமைந்தன. ஆயினும் பாரதியாரின் படைப்புக் கலையைச் செழுமைப்படுத்தவும் இரண்டு அடிப்படை இயங்குதளங்கள் காரணமாயின. அவையாவன?

1. பாரதநாடு முழுவதிலும் உள்ள புத்திலக்கிய எழுச்சியைத் தூண்டிய மேலை இலக்கியத் தாக்கங்கள். ஆங்கிலக் கல்வி அதன் வழியே கிடைத்த தொழில், அறிவியல் புரட்சிகளின் அறிவு, அச்சுயந்திர வளர்ச்சி ஆகியவற்றின் கூட்டுத்தாக்கம்.
2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமுதாயத்தையும், தமிழ் இலக்கியத்தையும் செல்வாக்குக்கு உட்படுத்திய நான்கு ஆற்றல் களஞ்சியங்களான மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், இராமலிங்க அடிகள், மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆகிய பெருமக்களும் அவர்தம் படைப்புகளும், மரபார்ந்த இந்தியத்

தத்துவங்களிலிருந்தும் தமிழ் மெய்யறிவிலிருந்தும் தமது சன்மார்க்க நெறியை வகுத்து, சங்கம் சாலை, சபை என்ற அமைப்புகளைச் சமுதாய நோக்கில் உருவாக்கி பசி தவிர்த்தலை நன்னெறியாய் அறிவுறுத்தியவர் இராமலிங்க அடிகள். இவரது அருட்பாக்கள் எளிய தமிழ் நடைக்கும் அடியெடுத்துக் கொடுத்தன. 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' யால் பேச்சுத் தமிழும் இசைத்தமிழும் கைகோத்துக்கொள்ள சாதி அடிமைத்தனத்தின் கொடுமையைக் கோடு போட்டுக் காட்டினார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

ஆங்கிலக் கல்வியின் பயன்களையும் உள்வாங்கிக் கொண்டு சுந்தரம் பிள்ளை படைத்த 'மனோன்மணியம்' 'பெண்ணுரிமை' களைத் தந்தது. இன்னும் ஒருபடி மேலாக முதல் தமிழ்ப் புதினத்தை வழங்கி, வேதநாயகனார் புதிய படைப்புகளின் உந்து சக்தியாகவும், புதுமைப் பெண்ணுக்குத் தூண்டும் ஆற்றலாகவும் சமரச சமயப் பார்வைக்கு அழைப்பு மணியாகவும் திகழ்ந்தார். சைவசமயத்து நால்வரைப் போல் தமிழ்ச் சிந்தனைகளின் மறுமலர்ச்சிக்கும், புதுவிழிப்புக்கும் இவர்கள் நால்வர்களாக விளங்கினர்.

இவ்விரு பெரும் தாக்கங்களும் பாரதியார் என்னும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதையின் மாகவியை உருவாக்கும் பின்புலமாய் அமைந்தன என்பது வரலாறு காட்டும் உண்மை.

**வளர்ச்சிக் கூறுகள்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையில் காணப்படும் பொதுமைக் கூறுகளையும் சிறப்புக் கூறுகளையும் அடையாளம் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஒரு வரையறையை வகுத்துக் கொண்டு இக்கூறுகளைக் காண்பது பொருத்தமானதாக இருக்கும். திறனாய்வாளர் பாலா, நான்கு வகைக்களன்களை அடிப்படையாகக் கொண்டு கவிதைகளைத் தொகுக்கலாம் எனக் கருதுகின்றார்.

1. கால இடைவெளிக் களன்
2. பொருள் நிலைக்களன்
3. கட்டமைவு நிலைக்களன்
4. பயன் நிலைக்களன்

இந்த அடிப்படைகளைக் கருத்தில் எடுத்துக் கொண்டு இக்கட்டுரையாளர் பின்வரும் நிலைகளில் கவிதைகளை இனம் பிரித்துக் காணலாம் எனக் கருதுகின்றார்.

1. வகைமை வளர்ச்சி நிலை
2. வடிவ வளர்ச்சி நிலை
3. கருத்து வளர்ச்சி நிலை
4. உத்தி வளர்ச்சி நிலை

வரலாற்றியல் நோக்கில் இப்பாகுபாடு மேலும் பயன் விளைவிப்பதாக இருக்கும் எனத் தோன்றுகிறது.

**வகைமை (Genre) வளர்ச்சி நிலை**

கவிதை இலக்கியம் வரலாற்றுப் போக்கில் பல்வேறு வகைமைகளைத் தன்னுள் பரிணாம கதியாக ஏற்றுக் கொண்டு வளர்ந்து வந்திருக்கின்றது.

தன்னுணர்ச்சிப் பாடல் (Lyric), காப்பியம் (Epic), குறுங்காப்பியம் (Epic fragment), கவிதை நாடகம் (Poetic Drama) எனப் பல்வகை அழகுகளோடு கவிதை வளர்ந்து வந்திருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை, இருபெரும் பகுதிகளாகக் காணத்தக்கது. வசதிக்காக மரபுக் கவிதை, புதுக்கவிதை என அப்பகுதிகளைப் பெயரிட்டு அழைக்கலாம். இந்நூற்றாண்டின் முதல் ஐம்பத்தைந்தாண்டுகளை மரபுக் கவிதையின் ஆட்சிக் காலம் எனவும், பின் நாற்பத்தைந்தாண்டுகளைப் புதுக்கவிதை வளர்ச்சிக்காலம் எனவும் பகுக்க முடியும். எனினும் வகைமை வளர்ச்சி நிலையைக் காண இப்பகுப்பு அவசியமானதன்று.

புத்தெழுச்சிக்கு மூலவராக நின்ற பாரதியாரின் கவிதைகளை ஆராய்ந்தால் இந்த நூற்றாண்டுக் கவிதையின் வகைமைகளை ஓரளவு உணர்வதாகக் கூறிவிட முடியும். புலவர்கள் எப்போதும் தொல்காப்பியத்திலிருந்து தொடங்குவது போல நவீன இலக்கியவாதிகள் சிலர் எப்போதும் பாரதியாரிடமிருந்தே தொடங்குகிறார்கள் என்று குற்றம் சாற்றப்பெறுவது உண்டு. ஆயினும் இந்நூற்றாண்டின் இலக்கியவரலாற்றில் பாரதியார் தவிர்க்க முடியாத தனியிடத்தைப் பெற்றிருப்பதால் இவ்வாறு சிந்திப்பதைக் குறை கூற முடியாது.

தமிழ்க்கவிதை சங்க காலத்தில் தனிப்பா (Individual Poem) என்னும் வகைமை சார்ந்திருப்பதையும், காலம் செல்லச் செல்ல இவ்வகைமை ஒளிந்தும் மறைந்தும் வாழ நேரிட்டதாகவும் கமீல் சுவலெபில் குறிப்பிடுவார்? மேலை நாட்டுப் புனைவியல் இயக்கத்தின் வீச்சால் பொதுவாக இந்தியக் கவிதைகளிலும், சிறப்பாக பாரதியார் கவிதைகளிலும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் தழைத்தோங்கின.

‘மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்’ என்றும் (அழகுத்தெய்வம்) ‘மானவன்றன் உளந்தனில் மட்டும் வந்து நிற்கும் இருளிது என்னே’ (ஒளியும் இருளும்) என்றும் கனவு நிலையிலும், தன்னுணர்ச்சி நிலையிலும் பாரதியார் பாடிய கவிதைகள் பலப்பல.

இவ்வுணர்வு நிலையின் ஆக்கத்தைப் பாரதிதாசன் ‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ என்று தொடர்வதைக் காண்கிறோம். தன்னுணர்ச்சிப் பாடல் வகை இயற்கையில் கொண்ட ஈடுபாடாகவும், தன் ஏக்க உணர்வுகளுக்கு

வடிகாலாகவும் பிற்காலக் கவிஞர்களிடம் வடிவு பெற்றது. கவிதையில் 'தன்னுணர்ச்சி'ப் பாங்கு மட்டும் மேலோங்கி இருப்பதை இன்று காண முடிகிறது. அந்திக் கருக்கலில் கூட்டையும் குஞ்சையும் தேடித்தவிக்கும் பறவையோடு நெருக்கமுற்று,

'எனக்கதன் கூடும் தெரியும்
குஞ்சும் தெரியும்
ஆனால் எனக்கதன்
பாஷை புரிய வில்லை'

எனக் கலாப்ரியா தவிக்கும்போது தன்னுணர்வுக் கவிதையின் நெஞ்சத் துடிப்பு மட்டும் கேட்கிறது. இந்த மாற்றம் குறிப்பிடத்தக்கது.

மரபின் தொடர்ச்சியாகக் காப்பிய வகைமை அகல நீளங்களோடு வளர்ச்சி பெறவில்லை. சுத்தானந்த பாரதியாரின் பாரதசக்தி மகாகாவியம் 'அரங்க சீனிவாசன்' 'காந்தி காவியம்' போன்ற ஓரிரண்டு நூல்கள் மட்டும் விதிவிலக்காக அமைகின்றன. காலம் பறக்கத் தொடங்கிய இந்த நூற்றாண்டில் காப்பியங்களின் கதைப் பகுதிகள் சிலவற்றை விரித்துக் கூறும் 'கண்ட காவிய' மரபு தொடரலாயிற்று. முன்னர் நளன் கதை போன்றவை தனிக் காவியங்களானது போலப் பண்டைக் காப்பியங்களை அடியொற்றிச் சிறுகாவியங்கள் எழுந்தன. அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றது. 'பாஞ்சாலி சபதம்' பாரதக் கதையின் ஒரு பகுதியை மட்டும் பாரதியார் சிறுகாப்பியமாக வடித்துத் தந்தார். இந்நெறியில் பாரதிதாசன் 'மணிமேகலை வெண்பா' 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' என்னும் படைப்புகளில் பழங்கதைகளைக் குறுங்காப்பியங்களாகப் படைத்துத் தந்தார். இம்மரபு 'ஆட்டனத்தி ஆதிமந்தி' கதையைக் காவியமாக வடித்த கண்ணதாசனிடம் மாற்றம் பெற்றது. இதற்கு முன்னோடியாகப் பாரதிதாசன் புரட்சிக்கவி, பாண்டியன் பரிசு, தமிழச்சியின்கத்தி எனப் பலப்பல குறுங் காப்பியங்களைப் படைத்துத் தந்தமை நினைவில் கொள்ளத்தக்கது. மொத்தமாகக் கதைகளைத் தேர்ந்தெடுத்தும் உருவாக்கியும் காப்பியங்களைக் கவிஞர்கள் தந்தனர். கண்ணதாசனின் மாங்கனி, நாமக்கல் கவிஞரின் 'அவளும் அவனும்' சாலை இளந்திரையனின் 'கொட்டியும் ஆம்பலும்' போன்ற பல காவியங்களை இவ்வகையில் சேர்க்கலாம். எனினும் சிறுகாப்பியங்களைப் படைக்கும் போக்கு மெல்ல மெல்லத் தேய்ந்தது. மு.அண்ணாமலையின் வற்றிய ஓடை, சிற்பியின் சிரித்த முத்துக்கள் போன்ற படைப்புகள் இம்மரபு தேய்ந்து கொண்டே வரும் சூழலில் தோன்றியவை எனலாம். ச.து.சு.யோகியாரின் 'அகல்யா' தமிழ் ஒளியின் 'விதியோ வீணையோ' முதலிய படைப்புக்கள் குறிப்பிடத்தக்கன.

புதுக்கவிதையின் செல்வாக்கு மேலோங்கிய பின்னர் நெடுங்கவிதைகளின் படைப்பாக இக்காப்பிய மரபு மாறிப் போய் விட்டதாகத் தோன்றுகிறது. ந..பிச்சமூர்த்தியின் காட்டுவாத்து, வழித்துணை, சி.மணியின் நரகம், பச்சையம், நகுலனின் நீண்ட கவிதைகள் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

*காப்பிய மரபின் வேகம் கதைக் கவிதைகளாக உருமாறிவிட்டன என்றும் குறிப்பிடலாம். 'சிற்பியின் சிகரங்கள் பொடியாகும். சாக்கடைகள் இன்றும் வற்றிவிடவில்லை' மௌன மயக்கங்கள், தமிழன்பனின் கடப்பைக் காந்தம்மா வைரமுத்துவின் நெடுங்கவிதைகள் போன்றவை இவ்வகைமைக்கு எடுத்துக்காட்டாகும் எனலாம்.*

*இதன் தொடர்ச்சியாக ஒரு பொருள் மேல் நுதலிய குறும்பாடல்களின் தொகுப்புகள் வெளி வந்திருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும். த.பழமலயின் சனங்களின் கதையும் 'குரோட்டன்சுகளோடு கொஞ்ச நேரம்' நூலும் காப்பிய மரபின் மாற்று வகையாக வளர்ந்திருக்கின்றன என்று கூறலாம்.*

*கவிதை நாடகம் சென்ற நூற்றாண்டில் 'நந்தனார் சரித்திரச் கீர்த்தனை' யாலும் 'மனோன்மணிய'த் தாலும் ஒரு வளம் பெற்ற இலக்கிய வகையாகும். முன்னது இசைப்பாடல். கூத்து மரபின் வெளிப்பாடாகவும். பின்னது ஷேக்ஸ்பியர் நாடகச் செல்வாக்கின் வெளிப்பாடாகவும் கருதத்தக்கன. இவ்விலக்கிய வகை பாரதியாரிடம் முளைவிடப் பார்த்தது. அவரது 'ஜகத் சித்திரம்' ஐந்து காட்சிகள் கொண்ட கவிதை நாடகமாகவும், 'விடுதலை' இரண்டே காட்சிகளோடு முற்றுப் பெறாத கவிதை நாடகமாகவும் கிடைக்கின்றன. 'விடுதலை' நாடகம் விரிவாகத் திட்டமிடப்பட்டது என்பதை அங்கம் - 1 காட்சி - 1 என்ற அவர் குறிப்புக் காட்டுகின்றது. 'மானுடத்தின் விடுதலை' - இந்நாடகங்களின் விழுப்பொருளாக அமைகிறது.*

*'மண்ணுலகத்து மானுடன் தன்னைக்*
*கட்டிய தளையெல்லாம் சிதறுக!'*

*என்ற குரல் இவற்றில் ஒலிக்கின்றது.*

*பாரதியாருக்குப்பின் பாரதிதாசன் கவிதைகளில் கவிதை நாடகம் சிறப்புற வளர்ந்தது. 'வீரத்தாய்' சத்தி முற்றப் புலவர் முதலிய நாடகங்களில் அவரது வீச்சு புலனாயிற்று. கவிமணி தேசிக விநாயகனார் மீராபாயின் சரிதையை இசை நாடகமாகப் புனைந்தார். ஒற்றைப் பாத்திர நாடக வெளிப்பாடாக ச.து.சு.யோகியாரின் 'கண்ணகி' அமைந்துள்ளது. எனினும் கவிதை நாடக மரபு ஈழத்துக் கவிதைகளில் வளர்ச்சியுற்றது போல இங்கு வளம் பெறவில்லை. மஹாகவியும், கவிஞர் முருகையனும் ஈழத்தில் இத்துறைக்கு அளித்த பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.*

'Epligram' *என்னும் ஒருவரி, இருவரிக் கவிதைகளை மேலை நாட்டார் ஓர் இலக்கிய வகையாக மதிப்பிடுவர். அவ்வகையில் ஔவையாரைப் பின்பற்றிப் பாரதியாரும், பாரதிதாசனும் பிறகும் படைத்த ஆத்திச்சூடிகள் இவ்வகைமையில் இடம் பெறத்தக்கவை ஆகலாம். இன்று புதுக்கவிதையில் இப்பாங்கு வளர்ந்திருக்கின்றது.*

*‘இரவிலே வாங்கினோம்*
*இன்னும் விடியவே இல்லை’*

என்னும் பாணியில் எழுதப்படும் கவிதைகளை இவ்வகைமையில் சேர்க்கலாமா என்று சிந்தித்துப் பார்க்கலாம். ஹெய்கூ பாணிக் கவிதைகளையும் இவ்வகையில் கருதிப்பார்க்கலாம்.

மற்றொரு குறிப்பிடத்தக்க இலக்கிய வகையாக தன் வரலாற்று அல்லது வாழ்க்கை வரலாற்றுக் கவிதைகளைக் கூறலாம். இத்துறையில் தமிழ்க்கவிதை வரலாற்றில் பாரதியாருக்கு இவ்வகை முயற்சிகள் உண்டா என்பது ஐயத்துக்கு உரியது.

Autobiographical poem என்ற வகையில் பாரதியாரின் ‘சுயசரிதை’யையும், ‘பாரதி அறுபத்தாறு’ பாடல்களையும் குறிப்பிடலாம். தன் இளமைக்கால நிகழ்வுகளை முன்னதிலும், புதுமை வாழ்வு நிகழ்வுகளைப் பின்னதிலும் பாரதியார் சித்திரிக்கின்றார். இம்முறையை வேர்ட்ஸ்வொர்த் போன்ற ஆங்கிலக் கவிஞர்களிடமிருந்து கற்றுக் கொண்டார் பாரதியார் எனலாம். வ.உ.சிதம்பரனாரும் தன் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றைக் கவிதை வடிவில் எழுதியுள்ளமை நினைவு கூரத்தக்கது. பாரதிதாசனைப் பொறுத்தவரை புலவர் இராமநாதனாரின் திறனாய்வு நூலுக்கு எழுதிய கவிதை முன்னுரையின் தனது இலக்கிய வளர் நிலைகளைக் கூறுவது இவ்வகைமை சார்ந்தது எனலாம்.

தொடர்ந்து இவ்வகை இலக்கியம் கவிதையில் பெரிய அளவில் வளர்ச்சி பெறவில்லை. ஆயினும், வைரமுத்து ‘கவிராஜன் கதை’ நூலில் பாரதியார் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதையாக எழுதி இருப்பதை ஒரு தரமான படைப்பாக எடுத்துக் கூறலாம்.

**வடிவ வளர்ச்சி நிலை**

தமிழ்க் கவிதையின் வார்ப்புக்குப் புறவடிவமாக யாப்பு காலந்தோறும் விளங்கி வந்திருக்கின்றது. கண்ணுக்குத் தெரியாததும் கருத்துக்குப் புலனாவதுமான ஓர் அகவடிவம் எல்லாக் கவிதைகளிலும் உண்டு.

அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா எனப் பல்வேறு வடிவங்களை யாப்பிலக்கணம் வகுத்துக் கூறும். இவ்வடிவங்கள் காலந்தோறும் புதுமை பெற்றும் மாறுதல்கள் பெற்றும் வளர்ந்து வந்திருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை இம்மரபிலிருந்தே தன் வடிவத்தை ஏற்றுக் கொண்டு வளரத் தொடங்கியது. முதன்மைப் பாவலரான பாரதியார் யாப்பு வடிவங்களைச் செம்மையாகக் கையாண்ட சிறப்புக்கு உரியவர். எடுத்துக்காட்டாக பாரதியார் படைத்துள்ள ‘பாரதமாதா நவரத்தின மாலை’யில் வெண்பா, கட்டளைக் கலித்துறை, எண்சீர்திருத்தம், ஆசிரியப்பா, தரவு கொச்சகக் கலிப்பா, வஞ்சிவிருத்தம் முதலிய பல்வகைப் பாக்களும் பாவினங்களும் இடம்பெற்றிருக்கக் காணலாம். ‘பாரதமாதா திருத்தசாங்கம்’ முழுக்க வெண்பாக்களால் இயற்றப்பெற்றுள்ளது.

இவ்வாறே முன் தலைமுறையினரும் முன்னோடிப் புலவர்களும் கையாண்ட பல்வகைப் பா வடிவங்களையும் பாரதியார் ஏற்றுக் கொள்கின்றார். தாயுமானவர் ஆனந்தக்களிப்பை முன் மாதிரியாகக் கொண்டு 'ஆதிசிவன் பெற்று விட்டான்' தமிழ்த்தாய் என்ற கவிதையையும், கும்மி மரபில் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற கவிதையையும் இயற்றித் தந்துள்ளார். பள்ளுப்பாட்டின் பாதிப்பில் 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்ற பாடலை வடித்திருப்பதைக் காணலாம். 'சிந்துக்குத் தந்தை' என்று பாரதிதசான் பாராட்டி இருப்பதற்கு ஏற்ப காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து முதலிய பா வகைகளை அவரிடம் காண்கின்றோம்.

இசைக் கீர்த்தனை வடிவத்தையும் பாரதியார் வளமுற ஏற்று வளர்த்தவர். 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'யில் உள்ள 'மாடு தின்னும் புலையா' என்னும் மெட்டைக் கொண்டு 'தொண்டு செய்யும் அடிமை' என்ற பாடலையும், 'ஆண்டைக் கடிமை அல்லவே' என்ற பாடலையும் அவர் புனைந்திருப்பது இதற்கு எடுத்துக்காட்டு. அது மட்டுமின்றித் தம் பாடல்களுக்கு இசைக் குறிப்புகளையும் பாரதியார் குறித்திருப்பது எண்ணத்தக்கது.

யாப்பு வடிவங்களில் சிறப்பானவற்றையெல்லாம் எடுத்தாண்ட, பாரதியார் புதுக்கவிதைக்கும் அடியெடுத்துக் கொடுத்தார் என்ற செய்தி வடிவநிலை வளர்ச்சியில் தனித்துவமுள்ள ஒரு வரலாற்றுக் குறிப்பாகும். பாரதியாரின் 'காட்சி', 'சக்தி', 'காற்று' போன்ற உரைநடைப் பாங்கான கவிதைகள் இவ்வகையில் தமிழின் முதற்சோதனை முயற்சிகள் எனலாம். சில திறனாய்வாளர்கள் இக்கவிதைகள் புதுக்கவிதை முயற்சிகள் அல்ல என்ற மறுப்பதுண்டு. எனினும் வால்ட்விட்மனின் கவிதைகளோடும், ஜப்பானிய ஹெய்கு கவிதைகளோடும் நெருக்கம் காட்டிய பாரதியார் வேதரிஷிகளின் கவிதைகளோடு அவற்றை இணைத்து உருவாக்கிய ஒரு வடிவம் என இக்கவிதைகளைக் கருதுவதே சரியாக இருக்கும். பாரதியாரின் 'அக்கினிக் குஞ்சு' கவிதையை முழுமையான ஒரு புதுக்கவிதையாகக் கருதும் சி.சு.செல்லப்பா போன்ற புதுக்கவிதை முன்னோடிகளின் கருத்தும் இங்கு கருதிப்பார்க்கத்தக்கதாகும்.

பாரதியாரைத் தொடர்ந்து பாரதிதாசன் மரபு யாப்புகளையே தம் கவிதைகளில் கையாண்டார். முறையான இலக்கணப் புலமையும், தமிழறிவும் பெற்றிருந்த பாரதிதாசனின் கவிதைகளில் எல்லாவகையான யாப்பு வடிவங்களும் இடம் பெற்றுள்ளன. பாரதியாரைப் போன்று காவடிச் சிந்து போன்ற பாவகைகளையும் பாரதிதாசன் பயன்படுத்தினார். வெண்பா யாப்பால் 'மணிமேகலை வெண்பா' நூலையே படைத்து இக்காலப் புகழேந்தி ஆனார். எண்சீர் விருத்தத்தால் 'பாண்டியன் பரிசு' நூலை இயற்றினார். அறுசீர் விருத்தம் அவருக்கு நீச்சல் குளமாயிற்று. 'விருத்தமென்னும் ஒண்பாவுக்கு உயர் கம்பன்' என்ற பாடல் பாரதிதாசனுக்கும் கச்சிதமாய்ப் பொருந்துவதாயிற்று. நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் ஒன்றான ஏற்றப்பாட்டு வடிவத்தையும் அவர் ஏற்றுச் செழுமை செய்தார்.

எனினும் அறுபதுகள் வரை வாழ்ந்திருந்த பாரதிதாசன் புதுக்கவிதை வடிவம் பற்றிக் கருத்தும் தெரிவிக்கவில்லை. அவ்வடிவத்தைக் கையாளவும் முன்வரவில்லை. இம்முயற்சிகளை அவர் அறியாதிருந்தார் எனக் கூற இயலாது. அவர் எழுதிக் கொண்டிருந்த 'மணிக்கொடி' இதழ்ப் படைப்பாளிகளான புதுமைப்பித்தன். ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா. போன்றோர் இந்தப் புதுக்கவிதை வடிவத்தில் அவர் ஆர்வம் காட்டவில்லை என்றே நாம் ஊகிக்க வேண்டி இருக்கிறது.

பாரதியாருக்குப் பிறகு முற்றிலும் சந்த நயத்தை ஒதுக்காமல் அதே சமயம் யாப்பு வடிவத்தில் ஊன்றி நிற்காமல் மணிக்கொடியாளர்கள் புதுக்கவிதை வடிவத்தில் கவனம் செலுத்தினார். பாரதியாரின் வசனகவிதையும், விட்மனின் புல்லின் இதழ்களும் தமக்கு இவ்வடிவமற்ற வடிவத்தில் ஆர்வத்தை உண்டுபண்ணியதாக ந.பிச்சமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

எனவே இப்புதுவடிவம் முப்பதுகளில் முளவிடத் தொடங்கியது (மணிக்கொடி 1933-1939) என்பது தெளிவு. கு.ப.ரா சொற்களின் மாய வார்ப்புகளில் ஈடுபாடு கொண்டவர்.

"*வாழ்க்கை ஒரு வெற்றி, ஒரு துடிப்பு*
*ஒரு காதற்பா, ஒரு இசை*
*மண்ணின் மாய மோனையில் பிறந்தது*"

என அவர் எழுதும்போது யாப்புக் குலைந்த ஒரு பேச்சுச் சந்தம் இடம் பெறுவதைக் காணுகிறோம். புதுமைப் பித்தனுக்கு ஓசை நயத்தில் ஈடுபாடு உண்டு. 'சாம்ராட்டுகளின் சப்த ஜாலம்' என அவர் கட்டுரை இதற்குச் சான்று. எனினும் வற்றிச் செத்த வார்த்தைச் சருகுகளும், 'போன்மை' வடிவங்களும் அவருக்குத் தந்த ஏமாற்றமே புதுவடிவங்களின்பால் அவரை ஈர்த்தது எனலாம். கலாமோகினி, கிராமஊழியன் போன்ற அக்கால ஏடுகளில் இப்புதிய வடிவம் மெல்ல மெல்ல எதிர்ப்புகளுக்கிடையே இடம் பெறலாயிற்று.

இப்பரிசோதனைகளில் வல்லிக்கண்ணன், க.நா.சு, ச.து.சு யோகியார் போன்ற பலரும் ஈடுபட்டிருந்தாலும் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். ந.பிச்சமூர்த்திதான். இவரது களமும் தளமும் விரிந்து விரிந்து குறுங்கவிதைகள், நெடுங்கவிதைகள், தத்துவச் சாயல் கவிதைகள் என அவை பல்வகைக் கோலம் கொண்டன.

எழுத்து, கசடதபற, நடை ஏடுகளும், பின்னர் வானம்பாடியும் இவ்வடிவ வளர்ச்சி நிலைக்கு விரிவான பயிற்சி அரங்குகளாக அமைந்தன.

புதுக்கவிதையில் ஒருவகை வடிவமற்ற வடிவம் அக உருவாக அமைந்துள்ளது. சொல்லும் கவிஞனின் மனக்கோணத்துக்கும், சொல்லப்படும் கவிப்பொருளின் இருப்பு நிலைக்கும் ஏற்றபடி இவ்வகவடிவம் உருவம் கொள்கின்றது. இவ்வக வடிவம் குறித்தும், புதுக்கவிதை எடுத்துள்ள எண்ணற்ற புறவடிவங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்படுதல் வேண்டும். காட்சிப் புலனுக்கு

ஏற்பவும், கருத்துச் செறிவூட்டலுக்கு ஏற்பவும் புறவடிவங்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**கருத்து வளர்ச்சி நிலை**

பாடு பொருள், உள்ளடக்கம் என அறியப்படும் கவிதையின் கருத்துக்களிலும் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் ஆழமான பரிணாமங்களை அமைத்துள்ளன. காலத்துக் கேற்ற சிந்தனைகளை உட்கொள்ளவில்லையானால் எந்த இலக்கியமும் கேள்விக்குரிய வாழ்நிலை உடையதாகிவிட்டது.

கடந்த பல நூற்றாண்டுகளில் தமிழ் இலக்கியம் பாரதிதாசன் குறிப்பிடுவதைப் போல,

> *'கலம்பகம் பார்த்தொரு கலம்பகத்தையும்*
> *அந்தாதி பார்த்தொரு அந்தாதி யையும்'*

நகலெடுக்கும் பணியையே செய்து வந்தது. மாற்றங்களின் காற்று வீசிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தான் புதிய பொருள்கள் பற்றிய பிரக்ஞை தோன்றியது.

இந்தப் புத்துணர்வின் விளைபொருளான பாரதியார் இக்காரணத்தினால் தான், தன்னம்பிக்கையோடு

> *'சுவைபுதிது, பொருள் புதிது, வளம் புதிது*
> *சொல் புதிது',*

என அறிமுகம் செய்து கொண்டார்.

வாழ்நிலை, சூழ்நிலை மாறுதல்களோடு கிளர்ந்தெழுந்த புதிய இயக்கங்களும் கருத்து வளர்ச்சி நிலைக்குக் காரணமாயின. சுதந்திரப் போராட்ட இயக்கம், சமுதாய சீர்திருத்த இயக்கம், திராவிட இயக்கம், பொதுவுடைமை இயக்கம் ஆகியன கருத்து வளர்ச்சிக்குப் பெரும்பங்களிப்பைச் செய்தன.

பாரதியார் தேசிய இயக்கத்தின் பிள்ளையாகவும், சமுதாய சீர்திருத்த இயக்கத்தின் கொழுந்தாகவும் திகழ்ந்தார். அது வரை கன்னியாகுமாரி முதல் காஷ்மீர் வரை விரிந்த பாரத தேசம் நமது தாய்நாடு என்ற உணர்வு பாடுபொருளாக அமையவில்லை. முதன்முதலாக,

> *'வந்தே மாதர மென்போம் - எங்கள்*
> *மாநிலத் தாயை வணங்குது மென்போம்'* என்றும்,
>
> *'மன்னும் இமயமலை எங்கள் மலையே'* என்றும்

தேசபக்திக் கலசமாகத் தமிழ்க்கவிதை நிரம்பி வழிந்தது. சென்னைச் சமூக சீர்திருத்த சங்கத்தில் உறுப்பினராக இருந்த பாரதியாரின் கவிதைகளில் பெண் விடுதலை, சாதி யொழிப்பு, அனைவருக்கும் கல்வி, தொழில், தொழிலாளர் நலம் என்ற கோட்பாடுகள் இடம்பெறுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

ஆன்மிக அத்வைத சாக்த வெளிப்பாடுகள் அவர் கவிதைகளில் தொடர்ந்தன என்றாலும் அவரது பக்திப் பாடல்களிலும் சக்திப் பாடல்களிலும் முக்தி நோக்கம் முகிழ்ந்திருக்கவில்லை. மனிதகுலத்தின் முடிவுற்ற நலங்களே குடி கொண்டிருந்தன.

*'வல்லமை தாராயோ - இந்த*
*மாநிலம் பயனுற வாழ்வதற்கே'*

என்ற வரிகளில் 'கூட்டி மானுடச் சாதியை ஒன்றென'க் கொள்ளும் உலகப் பார்வையும் கனிந்திருக்கக் காணலாம். பாடுபொருளில் இப்பெரிய மாற்றம் பாரதியார் கவிதைகளின் வாயிலாக ஏற்பட்டது.

இதே தேசிய இயக்கம் சிறிதும் பெரிதுமாகக் கவிமணி, கொத்தமங்கலம் சுப்பு போன்ற கவிஞர்களைப் பாதித்தது. என்றாலும் தேசியமே மூச்சாகவும், காந்தியமே பேச்சாகவும் கொண்டவை நாமக்கல் இராமலிங்க பிள்ளையின் கவிதைகள். இதனைத் தவிர இவரது கவிதைகளில் கருவும் உருவுமாய் அமைந்தது.

பாரதியார் காலத்துக்குப்பின் பாரதிதாசனை ஈர்த்த இயக்கம் பெரியாரின் சுயமரியாதை இயக்கம், இவ்வியக்கம் அடிப்படையில் சமுதாயச் சுரண்டலை ஒழிப்பதும், சமய ஆதிக்கங்களைத் தகர்ப்பதும், பெண் விடுதலைக்குக் குரல் கொடுப்பதும், சமதர்மச் சிந்தனைகளுக்கு ஊக்கமளிப்பதுமான லட்சியங்களைக் கொண்டிருந்தது. இந்தச் சீர்திருத்த வேகத்தால் சுயமரியாதைக் கவிஞரானார் பாரதிதாசன். கைம்மைத்துயர் ஒழிப்பும் மறுமண ஆதரிப்பும் பொதுவுடைமை விருப்பும், சமய எதிர்ப்பும் ஒரு புயல் மையம் கொண்டிருப்பதைப் போல் பாரதிதாசனிடம் குடிகொண்டிருந்தன.

*'காதல் அடைதல் உயிரியற்கை*
*கட்டில் அகப்படும் தன்மையதோ?'*

என்று சாதிகடந்த காதல் அவர் மூலம் வினாக்களை எழுப்பியது.

*'ஏழை முதலாளி யென்ப*
*தில்லாமற் செய்'*

*'பொதுவுடைமைக் கொள்கை*
*திசையெட்டும் சேர்ப்போம்'*

*‘கடவுள் என்ற கட்டறுத்துத்*
*தொழிலுளாரை ஏவுவோம்’*

எனத் தீப்பொறிகளாய்க் கருத்துக்கள் பாரதிதாசன் கவிதைகளில் கனன்றன.

இவற்றுக்கெல்லாம் மேலாகத் தமிழ்மொழியும், தமிழ்நாடும் தவிர்க்கமுடியாத பெரும் இடத்தைப் பாரதிதாசன் கவிதைகளில் கைப்பற்றிக் கொண்டன. தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்பது இவரது கவிதைகளில் தாய்மொழிப் பற்று என்ற விரிந்த எல்லைக்குள் அடங்கிப் போயிற்று.

வளர்ந்து கொண்டிருந்த பொதுவுடைமை இயக்கம் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையையும், பொதுவுடைமைத் தத்துவத்தின் பெருமையையும் பொருளாகக் கொண்டு எழுதும் கவிஞர் பரம்பரையைத் தோற்றுவித்தது.

கே.சி.எஸ்.அருணாசலம், சின்னப்ப பாரதி, பட்டுக்கோட்டை ரகுநாதன் என மரபுக் கவிதை வழியில் வளர்ந்த ஒரு கவிஞர் பட்டாளம் பொதுவுடைமைச் சிந்தனைகளைக் கொண்ட கவிதைகளைப் படைத்துத் தந்தது. இக்காலக் கவிஞர்களில் தணிகைச் செல்வன், எ.தெ.சுப்பையன் போன்ற கவிஞர்கள் இந்தப் பாதையில் நடைபோடலாயினர். கலியுகம் முடிந்து கிருதயுகம் எழுக என்று சொன்ன பாரதியாரைப் போல,

*‘காந்தி யுகம் முடிய*
*சுத்தி யுகம் எழுக மாதோ*
*என நான் பாடட்டுமா’*

என்று கேட்டார் தணிகைச் செல்வன்.

இந்தப் பாதையில் மார்க்சிய நெறியில் பற்றும், மனித நேயத்தில் ஈடுபாடும் கொண்ட வானம்பாடிகள் புதுக்கவிதை இயக்கம் கண்டனர். அவர்களது கவிதைகளில் சர்வதேசியம், சமூக சீர்திருத்தம், பழமை எதிர்ப்பு, மனித நேயம் என்ற அடிப்படையில் அமைந்த கவிதைகள் புதிய பாடு பொருளை ஏந்திப் பிறந்தன.

முதிர் கன்னிகள் பற்றியும், விலைமகளிர் பற்றியும் திருநங்கைகள் பற்றியும் கவிதைகள் படைத்த நா.காமராசன் பாடு பொருட் புதுமை நெறிகளும் புதிய கருத்துப் பெருக்கில் கடும் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அரசியல் சமூக இயக்கங்கள் போன்றே இலக்கிய இயக்கங்களும் கருத்து வளர்ச்சிக்குக் காரணிகள் ஆயின. மீ மெய்மையியல், படிமவியல், குறியீட்டியல் போன்ற மேலைநாட்டின் இலக்கிய இயக்கங்கள் தந்த தாக்கத்தால் பல கவிதைகள் பிறந்தன. ஞானக் கூத்தன், பிரம்மராஜன், அப்துல்ரகுமான் போன்றோர் சர்ரியலிசக் கவிதைகளில் மிகுதியும் ஈடுபாடும் கொண்டவர்கள். இவை உத்திகளின் உருவாக்கத்தில் செயல்படுவன என்றாலும் கருத்து

நிலைகளையும் தாக்கம் செய்தன. வாழ்வைச் சிதைவுகளாகக் காணும் கருத்து நிலைக்கு இப்போக்கு ஊக்கம் தந்தது.

இன்று கவிதைகளில் பேசப்படாத கருத்துக்களே இல்லை. அகம், புறம் பாகுபாட்டைத் தாண்டி, மரபுச் சட்டங்களைத் தாண்டி எல்லைகளற்ற வெளியில் கவிதையின் பயணம் தொடர்கிறது.

**உத்தி வளர்ச்சி நிலை**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை கவிதைப் படைப்பாக்க உத்திகளில் மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது. இ.மறைமலையின் புதுக்கவிதை முப்பெரும் உத்திகள் என்ற நூல் விரிவாக இது குறித்து ஆய்ந்துள்ள சிறந்த திறனாய்வு நூல்.

பாரதியார் பழமரபு உத்திகளான உவமை, உருவகங்களில் திளைத்தவர். அவரது கவிதைகளில் ‘பாஞ்சாலிசபதம்’ முழுமையான குறியீட்டு உத்திக்குச் சான்றாகத் திகழ்கிறது. பாரதியார் பழமரபைப் புதிய பார்வையில் உத்தியாகவும் பயன்படுத்தியுள்ளார். அவரது ‘பாரதமாதா’, ‘திருப்பள்ளியெழுச்சி’ இதற்கு அடையாளமாகும்.

பாரதிதாசனைப் பொறுத்த வரை மரபார்ந்த கவிதை உத்திகளைச் செழுமைப்படுத்தி இருப்பதும், ’புரட்சிக்கவி’ காவியத்திற்போலப் பழங்கதைக்குப் புது நோக்கை நல்கியிருப்பதும், தாலாட்டுப் போன்ற மரபு வடிவங்களைப் புதிய கருத்துக்களைச் சொல்லும் கருவியாக்கி இருப்பதும், இசைப்பாடல் மரபை நவீனமான பாடு பொருள்களுக்குப் பயன்படுத்தி இருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

உத்திகளின் வளர்ச்சி நிலையில் புதுக்கவிதை அளித்திருக்கும் பங்கு கணிசமானது.

1. படிமப் பயன்பாடு
2. முரண்
3. பொருந்தாதவற்றைப் பொருத்தும் (Collage) - கலைநெறி
4. பழமரபுக் கதை (Myth)
5. வர்ணனை
6. இருண்மை / புதிர்க்கோலம்
7. நாட்டுப்புறக் கவிதை / கதை / கலை
8. அங்கதம்
9. குறியீடு
10. சிதைவுப் பாங்கு
11. அதிர்வூட்டல்
12. சிறுகதைப் பாணி
13. விடுகதை
14. ஹெய்கூ உத்தி

எனப் பல்வகை உத்திகள் இன்று புதுக்கவிதையில் வளர்ந்துள்ளன. இவற்றை ஆராய முற்படும்போது மேலும் பல புதிய உத்திகளை நாம் அடையாளம் காண முடியும்.

அதுமட்டுமின்றி இவ்வுத்திகளில் ஓவியம், சிற்பம் போன்ற பிற கலைத் துறைகளில் தூண்டுதல் செயல்படுவதையும் எடுத்துக்காட்டாகச் சாத்தியமுண்டு. திரைப்பட, நாடக உத்திகளும் கையாளப்படுவதை உணரமுடியும். சில கவிஞர்கள் கையாளும் சொல் விளையாட்டு உத்திகளும் இவ்வகையில் இணைத்துப் பார்க்கத் தக்கன.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை தன் நிறைப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் இவ்வேளையில் அலங்காரங்களும் அணிநலன்களும் இல்லாத ஒரு புதுக்கவிதை இயக்கம் தோன்றுவதற்கான அடையாளங்கள் தெரிவதாகத் தோன்றுகிறது.

‘அதோ வருகிறாள்
எங்கள் பூக்காரி
நெஞ்சில் புரளும்
செங்கூந்தலில்
ஒரு சின்னக் கண்ணிப்
பூவும் இல்லாது
அதோ வருகிறாள்
எங்கள் பூக்காரி’

எனப் பாலா இயல்பு நவிற்சியோடு பேசுவது போன்ற ஆடம்பரமற்று கவிதைகளில் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதாயத் தோன்றுகிறது.

## 6. கணிப்பொறியும் தமிழும்

*சுஜாதா*

இந்திய மொழிகளில் தமிழில் எழுத்துக்களின் எண்ணிக்கை குறைவு என்று மற்ற மொழியாளர்கள் கேலி செய்வதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். “உங்களிடத்தில் ஒரே ஒரு க தான் இருக்கிறது. ஒரே ஒரு ப, ஒரே ஒரு ட காந்தி என்றாலும் ஃகாந்தி என்றாலும் ஒரே மாதிரிதான் எழுதுகிறீர்கள். எங்கள் கன்னடத்தைப் பாருங்கள். தெலுங்கு, ஹிந்தி, மலையாளம் எந்த மொழியானாலும் நான்கு க, நான்கு த இருக்கின்றனவே ஏன் தமிழில் மட்டும் இந்தக் குறைபாடு” இவ்வாறு கேட்கிறவர்களுக்கு நான் தவறாது சொல்லும் பதில் : தமிழ் மொழி முழுவதும் Phonetic மொழி அல்ல. அது Partially Phonetic தமிழுக்கு இயல்பான உச்சரிப்பு விதிகள் உள்ளன. படம் என்பதை எவரும் பட்டடம் என்று இடைப்பட்ட ட வை பட்டம் என்பது போல் உச்சரிப்பதில்லை. அது போல பக்கம் சங்கம் இந்த வார்த்தைகளில் உள்ள சகர உச்சரிப்புகள் வேறுபடுகின்றன. இந்த விதிகளை நாம் ஆங்கிலத்து (PUT) புட், (CUT) கட் என்பது போல் உள்ளுணர்வில் உணர்ந்து கொள்கிறோம். இந்த உச்சரிப்பு விதிகள் எந்த இலக்கணப் புத்தகத்திலும் எழுதப்படவில்லை. சில ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் முனைவர் பட்டப் படிப்பிற்கான கட்டுரைகளிலும் இருக்கின்றன. இவை சுலபமான உச்சரிப்பு நாக்கு வசதிகளைச் சார்ந்துள்ளன. சுருங்கச் சொன்னால் தமிழ் முழுமையான ஒரு எழுத்து - ஒரு ஒலி மொழியல்ல. சூழ்நிலைக்கு ஏற்ப க, ச, ட, ப, த இவைகளின் உச்சரிப்புகள் மாறுகின்றன. இந்த விதிகளை யாராவது ஒரு சிறிய புத்தகமாக எழுதிப் பதிப்பித்தால் கணிப்பொறியாளர்களுக்கு மட்டும் இல்லாமல் டெலிவிஷன், ரேடியோ அறிவிப்பாளர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். தமிழில் ஓர் உச்சரிப்பு அகராதி வேண்டும்.

இதை எதற்கு ஆரம்பத்தில் சொல்கிறேன் என்றால் தமிழில் எழுத்துக்கள் குறைவாக இருப்பது இன்றைய கணினி உலகில் ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கிறது. கணினியின் விசைப்பலகை, கீ-போர்டுக்குள் தமிழின் அத்தனை எழுத்துக்களையும் அடக்கிவிட முடிகிறது. ஆங்கிலத்தைப் போல் தமிழில் ‘அப்பர் கேஸ்’ பெரிய எழுத்த, சின்ன எழுத்து இல்லாததால் கணிப்பொறியின் விசைப் பலகையில் தமிழின் அத்தனை எழுத்துக்களுக்கும் இடம் கொடுத்தபின்னும் சில விசைகள் மிச்சமிருக்கின்றன. இதற்கு முக்கியமான காரணம் தமிழ் போன்ற திராவிட மொழிகள் உயிர், மெய் என்கிற எழுத்துப் பாகுபாடும் அவை தனித்தும் இணைந்தும் இயங்குவதற்கான எளிய விதிகளும்தான்.

க் + உ = கு
த் + ஏ = தே

இவ்வாறான விதிகளைக் கணிப்பொறி புரிந்துகொள்வது மிக மிக எளிது. எனவே கணிப்பொறியில் விசைப்பலகை லே அவுட் இட ஒதுக்கம் செய்யும் போது இருவிதமான அணுகுமுறைகள் ஏற்கப்பட்டுள்ளன. உயிர் மெய்

எழுத்துக்களை அமைக்க மெய் எழுத்துக்களையும் உயிர் எழுத்துக்களையும் தனித்தனியே இயக்குவது ஒரு முறை. மெய்யெழுத்துடன் தலைப்புள்ளி, கொம்பு போன்ற தனிப்பட்ட அர்த்தமில்லாத வரி வடிவத்திற்கான விசைகளை அமைத்து அடிப்பதும், சில உயிர், மெய் எழுத்துக்களுக்குத் தனிப்பட்ட விசைகளை அமைத்து அடிப்பதும், சில உயிர், மெய் எழுத்துக்களுக்கு தனிப்பட்ட விசைகள் கொடுப்பதும் இரண்டாவது முறை. இதைக் கணிப்பொறியே தீர்மானிக்கும். இவ்வாறு செய்வதற்கு உதவியாக எழுத்து விதிகள் இருப்பது தமிழ் மொழியின் வற்றாத ஆச்சரியங்களில் ஒன்று.

உதாரணம் - அளபெடைகளில் (ஆ, அய், தேஎயம்) தவிர உயிர் எழுத்துக்கள் வார்த்தைகளின் நடுவில் வாரா. தமக்கு முன்னால் உள்ள மெய்யெழுத்துக்களுடன் அவை சேர்ந்து கொண்டு உயிர் மெய்யாகிவிடும். இந்த விதியைப் பயன்படுத்தும்போது விசைப்பலகை மிக எளிதாகிவிடுகிறது. இது தட்டச்சியந்திரத்தின் அணுகுமுறை. தமிழில் தட்டச்சு இயந்திரங்கள் முதன் முதல் வந்தபோது Dead Key என்று ஒற்றெழுத்துக்கான புள்ளி வைக்கும்போது அல்லது இகரத்துக்கான கொம்பு போன்றவை வரும்போது அடுத்த எழுத்துக்கு நகராமல் இருப்பது அவசியமாயிற்று. அதனால் புள்ளி அல்லது கொம்பு தட்டச்சு இயந்திரத்தில் அடிக்கும்போது முதலில் புள்ளியையும் கொம்பையும் அடித்துவிட்டுத்தான் மெய்யெழுத்தை அடிக்க வேண்டும். இது இயந்திரத்தின் தேவை. கணிப்பொறிக்கு அவ்வாறான தடைகள் இல்லை. தமிழில் நாம் கடிதம் எழுதும்போது எப்படி எழுதுகிறோமோ அவ்வாறே விசைகளை இயக்கவும் இயலும். க் எழுதும்போது க புள்ளி தி எழுதும்போது த கொம்பு போடும் இதே வசதி கணினியிலும் முடியும். Dead key தேவையில்லை.

கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் மேற்சொன்ன இரண்டு முறைகளுக்கும் ஆதாரம் ஒன்றுதான் என்பதை உணரலாம். இது எவ்வாறெனில் கி என்பதற்கு

க இ இவைகளை இயக்குவது முதல் முறை.
க ி இவைகளை இயக்குவது இரண்டாவது முறை.

எனவே உயிர் மெய் எழுத்துக்களுக்கு இரண்டு விசைகளை இயக்க வேண்டிய அவசியம் இரண்டு முறைகளிலும் உள்ளது. தட்டச்சு இயந்திர முறையில் ஒரே ஓர் உயிர் மெய் எழுத்துத்தான் ஒரு விசை இயக்கத்தில் உள்ளது. அது ணு, அரிதான எழுத்து. மாறாக கோ, மோ, போ போன்ற நெடில் சேரும் உயிர்மெய் எழுத்துக்களுக்கு மூன்று விசைகளை இயக்க வேண்டும். இரட்டைக் கொம்பு மெய் எழுத்து கால் இப்படி. மற்ற முறையில் மெய் எழுத்து ஓகாரம் போதும். ஆனால் அந்த ஓகாரத்திற்காக, ‘ஷிப்ட்’ விசையையும் இயக்க வேண்டியதால் நெடில் சேரும் உயிர் மெய்யெழுத்துக்களுக்கு இந்த முறையிலும் மூன்று விசைகள் தாம் தேவைப்படும். எனவே இரு அணுகுமுறைகளும் ஒன்றே என்றுதான் சொல்ல வேண்டும். கொ.பொ போன்ற குறில் சேரும் உயிர் மெய் எழுத்துக்களுக்கு மட்டும் முதல் முறையில் விசை இயக்க எண்ணிக்கை குறைவு. அதனால் முதல் முறையில் அடிக்கும்வேகத்தில் லேசான வித்தியாசம் இருக்கும். முதல் முறை அதிகம் வேகமானது என்று சொல்லலாம். இரு முறைகளுக்கும் ஆதாரமான வேறுபாடு விசைகளின் லே-அவுட் மட்டும் தான். இருந்தும்

இருமுறைகளையும் ஒப்பிட்டு வேக வித்தியாசங்களை ஆராயும் ஒரு கட்டுரை தேவைப்படுகிறது.

இட ஒதுக்கத்தில் ஒரு சிறப்பான ஆராய்ச்சிகள் செய்து சிங்கப்பூர் கல்விக் கழகத்தைச் சார்ந்த கோவிந்தசாமி போன்றவர்கள் தமிழ் மொழியில் ஒவ்வொரு எழுத்தும் எத்தனை முறை வழங்குகின்றன என்று Frequency Analysis புழக்க எண்ணிக்கை ஆராய்ச்சி செய்து அதற்கேற்ப சௌகரியமான இடங்களில் அதிகம் வழங்கும் எழுத்துக்களை வைத்திருக்கிறார்கள் ஐ-இ கீபோர்டு என்னும் இந்த முறை ஒரு நல்ல முயற்சியே க,ட,த,ப போன்ற எழுத்துக்களும் ஒற்றெழுத்துப் புள்ளியும்தான் தமிழில் மிக அதிகமாகப் பயன்படுகின்றன என்பது இந்த ஆராய்ச்சியின் அடிப்படை. இதற்கேற்ப அமைக்கப்பட்ட விசைப்பலகை அமைப்பு சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் பரவலாகப் பயன்படுகிறது. இதைக் கற்பிக்க ஓர் எளிய பயிற்சி ஆணைத் தொடரும் மென்பொருளாக ஃபிளாப்பி டிஸ்கில் அமைத்திருக்கிறார்கள். டாக்டர் திண்ணப்பன் தலைமையில் இந்த முயற்சியல் முக்கியப் பங்கேற்ற கோவிந்தசாமி பாராட்டப்பட வேண்டியவர். மலேசியாவில் ‘துணைவன்’ என்கிற லே-அவுட் சில பத்திரிகை அலுவலகங்களில் பயன்படுகிறது. அது புழக்க எண்ணிக்கையின் பேரில் செய்யப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. வல்லினம், மெல்லினம், இடையினம் இப்படி வரிசைப்படுத்தியிருப்பதாக அறிகிறேன். ‘முரசு’ என்கிற லேஅவுட்டும் பயன்படுகிறது.

விசைப்பலகை ஒதுக்கீடு செய்யும்போது Frequency Analysis அடிப்படையில் செய்ய வேண்டுமா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். தட்டச்சு இயந்திரத்தில் விரல்களுக்குச் சோர்வு ஏற்படாமல் இருக்கத்தான் கொஞ்சம் பலமுள்ள ஆள்காட்டி போன்ற முதல் மூன்று விரல்களுக்கு அடிக்கடி பயன்படும் எழுத்துக்களைக் கொடுப்பது வழக்கமாகி இருக்கிறது. இது கணிப்பொறி சார்ந்த லே-அவுட்டுக்கு அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம். இருந்தும் துணைவன் அ-இ இரண்டு லே அவுட்டுகளையும் வேகத்தில் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து இரண்டில் சௌகரியமான ஒன்றை அனைத்துத் தமிழர்களும் பயன்படுத்த வேண்டியது முக்கியம். இதைப் பற்றி உணர்ச்சி வசப்படுவதில் அர்த்தமில்லை. எல்லோரும் ஒரே லே-அவுட்டைப் பயன்படுத்தினால் பயிற்சி எளிதாகி நேர விரயம் குறையும். ஆங்கிலத் தட்டச்சு இயந்திரத்தில் உள்ள QWERTY கீ போர்டை அதில் என்ன குறையிருந்தாலும் எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டில் எத்தனை பத்திரிகைகள் இருக்கின்றனவோ அத்தனை லே-அவுட்கள் இருக்கின்றன. இது கணிப்பொறியாக்கத்துக்கு முக்கியமான தடையாக இருக்கிறது. ஒரு பத்திரிகை அலுவலகத்தில பழகினவர் மற்றொரு பத்திரிகைக்கு செல்லும்போது புதிய லே-அவுட்டுக்குப் பழக ஆறு மாதமாவது ஆகிறது. தீவிரமான நேர விரயம். தமிழ் மொழியின் கணினியாக்க முன்னேற்றத்துக்குத் தடை.

முன்னேற்றம் நிறைந்த சிங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குக் கற்பிக்க வேண்டியது ஏராளம். என்னைக் கேட்டால் சிங்கப்பூரின் ஐ-இ கீபோர்டு என்பதை அங்கீகரிப்பதில் எந்தவித தயக்கமும் இல்லை. இந்தியாவில் கணிப்பொறிக் கழகமும் மத்திய அரசு எலக்ட்ரானிக்ஸ் நுண்ணணு இலாகாவும்

இந்திய மொழிகளின் பொதுத்தன்மையைப் பயன்படுத்தி ஹிந்தி, சமஸ்க்ருதம் போன்ற மொழிகளின் அடிப்படையில் அமைத்த விசைப்பலகை ஒதுக்கீட்டைத் தமிழ் நாட்டில் யாரும் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை ஸி-டாக் என்னும் நிறுவனம் ‘ஜிஸ்ட்’ என்னும் வன்பொருள் ‘ஹார்ட்வேர்’ அமைத்து இந்திய மொழிகளின் வரி வடிவத்தைக் கணிப்பொறித் திரையில் காட்டும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ‘ஜிஸ்ட்’ கார்டை கணினியில் பொருத்தி எந்தவித லே-அவுட் வேண்டுமானாலும் அமைத்துக் கொண்டு எந்த இந்திய மொழியின் வரிவடிவத்தையும் கொண்டுவரலாம். நடைமுறையில் இது இன்னும் பிரபலமாகவில்லை. உண்மை நிலை என்னவெனில், கணினியின் அபாரமான வசதிகளைப் பயன்படுத்தி அவசர அவசரமாக வியாபார நோக்கமுடையவர்கள் தமிழ்மொழியின் அமைப்பு, இலக்கணம், புணர்ச்சி விதிகள் பற்றி எந்த அறிவும் இன்றி அமைத்த அரைவேக்காட்டு முயற்சிகளால் இப்போது சங்கடப்பட்டுக் கெண்டிருக்கிறோம். தேவை - எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு விசைப் பலகை. இதைச் செயல்படுத்துவதில் முன்நிற்க வேண்டியவர்கள் கல்வியாளர்களும், பத்திரிகையாசிரியர்களும், மாநில அரசும், தமிழ்ப் பல்கலைக் கழகம் போன்ற அமைப்புகளும்தான்.

இனி, தமிழன் கணினியாக்கத்தில் மற்ற விஷயங்களுக்கு வருவோம். தமிழில் சாதாரணமாக நிகழும் பல பிழைகளைக் கணினி மூலம் திருத்த முடியும். ஆங்கிலத்தில ஸ்பெல் செக் போல் தமிழில் ஆக்க முடியும். உதாரணமாக - ஒரு ஜோடி மெய் எழுத்துக்கள் இரட்டையாக வரும்போது முதல் எழுத்துத்தான் ஒன்றாக இருக்க முடியும். பட்டம், பக்கம், கப்பம் போன்ற பிரயோகங்களில் எப்போதும் முதலில்தான் ஒற்றெழுத்து வரும். பட்டம், பக்கம், கப்பம் என்று தமிழிலில் வார்த்தைகளே கிடையாது. இதைப் பயன்படுத்தி சில ஒற்றெழுத்துப் பிழைகளைக் கணினியால் திருத்த முடியும். இவ் வகையில் ர, ற பிழைகள் ண,ன பிழைகள் ல,ள பிழைகளையும் கணினியின் மென்பொருள் மூலம் திருத்த முடியும். இதற்கான தேவை ஓர் உச்சரிப்பு அகராதி, தமிழில் எட்டாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி பல நிகண்டுகள் தோன்றியிருக்கின்றன. சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, அகராதி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, கயாதார நிகண்டு, வான நூல் நிகண்டு போன்ற தனிப்பட்ட விஷயங்களைப் பற்றிய நிகண்டுகளும் உள்ளன. நிகண்டு என்பது ஒரு பொருள் பல சொல், ஒரு சொல் பல பொருள், பல பொருள் வார்த்தைகளின் தொகுப்பு. நிகண்டுகள் தயாரிப்பு தற்போது வழக்கொழிந்துவிட்டது துர்பாக்கியமே. தமிழில் ஒரு நவீன நிகண்டு வந்தால் கணினி நிகண்டிலிருந்து ‘நடையழகன்’ என்றுகூட ஒரு மென்பொருள் தயாரிக்க முடியும். கை, கால், நீ, நான் போன்ற ஆதார வார்த்தைகளை விட்டுவிட்டு மற்ற வார்த்தைகள் ஒரு கட்டுரையிலோ, கதையிலோ இரு முறைக்கு மேற்பட்டு வந்தால் மாற்றுவார்த்தைகளைக் கணினியால் கொடுக்க முடியும். வாக்கியம் மிக நீளமான இருந்தால் சுட்டிக்காட்ட முடியும். சந்திப்பிழைகளைத் திருத்த முடியும். இம் மாதிரி ஸ்டைல் செக் மென்பொருள் அமைக்க நவீன நிகண்டு உதவும். பழைய நிகண்டுகளிலிருந்து சில உதாரணங்கள் இவை.

*"நரர் மனிதர் மானுடர் மாணவர் மாக்கள்*
*புருடன் ஆண் ஆடவன் ஆடூஉ- அரிவை பிணா*
*அங்கனை நாரி வனிதை மகடூ மாது*
*மங்கை மடந்தை பெண் பேர்"*

இவ்வாறாக தேவர் பெயர்த்தொகுதி, மக்கள் பெயர்த் தொகுதி, விலங்கு, மரம், இடம் போன்ற தொகுதிகள் பல நிகண்டுகளில் இருக்கும். அதுபோல் ஒரு சொல் பல்பெயர்த் தொகுதிகளும் உள்ளன.

உதாரணம்: *"வாரம் கரை பாகம் அன்பு மருதநிலத்*
*தூபரகலுள் பச்சிலை தண்ணடையாம் - சாரிகை*
*காயா மடமாது பூவை சுசி வெண்மை*
*தீயாடி சுத்தம் குடை"*

என்னும்போது வாரம் என்பதற்கு நீர்க்கரை. பங்கு அன்பு தண்ணடை என்றால் மருதநிலத்தூர், நாடு, பச்சிலை பூவை என்பது நாகணவாய்ப் பட்சி, காயாமரம், வெண்சுசி என்றால் வெண்மை, நெருப்பு, ஆடி மாதம், சுத்தம், வெண்கொடை, இவ்வாறான அபாரமான நிகண்டுகளுக்குக் கணிப்பொறி உலகில் புதிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழ்மொழி இந்திய மொழிகளில் ஒரு தனிச்சிறப்புக் கொண்டது கூட்டெழுத்துக்களே இல்லை. மற்ற எந்த இந்திய மொழிகளிலும் கணினியாக்கத்துக்கு முக்கியமான இடர் வரி வடிவங்களின் அதிகப்படியும் ஒத்தாக்ஷரங்கள், சம்யுக் தாக்ஷரங்கள் என்று சொல்லப்படும் கூட்டெழுத்துக்களுக்கும் அவை கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் எழுத்தின் மேலும் கீழும் தொத்திக் கொண்டு தொந்தரவு தரும். இதை ஸூப்பர் ஸ்கிரிப்ட் ஸப்ஸ்கிரிப்ட் என்பர். இவைகளைத் திரையில் வரைவதில் கணிப்பொறிக்கு எந்தத் தொந்தரவும் இல்லை ஆனால் அடையாளம் கண்டுகொள்வதில் சிரமம் உள்ளது. 'ஒஸிஆர்' ஆப்டிக்கல் காரக்டர் ரெக்கக்னிஷன் என்னும் எழுத்துப் பரிச்சய இயல் இருக்கிறது. அதன் மூலம் எழுத்துக்களின் வரிவடிவங்களை அடையாளம் கண்டு கொள்ள கணினியால் முடியும். ஆங்கிலத்தில் மிகச் சிறப்பாகச் செய்கிறார்கள் இந்திய மொழிகளில் ஒஸிஆர் கொண்டுவர மிகவும் ஏற்ற மொழி தமிழ்தான். காரணம், அதன் எழுத்துக்கள் தனித்தனியானவை. அவைகள் ஒட்டிக் கொள்வதில்லை. வரிக்கு மேலும் கீழும் சிக்கலான வடிவங்கள் எடுப்பதில்லை இதனால் கணினித் தமிழை அடையாளம் கண்டுகொள்ள மென்பொருள் அமைப்பது மிகவும் சாத்தியம். இந்த வகை ஆராய்ச்சியைப் பல்கலைக் கழகங்களில் எடுத்துக்கொண்டால் விளையக்கூடிய நன்மைகள் ஏராளம். அண்மையில் மலையாள மொழியின் வரிவடிவத்தைத் தமிழ்போல் நேராக எழுதும் முறைக்கு மாற்றிக்கொண்டது கணினியாக்கத்தை எளிமைப்படுத்துவதற்கே என்பதைக் குறிப்பிட வேண்டும். கணிப்பொறிகளால் தமிழ் கையெழுத்தில் காகிதத்தில் எழுதியதை அழகாக அச்சடித்துக் கொடுக்க முடியும். அச்சடித்த பக்கங்களை வாசித்து மிகச்சுருக்கமான அடர்த்தியாக 'டிஸ்க்' காந்த தகட்டில் சேகரித்து வைத்துக்

கொள்ள முடியும். அதை விட முக்கியம், எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் கண் தெரியாதவர்களுக்கும் கணினியால் தமிழில் படித்துக்காட்ட முடியும். வாய்ஸ் சின்தஸைஸர் என்னும் சில்லு மூலம் இயலும். இதற்கான தமிழ் மொழியின் ஒலியகன்களை ஃபோனிம்களை அடையாளம் காட்ட வேண்டும். வல்லினங்களைத் தவிர மற்ற எழுத்துக்கள் தமிழில் ஒரு ஒலிதான் பெற்றவை. தமிழைக் கணினி மூலம் படிக்க ஓர் ஆராய்ச்சி பாண்டிச்சேரி அரவிந்த ஆசிரமத்தின் கணிப்பொறி பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். அந்த ஆராய்ச்சிகளை இங்கேயும் செய்யலாம். முன்னேற்ற நாடுகளில் உள்ள தமிழர்கள் எல்லாம் அதிர்ஷ்டசாலிகள். அவர்களுக்கு உலகின் சிறந்த கணிப்பொறிகளைக் கையாள வாய்ப்புகள் உள்ளன. உலகின் தலைசிறந்த மென்பொருள் ஸாப்ட்வேர் அவர்களுக்குக் கிடைக்கிறது. இந்த சலுகைகளையும் தமிழ்ப் பற்றையும் இணைத்துத் தமிழ் மொழியை இருபத்தோராம் நூற்றாண்டின் வாசலுக்கு அழைத்துச் செல்ல நாடு பின்பற்றலாம்.

# பாரதியார் பல்கலைக்கழகம்

## கோயம்புத்தூர்- 641 046.

(அனைத்து இளநிலைப் (UG) பட்டவகுப்பு மாணவர்க்குரியது)

(B.A.,B.Sc.,B.Com.,B.B.M.,B.C.S.,etc.)

2010-2011 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது

பகுதி I தமிழ்த் தாள்-2 இரண்டாம் பருவத்தில் அலகு-5 க்குரிய பாடப்பகுதி

மற்றும்

பகுதி IV தமிழ்த் தாள்-2 நான்காம் பருவத்தில் அலகு-2 க்குரிய பாடப்பகுதி

மற்றும்

பகுதி IV சிறப்புத் தமிழ்த் தாள்-2 நான்காம் பருவத்தில் அலகு-5 க்குரிய பாடப்பகுதி

# தமிழ்ச் செம்மொழி வரலாறு

### மொழி - விளக்கம்

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை; மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல்; அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு ஒத்து வளர்ந்து வருவது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது; மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

பலர் சேர்ந்து ஒரு சமுதாயமாய் ஓர் இனமாய்ப் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. பலர் ஓர் இனமாய் வாழ்கின்றனர் என்பதற்கு உண்மையான அறிகுறி அவர்களின் நிறம் முதலிய எவையும் அல்ல; அவர்கள் பேசும் மொழியே உண்மையான அறிகுறி எனலாம். சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழியே, அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. சமுதாயத்தால் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருவது மொழி எனலாம்.

மனிதனது மனத்தை விடுத்து ஆராய்ந்தால், மொழியைப் பற்றி அறியத்தக்கதாக ஒன்றும் இல்லை. மொழியை வளர்த்தது மனமே; மனத்தின் இயற்கையைக் காட்ட வல்லதாக மனத்தின் எதிரொளியாக(பிரதிபலிப்பதாக) உள்ளது மொழியே. மனிதரின் தொடர்பு இல்லாமல் தனியே வளர்ந்து வாழ வல்லது என மொழியைப் பற்றிக் கருதுதல் பொருந்தாது. பேசும் மக்களை விட்டுத் தனியே மொழி என்பது இல்லை. மனிதர் ஒவ்வொருவரின் அறிவின் ஆழத்திலும் மொழி வேர்கொண்டுள்ளது. அங்கிருந்தே மொழி வளர்ச்சி பெற்று விளங்குகிறது.

## மொழிநிலை

அடிச்சொற்கள் (roots) இரண்டு சேருங்காலத்தில் அவற்றுள் ஒன்று சிதையாமல் நிற்க, மற்றொன்று சிதைதல் உண்டு. இவ்வாறு அடிச்சொல் இரண்டும் பலவும் ஒட்டி நிற்கும் நிலை, ஒட்டுநிலை (Agglutination) என்பது 'கண்ணன் பார்த்தான்' என்னும் தமிழ் வாக்கியத்தில் 'கண்ணன்' என்ற சொல் ஒட்டு நிலையாக அமைந்ததே. கண் என்ற சொல்லும் 'ஆன்' (அன்) என்ற சொல்லும் ஒட்டி முன்னது சிதையாமல் நிற்க, பின்னது குறுகிக் கண்ணன் என்று ஆயிற்று. பார்த்தான் என்பதிலும் பார் என்பதோடு வேறு சில சேர்ந்து நின்றன.

இச்சொற்களில் முதலில் நிற்கும் கண், பார் என்பவற்றை இலக்கண நூலார் பகுதி என்பர். மொழி நூலார் அடிச்சொல்(roots) என்பர். அவற்றோடு சேர்ந்த விகுதி இடைநிலை முதலியவை இடைச்சொல் எனப்படும். இடைச்சொல் தமக்கென்று பொருளில்லாதவை. தாம் சாரும் பெயர்வினைகளின் பொருளைத் தெளிவாக்குவன. முதலில் இடைச்சொல் என்று ஒருவகைச் சொல் இல்லை என்பதும், பெயர் வினைகளே நாளடைவில் சிதைந்து அவ்வாறு பயன்பட்டன என்பதும் மொழிநூலார் கொள்கை. முழுச் சொற்களாக இருந்த இவை சிதைந்து இடைச்சொற்களாய்ப் பெயர்வினைகளோடு ஒட்டிநிற்றலே ஒட்டுநிலை என்பது.

உலகில் உள்ள மொழிகளில் பெரும்பாலன இந்நிலையில் உள்ளன. சித்தியமொழி என வகுக்கப் பெற்ற மொழிகளும் இவ்வகையினவே. திராவிட மொழிகளும் இவ்வகையினவே. தமிழ் மொழியின் பகுதிகள் பலவும் ஓரசையாக இருத்தலும், அவை இடைச்சொற்களோடு ஒட்டி நிற்றலும் காண்க.

தென் ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களின் பண்டு(Bantu) மொழி. ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களின் மொழி, மலேயா-பாலினேஷியன் மொழி, ஜப்பானிய மொழி, கொரிய மொழி, பின்னிஷ் (Finnish)மொழி, பாஸ்க்(Basque) மொழி முதலான பல மொழிகளும் ஒட்டுநிலையினவே.

அடிச்சொல் இரண்டு சேருங்காலத்து இரண்டும் சிதைந்து ஒன்றுபட்டு நிற்றல் உண்டு. இந்நிலையே உட்பிணைப்பு நிலை(inflection) என்பது. இவ்வகை மொழியில் அடிச்சொல் தெளிவாய் நிற்றல் இல்லை. பகுதி விகுதி முதலியவற்றை எளிதில் பிரித்தறிய இயலாது. ஐரோப்பிய மொழிகள் பலவும் வடமொழியும் இவ்வகையைச் சார்ந்தவை. இவற்றில் பகுதி ஒன்றே பல வகையாய்த் திரிந்து பலவகைப் பொருள் உணர்த்தும். கிரேக்க மொழியில் ஒரு வினைப்பகுதி 268 வகையாய்த் திரியும் என்றும் வடமொழியில் ஒரு வினைப்பகுதி 891 வகையாய்த் திரியும் என்றும் கூறுவர்.

## மொழிக் குடும்பங்கள்

இந்திய மொழிகளைப் பகுத்த ஐரோப்பிய அறிஞர்கள், ஆரியம், திராவிடம், முண்டா, மான்குமேர், திபெத்தோ சீனம் என்று ஐவகை மொழிகள் இந்தியாவில் இருப்பதாகக் கூறியுள்ளனர். எனினும் இந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என்றும், ஆரியத் திராவிட மொழிகள் என்றும், ஆரிய

மொழிகள் என்றும் மூவகையாகப் பாகுபாடு செய்தலே இன்று மொழியாராய்ச்சிக்குப் பொருந்துவதாக உள்ளது.

உலகில் உள்ள மற்ற மொழிகளை ஆராய்ந்தால், சீனமொழிமிகப் பழைமையானது. கொச்சின், சீனா, கம்போடியா முதலிய இடங்களில் உள்ள மொழிகள் அதனோடு உறவு உடையன. அவை அன்னாமியினம்(Annamese group) எனப்படும். சயாம் நாட்டில் பேசப்படுவது தை மொழி எனப்படும். அதுவும் சீன மொழியோடு இயைந்ததே. பர்மிய மொழியும் திபெத் மொழியும் அதனோடு உறவு உடையனவே.

ஐரோப்பாவில் பின்லண்டு முதல் கிழக்கே ரஷ்யா வரையில் வழங்கும் மொழிகள் சித்திய மொழிகள் எனப்படும். துருக்கியிலிருந்து ரஷ்யா வரையில் உள்ள நாடுகளில் வழங்கும் மொழிகள் துரானிய மொழிகள் எனப்படும். அவையும் இந்தச் சித்திய இனத்தைச் சார்ந்தனவே.

ஆரியம் என்று சொல்லப்படுவன வடமொழியாகிய சமஸ்கிருதமும் அதைச் சார்ந்த வடஇந்திய மொழிகளும் மட்டும் அல்ல. கிரீக், இலத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், வெல்ஷ் முதலிய ஐரோப்பிய மொழிகள் பலவும் ஆரிய இனத்தைச் சார்ந்த மொழிகளே. பாரசீகமும் அதைச் சார்ந்ததே.

பாபிலோனிய மொழி, யூத மொழி, ஹீப்ரு மொழி, பினீசிய மொழி, அரபிமொழி, எகிப்துமொழி, அபிசீனிய மொழி, எத்தியோப்பியமொழி முதலியவை செமிட்டிக்(Semitic) இனம் எனக் கூறப்படும். இவை அரேபியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் வழங்குவன.

பார்னு, பூலா, புஷ்மன் முதலிய மொழிகள் மத்திய ஆப்பிரிக்காவில் வழங்குவன; உலாப்(Wolof) இனம் எனப்படும். ஜப்பான் மொழி தனிவகையானது. ஐரோப்பாவில் ஸ்பெயினுக்கு வடக்கே வழங்கும் பாஸ்க் மொழியும் தனிவகையானது. எஸ்கிமோப் பேச்சுக்களும் வேறு வகையானவை. அமெரிக்காவில் நாகரிகம் இல்லாத மக்கள் பேசிவந்த மொழிகள் வெவ்வேறு பெயரால் வழங்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களின் மொழிகள் திராவிட மொழிகளோடு தொடர்பு உடையன என்று கருதிவந்தனர். போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. மலேயா, ஜாவா, பாலினேஷிய மொழிகள் வேறு வேறாக உள்ளன.

**உலகச் செம்மொழிகள்**

உலகச் செம்மொழிகள் என்று கி.பி.18 ஆம் நூற்றாண்டு வரை கிரேக்கமும், இலத்தீனும் மட்டுமே கருதப்பட்டன. ஐரோப்பிய நாகரிகத்தின் ஆணி வேராகத் திகழ்ந்த கிரேக்க நாட்டிலும் உரோமநாட்டிலும் முகிழ்த்தெழுந்த இவ்விரு மொழிகளும் ஐரோப்பியப் பண்பாட்டு ஆதிக்கம் மேலோங்கியிருந்த காலகட்டங்களில் உலகச் செம்மொழிகள் என்னும் தகுதிப்பாட்டினைப் பெற்றன. இவ்விரு பண்பாடுகளின் தாக்குரவு பெற்ற கலைகள் அனைத்தும் செவ்வியல் கலைகள்(Classical arts)ஆயின.

**கிரேக்க மொழி**

கிரேக்க மொழியைப் பொறுத்தவரையில் கி.மு. 475 முதல் 448 வரையுள்ள காலத்தைக் கிரேக்கச் செவ்வியல் காலமென்றும் கி.மு. 448 முதல் 400 வரையுள்ள காலத்தை இடைச்செவ்வியல் காலமென்றும் வரையறுக்கும் மரபு உள்ளது. இக்கால கட்டத்தில் கிரேக்க இலக்கியங்கள் கிரேக்க தேசியக் கலாச்சாரப் பாதிப்புகள் அதிகமின்றியும் வளர்ந்ததால் அது செவ்வியல் காலம் என்று சுட்டப்படுகின்றது. சிலர் பெரிக்கிளிஸ் மன்னர்களின் காலத்தைக் கிரேக்கச் செவ்வியல் காலமென்று குறிப்பிடுகின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் ஏகிலஸ், சோபாகிளிஸ், சாக்கரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களின் வளமான படைப்புகள் தோன்றிய காலகட்டமே செவ்வியல் காலமாகச் சுட்டப்படுகின்றது.

இலியத், ஒடிசி என்றும் ஆதிக் காப்பியங்கள் கிரேக்க இலக்கிய வரலாற்றில் தொன்மைமிக்க படைப்புகளாக அமைந்துள்ளன. இக்காப்பியங்களைத் தொடர்ந்து சாபோ(Sappho) கொரினா(Corinna) என்னும் இரு பெண்பாற் கவிஞர்களின் தன்னுணர்வு சார்ந்த படைப்புகளும், அனகிரியோன் (Anacreon) போன்றோர்களின் படைப்புகளும் கிரேக்க நாட்டில் தோற்றம் பெற்றன. இக்கால கட்டத்தில் பிண்டார் போன்ற பெருங்கவிஞர்களின் குழுப்பாடல்கள் கிரேக்க இலக்கிய வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமையங்களாக அமைந்தன. இவற்றைத் தொடர்ந்து ஏதென்சு நகரைச் சார்ந்த ஏகிலஸ், யூரிபைட்ஸ், ரோபோகிளிஸ் போன்றோரின் துன்பியல் நாடகங்கள் கிரேக்க மண்ணில் மலர்ந்தன. கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் துசிடைட்ஸ்(Thucydides) ஹிரோடோட்டஸ்(Herodotus) போன்றோர் அரிய வரலாற்று நூல்களைப் படைத்துக் கிரேக்கமொழிக்கு வளம் சேர்த்தனர். சாக்கரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற மிகப்பெரிய தத்துவ மேதைகளும், அறிஞர்களும் இவர்களைத் தொடர்ந்து கிரேக்க மண்ணில் உதித்தனர். கணித மேதையான பித்தகோரஸ் போன்ற மாமேதைகள் இக்காலகட்டத்தில் கிரேக்க இலக்கிய வீதிகளில் வலம் வந்தனர் சிற்பம், கட்டடக்கலை போன்றன இக்காலத்தில் உச்ச நிலையை அடைந்தன. கிறிஸ்துவுக்குப் பின்னர்க் கிறித்துவத் திருமறையின் புதிய ஏற்பாட்டுப் பகுதி கிரேக்க மொழியில் அழகுற எழுதப்பட்டது. அதற்கு முன்னர்ப் பழைய ஏற்பாடு எபிரேயமொழி தெரியாத யூதர்களுக்காகக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்து எழுதப்பட்டது. செம்மொழியான கிரேக்க மொழி அதிகம் மாற்றம் பெறாமல் இன்றும் பேசப்படும் உயிரோட்டமுள்ள மொழியாகத் திகழ்கின்றது, இந்நிலையில் தமிழைப் போன்று கிரேக்கமும் செம்மொழி, வாழும் மொழி என்னும் இரட்டைத் தகுதிப்பாடுகளைப் பெற்றுச் சிறப்பது குறிப்பிடத்தக்கது.

**இலத்தீன் மொழி**

கிரேக்கத்திற்கு அடுத்த நிலையில் இடம்பெறும் மற்றொரு செம்மொழியான இலத்தீன் தற்போது வழக்கிழந்த மொழியாகிவிட்டது. எனினும் இன்றைய பேச்சு வழக்கிலுள்ள ருமேனியன், இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானிஸ், போர்த்துகீசியம் ஆகிய மொழிகளுக்கு இலத்தீன்மொழி ஆணிவேராக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கி.மு. 3 ஆம்நூற்றாண்டிலிருந்து இலத்தீன் மொழி எழுச்சி பெற்றுள்ளதைக் காண்கிறோம். உரோம நாட்டின் வளர்ச்சியும், கிரேக்கத்தை அது வீழ்த்திய நிகழ்ச்சியும் இலத்தீன்மொழியின் எழுச்சிக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளன. கிரேக்கர்களை அடிமைகளாகச் சிறைப்படுத்தி உரோமுக்குக் கொண்டுவந்து அவர்கள் வாயிலாக உயர்குடியைச் சார்ந்த உரோம நாட்டு மக்களுக்குக் கல்வி தரப்பட்டபோது இலத்தீன்மொழியும் பெருமளவிற்கு விரிவடைந்து வளரத் தொடங்கியது எனலாம். தொடக்கநிலையில் கிரேக்க நூல்கள் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. காலப்போக்கில் கவிதைகளும், நாடகங்களும் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன.

கி.மு. 70 முதல் கி.பி. 20 வரையுள்ள காலகட்டம் உரோமநாட்டின் பொற்காலம் என வரையறுக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தலைசிறந்த எழுத்தாளர்களும், தன்னிகரற்ற வீரர்களும், கவிஞர்களும், நாடக மேதைகளும்,பேச்சாளர்களும் இந்நாட்டில் தோன்றினர். ஜூலியஸ் சீசர் வாழ்ந்த இக்காலத்தில் சிசரோ போன்ற மிகச் சிறந்த இலக்கியவாதிகளும், கவிஞர்களும் வாழ்ந்தனர். வர்ஜித், ஹாரஸ், பிராப்பர்டியஸ்(Propertius), திபுலஸ்(Tibulis), ஆவிட்(Ovid), லிவி(Livy) போன்ற உலகப்பெரும் எழுத்தாளர்களின் காலமிது. அறிவியலும் தத்துவமும், வரலாற்று நூல்களும் இக்காலகட்டத்தில் பெருமளவில் மலர்ந்து கிரேக்க நாட்டிற்கு இணையான அறிவுக் கருவூலங்களை ஓரளவு இலத்தீன் மொழியில் தோற்றுவித்தன. எனினும் கிரேக்கத்தோடு ஒப்பிடும் அளவுக்கு இலத்தீன் மொழியின் இலக்கிய வளம் உயர்ந்ததன்று என்பதே வரலாற்றுத் திறனாய்வாளர்களின் உண்மையான கணிப்பு ஆகும்.

உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் மேற்கு ஐரோப்பாவில் இலத்தீன் மொழி முக்கிய இடத்தைத் தொடர்ந்து வகித்தது. இதற்குக் காரணம் இது கிறித்தவத் திருச்சபையின் மொழியாகத் திகழ்ந்ததுவேயாகும். தூய ஜெரோம் கி.பி. 5 இல் கிறித்துவத் திருமறையை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். இதைத் தொடர்ந்து ஏறத்தாழ 1000 ஆண்டுகளாகத் தத்துவம், இறையியல், அறிவியல், வரலாறு ஆகியவற்றின் மூலமொழியாகவும் மேற்கு ஐரோப்பிய அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பண்பாட்டு ஆராய்ச்சிப் பரிமாற்றக் கருவியாகவும் இலத்தீன் மொழி திகழ்ந்தது. கிரேக்கமும், இலத்தீனும் ஐரோப்பியப் பண்பாட்டின் ஆணிவேராகவும் அடித்தளமாகவும் அமைந்தன. இதனால் தாய்மொழி எதுவாக இருப்பினும் ஐரோப்பிய அறிஞர்களின் தகுதிப்பாட்டை அளக்கும் கருவியாகவும், அளவுகோலாகவும் கிரேக்க, இலத்தீன் மொழியறிவு அமைந்துவிட்டது.

**ஆசியச் செம்மொழிகள்**

செம்மொழிகள் எவை என்று ஐரோப்பியப் பண்பாட்டில் வரையறுக்கப்பட்டு அவற்றிற்குரிய தகுதிப்பாடுகள் வழங்கப்பட்டது போன்று மேற்கு ஆசியாவிலும், தெற்கு ஆசியாவிலும் இவை போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றின் விளைவாக ஆசிய நாட்டின் பல மொழிகள் செம்மொழிகள் வரிசையில் இடம்பெறத் தொடங்கின. எனினும், இவை உலகச் செம்மொழிகள் என்ற பொதுநிலையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவற்றுள், தெற்காசியாவில் முகிழ்த்த இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சமற்கிருதம் மட்டுமே கி.பி.18ஆம்

நூற்றாண்டிற்குப் பின்னர் உலகச் செம்மொழிகளின் வரிசையில் இணையும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

**எபிரேய மொழி**

ஐரோப்பாவிற்குக் கிழக்கில் அமைந்த நடுகிழக்கு நாடுகள் (Middle East Countries) ஆசியச் செம்மொழிகளின் ஓர் உட்பிரிவின் பிறப்பிடமாக உருப்பெற்றன. இப்பகுதிகள் செமிட்டிக், அரபி, எபிரேயம் ஆகிய மொழிக்குடும்பங்களின் தொட்டிலாகவும் வளர்ப்புப் பண்ணையாகவும் திகழ்ந்தன. இவற்றுள் கி.மு.1200 முதல் பழைமை பெற்று விளங்கும் ஓர் உயரிய மொழி எபிரேய மொழியாகும். இம்மொழியில் எழுதப்பட்ட கிறித்துவத் திருமறையின் பல புத்தகங்கள் காலத்தால் மிகவும் தொன்மையானவை. யூத சமயத்தோடு பின்னிப் பிணைந்து வளர்ந்த ஏராளமான கவிதைகளும் உரைநடை இலக்கியங்களும் 3000 ஆண்டுகளுக்குமுன் எபிரேய மொழியில் வளர்ந்து செழித்தன. யூத சமுதாயம், சமயம் ஆகியன தொடர்பான சட்டநூல்கள் இவற்றுள் முதன்மையானவை எனலாம். இம்மொழியின் வரலாறு கி.பி. 12 வரை தொடர்ந்தது. தத்துவம், கணிதவியல் தொடர்பான எண்ணற்ற நூற்களை இக்காலகட்டத்தில் எபிரேய மொழி தோற்றுவித்தது. எனினும் எபிரேய மொழி பேச்சு மொழியாகத் தொடரவில்லை. அரமெய்க் மொழியே இப்பகுதியின் பேச்சு மொழியாகத் தொடர்ந்தது. இசுரேல் நாட்டு தேசிய மொழியாகத் தற்போது எபிரேயம் ஏற்றம் பெற்றுப் புதுப்பொலிவும் பெற்றுப் பேச்சு மொழியாகவும் வளர்ந்து சிறப்பது குறிப்பிடத்தக்கது.

**அரபி மொழி**

நடுகிழக்கு நாடுகளின் மற்றொரு செம்மொழியான அரபிமொழியின் தொடக்க நிலைப்படைப்புகள் வாய்மொழி இலக்கியங்களாகவே அமைந்தன. கி.பி. 6 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்த வாய்மொழி இலக்கிய மரபுகள் மிகச் சிறப்பாக இம்மொழியில் வளர்ச்சி பெற்றுள்ளன. இசுலாமிய சமயத்தின் தோற்றம் அரபிமொழி ஒரு செம்மொழியாக மலரத்துணை நின்றது. முகமது நபியின் உரைகள் கி.பி. 632 இல் திருக்குரானாக இம்மொழியில் எழுத்து வடிவம் பெற்றன.

காதலைப் பாடும் இலக்கியங்கள் இசுலாமிய சமயத்தாரின் கண்டனத்துக்குட்பட்ட போதிலும் கிறித்தவர்களால் பேணி வளர்க்கப்பட்ட கேசல்(ghazal) காதற் பாடல்கள் கி.பி.7 ஆம் நூற்றாண்டிற்குப் பின் அரபி மொழியில் வலுவடைந்தன. இதையொட்டி கி.பி.8ஆம் நூற்றாண்டில் அரபி மொழியின் பொற்காலம் தொடங்கியது. பாக்தாத் நகரை மையமாகக் கொண்டு தொடங்கிய இப்புதிய இலக்கிய யுகம் ஏறத்தாழ 300 ஆண்டுகள் தொடர்ந்தது. இவற்றின் விளைவாகப் புதிய வகையான கவிதைக் குவியல்கள், புதுப்புது இலக்கிய உத்திகள், புதிய உணர்த்தும் முறைகள் ஆகிய இக்காலகட்டத்தில் மிகச் சிறப்பாக அரபிமொழியில் உதயமாயின. இக்காலத்தில் உரைநடை இலக்கியம் உச்சநிலையினை எய்தியது. கணிதம், வேதியியல், மருத்துவம் போன்ற துறைகளில் சிரியமொழி (Syrian) வாயிலாகக் கிரேக்கத் தாக்கம் அரபிமொழியில் அழுத்தமாகப் பதிந்தது. கி.பி.9 ஆம் நூற்றாண்டில் மொழியியல், சட்டம், புவியியல், வரலாறு போன்றன தொடர்பான அரிய

படைப்புகள் இம்மொழியில் மிகப்பெருமளவில் எழுந்தன. அரபிச் செம்மொழி என்பது குரானை மட்டும் மையமாகக் கொண்டதல்ல என்பதும் அது பல துறைகளைத் தழுவி வளர்ந்த இம்மொழியின் முழுப் பரிமாணத்தையும் உள்ளடக்கியது என்பதும் குறிப்பிடத்தக்கன.

**பார்சி மொழி**

இசுலாமிய சமயத்தின் பரவுதலாலும் அரபியின் பாதிப்பாலும் வலுப்பெற்றுச் செம்மொழித் தகுதிப் பாட்டொடு வளர்ந்த மற்றொரு மொழி பர்சியன் அல்லது பார்சி மொழி என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இம்மொழியின் வளர்ச்சி நிலையினைக் கி.மு.6ஆம் நூற்றாண்டிலிருந்து அறிவதற்குத் தக்க சான்றுகள் பல உள்ளன. எனினும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே மிகப்பெரிய வளர்ச்சியினை இம்மொழியில் காணமுடிகின்றது. தொடக்கநிலையில் அரபிமொழியின் தாக்கம் பார்சி மொழியில் மிகுந்திருந்தது. காலப்போக்கில் பார்சியின் தாக்கம் அரபி மொழியில் பெருமளவிற்கு ஏற்பட்டது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டளவில் பார்சிய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் தனித்தன்மை வாய்ந்த பார்சி இலக்கியங்கள் உருவாகின. இவற்றைத் தொடர்ந்து இரு நூற்றாண்டுகளில் அரிய பல காப்பியங்களை இம்மொழி உலகிற்குத் தந்தது. தத்துவம், கணிதம், வரலாறு தொடர்பான அரிய கலைக் கருவூலங்களும் இக் காலகட்டத்தில் எழுந்தன. இத்தகைய வளமான வளர்ச்சியால் பார்சி மொழி செம்மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையினைப் படிப்படியாக எய்தியது.

**சீனமொழி**

கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய மொழியான சீன மொழி சமற்கிருதத்தைப் போன்று மிகப் பழைமையான மொழியாக அமைகின்றது. கி.மு.14ஆம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்ற இம்மொழி, வாழும் மொழியாகவும், உலகின் பெரும்பாலோர் பேசும் மொழியாகவும் மலர்ந்துள்ளது வியப்புக்குரியது. இதன் தொடக்க இலக்கியங்கள் கி.மு. 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. இசையோடும் நடனத்தோடும் இணைந்த இம்மொழியின் தொடக்ககாலப் பாணர் மரபு கவிதைகள் (bardic poetry), சௌ மன்னர்களின் (Chou dynasty) காலத்தைச் சார்ந்தவை. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் இம்மொழியில் தத்துவப் படைப்புகள் ஏராளமாகப் பெருக்கெடுத்தன. லாவோட்சுவின் எழுத்துக்களும், கன்பூசியசின் சிந்தனைகளும் இந்த வரிசையில் குறிப்பிடத் தகுந்தவை. இக்கால கட்டத்தையொட்டி சீன மொழியில் (Lyrical poetry) இசைப்பாடல்களும் கதைபொதி பாடல்களும் (Ballads) பெருமளவிற்குத் தோன்றின. எனினும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆண்டு வரையிலான காலமே சீன இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. இக்கால கட்டத்திற்குப் பின்னர் நாவல் இலக்கியப் படைப்புகளும் நாடக இலக்கியங்களும் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை பெருமளவிற்குத் தோன்றின. இவற்றில் இந்திய பாரசீகப் பண்பாட்டுத் தாக்கங்களைப் பெருமளவிற்குக் காணமுடிகின்றது. சீனமொழி ஆசிய நாடுகளின் செம்மொழிகளுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

**ஜப்பானிய மொழி**

சீனமொழியொடு தொடர்புடைய மற்றுமொரு பழைமை வாய்ந்த மொழியாக ஜப்பானிய மொழி அமைகின்றது. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் எழுச்சி பெற்ற ஜப்பானிய மொழி இலக்கியச் சிறப்புமிக்க மொழியாக அமைந்த போதிலும் இது உலகச் செம்மொழி வரிசையில் வைத்து நோக்கப்படவில்லை. அரபி மொழியைப் போன்று தொன்மைச் சிறப்பு இல்லாத போதிலும் அரபி மொழிக்குத் தரப்பட்ட செம்மொழித் தகுதிப்பாடு ஜப்பானிய மொழிக்குத் தரப்படவில்லை. இதற்குக் காரணம் சீனமொழியின் ஆதிக்கத்திற்கு அதிக அளவில் இது இடங்கொடுத்ததேயாகும். ஜப்பானிய வரிவடிவ அமைப்பு சீனமொழிக்கு மாறுபட்ட போதிலும் சீன மொழியின் வரிவடிவம் ஜப்பானிய மொழியில் பெருமளவிற்கு இடம்பெற்றது செம்மொழித் தகுப்பாட்டினை இம்மொழி பெறாமைக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது எனலாம். கி.பி. 9 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட ஜப்பானிய மொழி சீனமொழியின் ஆதிக்கத்தைப் பெருமளவிற்குத் தவிர்த்துள்ளது. இக்காலகட்டத்தில் இம்மொழி பன்முகப் படைப்புக்களைத் தந்துள்ளது. ஜப்பானிய மொழியில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட மன்யோக நூலின் கவிதைகள் சங்க அகப் பாடல்களைப் போன்றே அமைவது குறிப்பிடத்தக்கது. இலக்கியவளம் மிக்க ஜப்பானிய மொழியும் செம்மொழிகளுள் ஒன்றாகக் கருதும் தகுதிப்பாடுடையது என்பதில் எந்த ஐயமுமில்லை.

**இந்தியச் செம்மொழிகள் - சமஸ்கிருத மொழி**

தெற்கு ஆசியாவில் சமற்கிருதமும், தமிழும், பாலியும் உயர்தனிச் செம்மொழிகளாக ஏற்றம் பெற்றன. சமற்கிருத மொழி பன்முகத் தகுதிப்பாடுகளைப் பெற்றுத் திகழ்ந்ததால் காலப்போக்கில் உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக ஏற்றம் பெற்றது. சமற்கிருத இலக்கிய வரலாற்றில் 3500 ஆண்டுகளுக்கு முன்னரே வேதகால சமற்கிருதம் எழுச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வேதகால சமற்கிருத இலக்கியங்கள் சமயம் சார்ந்தனவாக அமைந்தபோதிலும் அவற்றிற்குப் பின்னர்த் தோன்றிய சமற்கிருத இலக்கியப் படைப்புகள் பல்வேறு துறைகளையும் பல்வேறு வகைப்பாடுகளையும் தழுவி நின்று வளர்ந்தன என்பது சுட்டத்தக்கது. இம்மொழியில் பிறந்த மகாபாரதமும், வால்மீகியால் கலைவடிவம் பெற்ற இராமாயணமும், இந்து சமய உலகொடு மட்டும் நின்றுவிடாது கிழக்கிலும், மேற்கிலும் பரந்து பரவி பல்வேறு மொழிகளில் பெருந் தாக்குரவுகளை ஏற்படுத்தின. இப்பெருங் காப்பியங்கள் அல்லது இதிகாசங்களைத் தொடர்ந்து 36 வகைப் புராணங்களும், தந்திர நூல்களும், காவியங்களும் இம்மொழியில் எழுந்தன. பல்வேறு தன்னுணர்ச்சிப் பாடல்களும், நாடகங்களும் பெருமளவிற்குப் படைக்கப்பட்டன. பாணினியின் அஸ்டத்தியாதி ஒப்பற்ற மொழிநூல் படைப்பாகவும் அறிவியல் பூர்வமான மொழியாய்வு நூலாகவும், பேரிலக்கணமாகவும் மலர்ந்தது. காத்யாயனா, பதஞ்சலி, பர்தரஹரி போன்றோர் அரிய பல்துறை தழுவிய படைப்புகளைத் தந்து சமற்கிருத இலக்கியச் சோலையை வளப்படுத்தினர். காளிதாசரின் படைப்புகள் இம்மொழியின் தன்னேரற்ற இலக்கியக் கருவூலங்களாகத் திகழ்ந்தன. கிரேக்க இலக்கியத்திற்கு இணையாகக் கவிதையியலும், பாட்டியலும், அலங்காரநூல்களும் இம்மொழியில் பெருகின. கவுடில்யரின் அர்த்தசாஸ்திரம் போன்ற பல்துறை சார்ந்த படைப்புகள் இம்மொழியில்

பெருக்கெடுத்தன. இவையனைத்தும் இம்மொழிக்கு உலகப் புகழினை ஈட்டித்தந்தன.

**பாலிமொழி**

இந்திய நாட்டின் பழைமை வாய்ந்த மொழிகளுள் ஒன்றாகப் பாலி மொழி அமைகின்றது. கி.மு.3 ஆம் நூற்றாண்டைய தேரவாத பௌத்தக் கோட்பாடுகள் இம்மொழியில் வாய்மொழியாக வழங்கப்பட்டு கி.மு. முதல் நூற்றாண்டளவில் அவை இம்மொழியில் வரிவடிவம் பெற்றுள்ளன. பாலி மொழியில் எழுந்துள்ள நூல்கள் பௌத்த சமயச் சார்புடையன. தம்மபதம், ஜாதகக் கதைகள், திரிபிடகம் ஆகியன இம்மொழியின் சிறப்பு வாய்ந்த நூல்களாகும். பாலி மொழி இலக்கியங்கள் சமயச் சார்புடையனவாக அமைந்தபோதிலும் பல்வேறு வகைப்பட்டன(Variety) வாகப் பரந்து சிறப்பதாலும், தொடக்காலம் முதல் இன்றளவும் உலகின் பெருஞ் சமயங்களுள் ஒன்றான பௌத்தத்தின் சிந்தனைகளைத் தாங்கி நிற்பதாலும் இலங்கைத் தீவில் திகழும் சிங்களப் பண்பாட்டின் அடித்தளமாக அமைவதாலும், தாய்லாந்து, பர்மா போன்ற தென்கிழக்காசிய நாடுகளின் பண்பாட்டுப் பாரம்பரியங்களின் ஆணிவேராகப் பொலிவதாலும் இதனையும் உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை நிலவுகின்றது. வேதகால இந்து சமயத்திற்கு எதிரிடையான, பௌத்த சிந்தனைகளைப் பேச்சுமொழியில் பரப்ப உகந்த மொழியாகப் பாலி மொழியினைப் பௌத்தர்கள் தொடக்க நிலையில் ஏற்றுப் போற்றினர். எனினும், பௌத்த நூல்களின் எழுச்சியால் பேச்சுமொழியான பாலிமொழி காலப்போக்கில் இலக்கிய மொழியாக மலர்ந்து செம்மொழித் தகுதிப்பாட்டினைத் தொட்டு நிற்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ் மொழி**

சமற்கிருதத்திற்கு இணையான வரலாற்றுத் தொன்மையினையும், இலக்கிய இலக்கணத் தனித்தன்மையினையும் பெற்றுச் சிறக்கும் தமிழ்மொழி இந்திய மொழிக் குடும்பங்களுள் மிகப்பெரிய மொழிக் குடும்பமாகத் திகழும் திராவிடமொழிக் குடும்பத்தின் தலைமை வாய்ந்த மொழியாக வளர்ந்துள்ளது. பாணினிக்கு இணையான அல்லது பாணினியின் படைப்பையும் விஞ்சும் திறன்கொண்ட இலக்கணப் பண்பாட்டு நூலான தொல்காப்பியமும், கிரேக்கச் செம்மொழிக் கவிதைகளை விஞ்சும் சங்கப் படைப்புகளும், தன்னேரில்லாத தமிழ் மறையான திருக்குறளும், புரட்சிக் காப்பியங்களான சிலம்பும், மேகலையும் ஏனைய பிற இலக்கிய இலக்கணக் குவியல்களும் தமிழை உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக இணைத்து ஏராளமான வெளிநாட்டுஅறிஞர்களைக் காணச் செய்துள்ளன.

கிரேக்க மொழியினைப் போன்று செம்மொழித் தகுதிப்பாட்டினையும், வாழும் மொழி என்ற ஏற்றத்தினையும் தமிழ்மொழி ஒருங்கே பெற்றுச் சிறக்கின்றது. “என்று பிறந்தவள் என்றறியா இயல்பினள் எங்கள் தாய்” என்று பாரதியாரைப் பாடவைத்த இந்தமொழி சித்திய மொழிகளோடும், செமிட்டிக் மொழிகளோடும், ஏலாமைட் மொழிகளோடும், உரல் அல்டெயிக் மொழிகளோடும், கிரேக்க இலத்தீன் மொழிகளோடும் உறவு கொண்டுள்ள ஒரே இந்திய மொழி என்பதைப் பல்வேறு அறிஞர்களும் ஆய்ந்து காட்டியுள்ளனர். இம்மொழியின் வேர்களும், விழுதுகளும் பாரெங்கும் பரவி

நிற்கும் பரந்து விரிந்த இப்பாங்கினை விரிவாய்வு செய்யும்போது உலக மொழிகளின் தாயாக இலங்கும் உயரிய சிறப்பை இது பெற்றிருப்பதை நிலைநாட்ட முடியும். இத்தகைய ஆய்வுகள் உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக இணையும் சிறப்பினைத் தமிழுக்கு நல்கும் என்பது உறுதி.

**செம்மொழித்தகுதிகளும் வரையறைகளும்**

ஒரு மொழி செம்மொழித்தகுதியை, உயர்வை அடைய சில தகுதிப்பாடுகள் மணவை முஸ்தபா உள்ளிட்ட மொழியியல் வல்லுநர்களால் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை, 1.தொன்மை, 2. தனித்தன்மை, 3. பொதுமைப்பண்பு, 4. நடுநிலைமை, 5. கிளைமொழிகளின் தாய், 6. பட்டறிவு இலக்கியங்கள், 7. பிறமொழித்தன்மை, 8. சமயச் சார்பு, 9. உயர்சிந்தனை, 10. கலை, 11. மொழிக் கோட்பாடுகள் என்பனவாகும். இந்த பதினொரு தகுதிகளுள் முற்றிலும் பொருந்தக்கூடிய ஒரே மொழியாகத் ‘தமிழ்மொழி’ திகழ்கின்றது. அதாவது,

1.மனித நாகரிகம் தோன்றிய பகுதியில் முதலில் தோன்றிய தொன்மை. 2.2500 ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணமும் அதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இலக்கியமும் தோன்றிய மொழி. 3.மனித வாழ்வைச் சாதி மதங்கொண்டு பிரிக்காமல் அகம்புறமெனப் பிரித்த பொதுமை. 4.குறிப்பிட்ட எச்சாராரையும் சாராமை, தமிழ், தமிழர் என்று கூடத் திருக்குறளில் சார்பின்மை கொண்ட நடுநிலைமை. 5.தென்மொழிகளுக்கு மட்டுமின்றி, பிராகூயி போன்ற வடமொழிகளுக்கும் தாய்மொழி எனும் தலைமை. 6.பிறமொழிகளில் கற்பனைப் படைப்புகளேயிருக்க, தமிழிலோ மனிதர்களே இலக்கியங்களில் வாழ்கின்றனர். அவர்தம் அனுபவங்களே பேசப்பட்டுள்ளன.

7. தொல் இலக்கியங்களில் பிறமொழித் தாக்கம் இருந்ததில்லை. 8. சங்க இலக்கியத்தின் சமயச் சார்பில்லாத தன்மை. 9.உலகினைப் பொதுத்தன்மையில் பார்க்கும் தனித்தன்மையே உயர்சிந்தனை. 10.இயல், இசை, நாடகம் எனும் பிரிவும், குடிமக்களையும் காப்பிய நாயகர்களாக்கிய உயர்வும். 11. பல்லாயிரம் ஆண்டுகட்டு முன்பே தோன்றிய இலக்கியங்களிலிருந்தும், தமிழ்மொழி வழக்குகளிலிருந்தும் கோட்பாடுகளை வகுத்துத் தொல்காப்பியம் இயற்றப்பட்டது என, செம்மொழித் தகுதிகளனைத்தும் பொருந்தி அமைந்திருப்பதால் தமிழ் செம்மொழியாயிற்று.

**வாழும் தமிழ்ச் செம்மொழி**

தமிழ், சீனம், சமற்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரீக் போன்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மொழிகளில் பிறமொழிகள் எல்லாம் அறிஞர்களால் மட்டுமே பேசப்படும் மொழிகளாக இருக்கத் தமிழ் மட்டும் இன்னும் மக்கள் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இருப்பதைக் காண முடிகின்றது. மற்ற மொழிகளை அறிஞர்கள் உயிரூட்டும் முயற்சியில் இருக்கையில் தமிழ் உயிர்ப்புள்ள மொழியாக உள்ளது. இப்படியான சில தனித்தன்மைகளைத் தமிழ் பெற்றுள்ளது.

இந்திய மொழிகளில் தமிழ் மட்டும்தான் நாற்பது நாடுகளில் பேசப்படும் மொழியாக உள்ளது. தமிழகத்தில் ஆட்சிமொழியாய் இருப்பதுபோல் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்று மூன்று நாடுகளிலும் ஆட்சி மொழியாகத் திகழ்கிறது. இன்று மென்பொருள் கணினித் துறைகளில் தமிழர்கள் தாம் அதிகமாக உலகநாடுகளில் பங்கினைப் புரிந்து வருகின்றனர். இன்றுள்ள வலைத் தளங்களில் தமிழுக்கான வலைத்தளங்களே மிகுதியாக உள்ளன. இந்திய மொழிகளில் தமிழுக்கு மட்டுமே மென்பொருள்கள் போன்ற கணினிக் கருவிகள் முதன்முதலாக மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் தோன்றி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இன்றும் அந்த இலக்கண நூலைப் படித்துப் புரிந்துகொள்ள முடிகிறது. திருக்குறள், சங்க இலக்கியங்கள் போன்ற அனைத்துமே இன்றும் படித்துணரத் தக்கனவாக உள்ளன. மாற்றமில்லாததாய் இன்றும் புரிந்து கொள்ளும் தன்மையில் உள்ளதாய் அமைந்துள்ள மொழி தமிழ் மட்டுமே.

**தமிழின் தொன்மை**

தமிழைச் செம்மொழியென மத்திய அரசு அறிவித்திருப்பது தமிழ் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தமிழ் ஈராயிரம் ஆண்டுகளாகவே ஒரு செம்மொழியாகத் திகழ்ந்துள்ளது. இதைத் தமிழறிஞர்கள் மட்டுமின்றித் தமிழை விரும்பிக் கற்ற உலக அறிஞர்கள் பலரும் பலமுறை எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஒரு செம்மொழிக்கு இரு தகுதிகள் கட்டாயமாக இருக்க வேண்டும். இலக்கிய வளமும் தொன்மையுமே அவ்விரு தகுதிகளாகும். இவற்றில் ஏதாவது ஒரு தகுதியை மட்டும் பெற்றிருந்தால் அந்த மொழி செம்மொழியெனக் கருதப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வசிக்கும் பழங்குடி மக்கள் பேசிவரும் முண்டா மொழிகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை. ஆயினும் இந்த மொழிகளுக்கு இலக்கிய வளம் கிடையாது; எழுத்துக்கள் கூட இல்லை. ஆகையால் முண்டா மொழிகள் செம்மொழி என்ற தகுதியைப் பெறவில்லை. இன்னொரு பக்கம், ஆங்கில மொழி நிரம்பிய இலக்கிய வளம்பெற்ற மொழியாகத் திகழ்கின்றது. ஆயினும் இம்மொழியின் தொன்மை ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேல் இல்லை. ஆகவேதான் ஆங்கிலேயரும் தம் மொழியைச் செம்மொழி எனக் கூறிக்கொள்வதில்லை.

இந்திய நாட்டில் இலக்கிய வளமும் தொன்மையும் உள்ள மொழிகள் இரண்டேதான்; சமற்கிருதமும் தமிழும். ஆகையால்தான் மத்திய அரசின் அறிவிப்பு இவ்விரு இந்திய மொழிகளைச் செம்மொழிகளென அங்கீகரித்துள்ளது. இவற்றுள் சமற்கிருதம் வேத காலத்திலிருந்தும் தமிழ் சங்க காலத்திலிருந்தும் நமக்குக் கிடைத்துள்ளதால், சமற்கிருதம் தமிழைவிடப் பழைமையானது என்று இன்று கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் பொதுவான ஒரு கருத்து உலக அறிஞர்களிடையே நிலவுகிறது. ஆயினும் வேதங்களிலேயே திராவிட மொழிச் சொற்கள் காணப்படுவதாலும், இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் இன்றும் திராவிட மொழிகள் (பிராகூய், குருக், மால்தோ) பேசப்பட்டு வருவதாலும், சிந்துவெளிப் பண்பாடு திராவிட மக்களால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தை உலகின் பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதாலும் திராவிட மொழிக்

குடும்பத்தைச் சார்ந்த தமிழ் இந்தியாவின் மிகத் தொன்மையான முதல் செம்மொழி என்ற பெருமைக்கு உரித்தாகிறது.

தமிழ் இலக்கியத்திலேயே அதன் தொன்மைக்குப் பல சான்றுகள் இருப்பது உண்மைதான். ஆயினும், தமிழின் தொன்மையை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிலைநாட்ட இலக்கியங்கள் மட்டும் போதாது. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களின் காலக்கணிப்பைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. கல்வெட்டுகளும், பழைய காசுகளும், இலச்சினைகளும், எழுத்துப்பொறித்த மண்பாண்டச் சில்லுகளும் தமிழின் தொன்மைக்கு நேரடியான புறச் சான்றுகள் ஆகும்.

**பழந்தமிழ் எழுத்துக்கள் :** பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டில், முக்கியமாக மதுரையைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில், இயற்கையான குகைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்கள் அசோக மன்னரின் புகழ்பெற்ற கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்களைப் பெரும்பாலும் ஒத்திருப்பதால் தமிழ்நாட்டுக் குகைக் கல்வெட்டுகளின் காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 2 ஆம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. பிராகிருத மொழிகளுக்கான மௌரிய காலத்துப் பிராமி எழுத்துக்களைக் கூட்டியும் குறைத்தும், வேறு பல மாற்றங்களைப் புகுத்தியும் தமிழை எழுதுவதற்கு ஏற்ற தமிழ்ப் பிராமி எழுத்துமுறை உருவாக்கப்பட்டது. இந்த எழுத்துக்களே தமிழ் மொழியை எழுத குகைக் கல்வெட்டுக்களிலும், காசுகளிலும், இலச்சினைகளிலும், சில்லுகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவையே சங்ககாலத் தமிழ் எழுத்துக்கள் ஆகும்.

**கல்வெட்டுகள்:** குகைக் கல்வெட்டுகளில் மிகவும் முக்கியமானவை மூன்று. அவை, மாங்குளத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனும் (கி.மு.2 ஆம் நூற்றாண்டு) ஜம்பையில் அதியன் நெடுமான் அஞ்சியும் (கி.பி.முதல் நூற்றாண்டு), புகழூரில் சேரல் இரும்பொறையும் (கி.பி. 2 ஆம் நூற்றாண்டு) வெட்டி வைத்த கல்வெட்டுகளாகும். இக்கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக் கொண்டு இவை சங்ககாலத்தைச் சார்ந்தவை என்று உறுதியாகக் கூறலாம்.

**நடுகற்கள்:** அண்மையில் வைகைக் கரையில் புலிமான்கோம்பை என்ற ஊரில் மூன்று நடுகற்களும், தாதப்பட்டி என்ற ஊரில் மேலும் ஒரு நடுகல்லும் கிடைத்துள்ளன. இவை பெருங்கற்காலச் சின்னங்களாகும். இவற்றில் தமிழ் பிராமி எழுத்துக்களில் தமிழ் மொழியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்தமைதியிலிருந்து இவற்றின் காலத்தைக் கி.மு. 2-1நூற்றாண்டுகள் எனக் கணிக்கலாம். புலிமான் கோம்பையில் ஒரு நடுகல்லில் தொல்காப்பியம் கூறும் ஆகோள் என்ற சொல் காணப்படுகிறது. சங்க நூல்களில் நடுகற்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளை இந்த நடுகற்கள் உறுதிசெய்கின்றன. ஆகையால் இக்கல்வெட்டுகள் மிகவும் சிறப்பான கண்டுபிடிப்புகளாகக் கருதப்படுகின்றன.

**காசுகள்:** பாண்டியன் பெருவழுதியின் பெயர் பொறித்த செப்புக் காசு அதன் எழுத்தமைதிலிருந்து கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது. கி.பி.முதல் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட இரும்பொறை என்ற பெயர் பொறித்த செப்புக்காசுகள் கரூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதற்குப் பிற்காலத்திய சேர மன்னர்களான மாக்கோதை, குட்டுவன் கோதை ஆகியோரின் பெயர்கள் பொறித்த வெள்ளிக் காசுகளும் கிடைத்துள்ளன.

இலச்சினைகளும் மோதிரங்களும் சங்ககாலத் தமிழர்கள் பொன், வெள்ளி, செம்பு உலோகங்களால் ஆக்கிய இலச்சினைகளையும் மோதிரங்களையும் பயன்படுத்தினர். அண்மைக்காலத்தில் கரூரில் அமராவதி ஆற்றுப்படுகையில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் பொறித்த பல இலச்சினைகளும் மோதிரங்களும் சங்ககாலத்தைச் சார்ந்தவைகளாகும்.

**சில்லுகள்:** தமிழகமெங்கும் நடைபெற்றுவரும் அகழ்வாய்வுகளில் நூற்றுக்கணக்கான எழுத்துப் பொறித்த சில்லுகள் கிடைத்துவருகின்றன. இவற்றைத் தொல்லியல் முறைப்படி ஆய்வு செய்த அறிஞர்கள் இவற்றின் காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை என்று கணித்துள்ளனர். ஆயினும் வரலாற்று அறிஞர்கள் இதுவரை இச்சில்லுகள் காட்டும் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கவனம் செலுத்தவில்லை. எழுத்துப் பொறித்த சில்லுகள் தமிழகமெங்கும் சின்னஞ்சிறு குக்கிராமங்களிலும் அகழ்வு செய்யும்போது கிடைத்து வருகின்றன. இந்திய நாட்டிலேயே தமிழகத்தில்தான் எழுத்துப் பொறித்த சில்லுகள் மிக அதிகளவில் கிடைத்துள்ளன. சாமானிய மக்கள் தங்கள் வீடுகளில் புழங்கிய சட்டி, பானைகளின் மீது கையில் கிடைத்த இரும்பாணியைக் கொண்டு தங்கள் பெயர்களைக் கீறியுள்ளனர். சங்ககாலத்தில் தமிழகத்தில் எழுத்தறிவு மிகவும் பரவலாக இருந்துள்ளது என்பதற்கு இச்சில்லுகள் மிக முக்கியமான புறச்சான்றாக உள்ளன.

**வெளிநாடுகளில்:** தமிழர்கள் சங்ககாலத்திற்கு, முன்னரே மேலை நாடுகளுடனும் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர் என்று சங்கப் பாடல்கள் மூலமாகவும், தமிழகத்தில் அதிகமாகக் கிடைக்கும் ரோமானிய நாணயங்களிலிருந்தும் ஏற்கெனவே தெரியவந்துள்ளது. தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த சில்லுகள் எகிப்து நாட்டில் செங்கடல் கரையில் உள்ள துறைமுகங்களிலிருந்தும், தாய்லாந்து நாட்டில் அகழ்வு ஆய்வுகளிலும் கிடைத்துள்ளது. இவை தமிழரின் வெளிநாட்டு வாணிபத்தை உறுதி செய்கின்றன. தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ள இச்சில்லுகளின் காலம் கி.பி.1-2 நூற்றாண்டுகள் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தமிழின் தொன்மைக்கும் செம்மொழி என்ற தகுதிக்கும் இரு தூண்களாக விளங்கும் சங்க இலக்கியங்களையும், கல்வெட்டுகள், காசுகள், இலச்சினைகள், சில்லுகள் போன்ற புறச் சான்றுகளையும் மேலும் ஆய்ந்து அவற்றின் அருமை பெருமைகளை உலகறியச் செய்வது இன்றைய தமிழறிஞர்களின் தலையாய கடமையாகும்.

**தமிழின் சிறப்புகள்**

தமிழ்மொழி மிகுந்த பழைமைச் சிறப்பு வாய்ந்த மொழி; ஏனைய தற்கால இந்திய மொழிகளின் இலக்கியங்களுக்கெல்லாம் காலத்தில் மிகவும் முற்பட்ட ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் முற்பட்ட பேரிலக்கியங்களைக் கொண்டது தமிழ் மொழி. தமிழில் மிகப் பழம்பெருநூல் தொல்காப்பியம். தொன்மைக்காலக் கல்வெட்டுகளிலிருந்து, இந்நூலின் பகுதிகள் காலத்தால் மிக முற்பட்டவை எனவும் ஏறத்தாழ கி.மு.200 க்கு

முன்பே இந்நூல் எழுந்துள்ளது எனவும் தெரிகின்றது. பழந்தமிழரின் பேரிலக்கியங்கள் சங்க இலக்கியங்களாகும். அவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகை நூல்களும் பிறவும் ஆகும். அவை ஏறத்தாழ கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளில் எழுந்தவை எனக் கொள்ளலாம். அவை, வடமொழியில் காளிதாசரின் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டன. மதச்சார்பற்ற இந்தியாவில் முதன்முதலில் எழுந்த மதச் சார்பற்ற பெருங்கவிதை இலக்கியத் தொகுப்பு (சங்க இலக்கியங்கள்) என்றால் அது மிகையாகாது.

தமிழ் இந்தியாவில் தோன்றிய இந்திய மண்ணிற்கு மட்டுமே தனிச் சிறப்பான இலக்கிய மரபினைக் கொண்டது. இந்த இலக்கிய மரபு வடமொழியிலிருந்து பெறப்பட்டது அன்று என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையைச் சொல்வதானால், தென்னாட்டில் (தென்னிந்தியாவில்) சமற்கிருத மொழியின் செல்வாக்கு வலிமை பெறுவதற்கு முன்னரே தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன. அதனால்தான் தமிழ் இலக்கியங்கள் யாவும் வடமொழியில் அல்லது வேறு இந்திய மொழிகளில் உள்ள எந்த இலக்கியத்தையும் போல இல்லாமல் தன்மையால் இயல்பாய் முற்றிலும் மாறுபட்டுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன.

சிறந்த இலக்கியக் கொள்கை, விழுமிய இலக்கண மரபுகள், உயர்ந்த முருகியற் செம்மை, இவை அனைத்திற்கும் மேலாக, தனித்து விளங்கும் தனக்கேயுரிய மிகப் பெரிய இலக்கியச் செல்வம் ஆகியவற்றைக் கொண்டிலங்குவது தமிழ் மொழியாகும். வடமொழியிலோ வேறு எந்த இலக்கிய மொழியிலோ காணப்படாத, வேறு எந்த இந்திய மொழியிலோ காணப்படாத அவற்றிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டு விளங்குகின்ற, இந்தியப் பெருநாட்டினுக்கு உரித்தான இந்திய மக்களிடம் காணப்படுகிற கலை நயம் தோய்ந்த ஒருவகை நுட்ப உணர்வைத் தமிழ் இலக்கியங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. வளமிக்க விரிந்து பரந்த அறிவின் மாட்சியும் மரபும் அவற்றின்கண் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன.

தமிழ் மொழியின் செவ்வியல் இலக்கியங்களின் தன்மை, அவற்றைச் சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், சீனம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகளில் எழுந்து விளங்கும் பேரிலக்கியங்களுக்கு நிகராக எண்ணத்தக்க நிலையை, தகுதியை அவற்றுக்கு வழங்குகின்றது. தமிழ் இலக்கியங்களின் சொற்செறிவும், பொருளாழமும், அவற்றின் நுட்பமும் திண்மையும் (Subtlety) அகலமும் விரிவும் (Profundity), அவை நுவலும் பல்வேறு பாடுபொருள்களும் களமும்(Varied Scope) நவீன காலத்திற்கு முந்தைய இந்திய இலக்கியங்களில், கால அளவில் முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமே, சமூகத்தில் தாழ்வுற்ற, பிற்பட்ட, கடைப்பட்ட மக்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ளன. அவற்றின் மனிதகுலம் அனைத்தையும் வயப்படுத்தும் உலகளாவிய கோட்பாடும்(Universality) தமிழ்மொழியை உலகம் தழுவிய மிகப்பெரிய செவ்வியல் மொழி, மரபுகள், இலக்கியங்களுடன் ஒருங்கே வைத்து, அவற்றுள் ஒன்று வள்ளுவர் வழங்கிய திருக்குறள் ஒழுக்க நெறிகளைக் கற்பிக்கும் உலகின் தலைசிறந்த அறநூல் என்பதனை அனைவரும் அறிவோம். எனினும் இந்த நூல், தமிழில் செவ்வியல் மொழி, இலக்கிய மரபுகளைத் தம்முள் கொண்டு விளங்குகிற, ஒன்றிலிருந்து ஒன்று பெரிதும் வேறுபட்ட பாடுபொருள்களை உடைய, பல்வேறு பெருநூல்களின்

வாயிலாக, மனிதகுலம் வாழ்வியலின் ஒவ்வொரு பரிணாமமும், ஒவ்வொரு தோற்றமும் மிக நுட்பமாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்த இலக்கியப் படைப்புகளின் ஆய்வுக்குட்படாத, இவற்றின் ஒளிபடாத வாழ்வியல் துறைகளே இல்லை எனலாம்.

தமிழ் மொழி நவீனகால இந்தியப் பண்பாடு, மரபுகளின் முதன்மையான, தனித்துவம் உடைய வாயில்களில் ஒன்றாக விளங்குகின்றது. சமற்கிருதக் கவிதை மரபின்மீது தென்னக மரபுகளின் செல்வாக்கைப் பற்றி நான் மிக விரிவாக எழுதியுள்ளேன். இதற்கு நிகராக இன்னொரு முக்கியச் செய்தியுமுண்டு; தமிழில் சங்கத் தொகை நூல்களின் காலத்தில் தோன்றிப் பரவத் தொடங்கிய இந்து சமயச் சார்புடைய, புனிதமான (வழிபாட்டுப்) பேரிலக்கியங்கள் நவீனகால (இந்திய) இந்து சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளன. அந்தப் பக்தி இலக்கியச் சிந்தனைகளும், கருத்துக்களும் (தெலுங்கு, கன்னடம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் எழுந்த பாகவத புராணத்திலும் ஏனைய நூல்களிலும் எடுத்தாளப் பெற்று, அவற்றின் வழியாக, இந்தியத் திருநாடு முழுவதும் பரவின. 'வேதங்களுக்கு ஒப்பானவை' என்று போற்றப்படும் புனிதமான சமய (பக்தி) இலக்கியங்கள் தமிழிலுள்ளன; இவை தமிழுக்கே உரியன. இவை தென்னிந்திய வைணவத் திருக்கோயில்களில் (திருப்பதி முதலானவை) வேத மந்திரங்களுடன் சேர்ந்து ஓதப்பெறுகின்றன. தற்கால இந்தோ - ஆரிய மொழிகளுக்கு எவ்வாறு வடமொழி (சமற்கிருதம்) மூலமொழியாக விளங்குகின்றதோ அதேபோன்று தற்காலத் தமிழ், மலையாள மொழி இலக்கியங்களுக்குச் செவ்வியல் மொழியாகத் திகழ்ந்த தொன்மைத் தமிழே மூலமொழியாக விளங்குகின்றது.

**தமிழ்ச் செம்மொழி நூல்கள்**

கி.மு.1000 ஆண்டு பழைமை வாய்ந்த தொல்காப்பியம், மொழிக்கும் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தது. கி.மு. 900 முதல் கி.பி.100 வரை ஐயன் வள்ளுவ ஆசானின் திருக்குறள், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டுத்தொகையின் நூல்கள், - கி.பி. 200 இல் பரிபாடல் - பத்துப்பாட்டில் உள்ள திருமுருகாற்றுப்படை, - கி.பி. 300 இல் கலித்தொகை - திருமூலரின் திருமந்திரம் - முத்தொள்ளாயிரம், - கி.பி. 400 இல் ஆசாரக்கோவை - ஏலாதி - முதலிய நீதிநூல்கள், - கி.பி.500 இல் கல்லாடம் - கி.பி.600 இல் சிலப்பதிகாரம் - மணிமேகலை - பெருங்கதை, - கி.பி.700 இல் நாவுக்கரசர் - திருஞான சம்பந்தர் - தேவராப்பாடல்கள் - கி.பி. 800 இல் நாலடியார் - கி.பி.900 இல் முற்பகுதி ஆழ்வார் அருந்தமிழ், நடுப்பகுதி - சுந்தரர் தேவாரம் - பிற்பகுதி மணிவாசகரின் திருவாசகம் - கி.பி 1000 இல் சீவகசிந்தாமணி - கி.பி. 1100 இல் பெரிய புராணம், - கி.பி 1200 இல் கம்பராமாயணம் - கி.பி 1300 இல் கலிங்கத்துப்பரணி, -கி.பி 1400 இல் வில்லிபாரதம் - கி.பி 1500 இல் அருணகிரியின் திருப்புகழ் - கி.பி 1600 இல் குமரகுருபரர் சுவாமிகள் பிரபந்ததிரட்டு - கி.பி 1700 இல் சிவப்பிரகாசஅடிகளின் நான்மணி மாலை - குற்றாலக்குறவஞ்சி, திருவிளையாடல் புராணம் - கி.பி 1800 இல் சீறாப்புராணம் - தேம்பாவணி, தாயுமானவர் பாடல் - கி.பி 1900 இல் மனோன்மணியக் காவியம் - மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் தலபுராணங்கள் - வடலூர் வள்ளல் பெருமானின்

திருவருட்பா, பாரதி, பாரதிதாசன் படைப்புகள், கி.பி. 2000 இல் நவீன இலக்கியங்கள்

**தமிழ்ச் செம்மொழி அறிந்தேற்பு**

> "ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
> ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
> மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
> தன்னே ரிலாத தமிழ்!"

என்று தனக்கு நிகரொன்றும் இல்லாத மொழி தமிழ் என ஒரு தனிப்பாடல் பகர்கிறது. அந்தத் தன்னேரில்லா இனிய தமிழ்மொழி நம் தாய்மொழி என எண்ணுந்தோறும் இதயம் விம்மி விம்மிப் பெருமிதம் கொள்கிறது.

1887 இல் முதன்முதலாக, பரிதிமாற்கலைஞர் அவர்கள் 'தமிழ்மொழியின் வரலாறு' என்ற தமது நூலின் முடிவுரையில், "திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம்" எனக் கூறி, உரிய விளக்கங்கள் அளித்து, "தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது நிச்சயம்" என்று தமிழ்மொழியைச் செம்மொழி என நூறாண்டுகளுக்கு முன்பே அறுதியிட்டு, உறுதியாக நிலைநாட்டிக் குரல் கொடுத்தார்.

தமிழ் மொழியைச் செம்மொழியென்று பிரகடனப் படுத்துவதற்கு அடித்தளம் அமைத்த பரிதிமாற்கலைஞர் - நூறாண்டுக் கால மொழி உரிமை வரலாற்றைத் தொடங்கி வைத்த தமிழறிஞர் - ஏறத்தாழ 33 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த அப்பெருமகனார் தமிழ் மொழி வரலாற்றில் நிலைத்த புகழைக் கொண்டுள்ளார் என்பது நினைந்து பெருமிதம் கொள்ளத்தக்கது. பரிதிமாற்கலைஞர் தமிழ் செம்மொழியென 1887 ஆம் ஆண்டு குரல் கொடுத்ததற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பாக 1856 ஆம் ஆண்டில் மேனாட்டுத் தமிழறிஞர் கால்டுவெல் அவர்கள், தாம் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of the Dravidian Languages) என்ற உன்னதமான நூலில், "திராவிட மொழிகள் அனைத்திலும், உயர்தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்" என்று எழுதியுள்ளார்.

'திராவிட மொழிகள்(Dravidian Languages)' என்ற சொல்லாக்கத்தை உருவாக்கித் தந்த அறிஞர் கால்டுவெல் அவர்களின் நூல்கள் தமிழகத்தின் பிராமணர் அல்லாதார் இயக்கத்திற்கு ஊக்கமளிப்பதாக அமைந்தன. தமிழ், தமிழர்தம் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த பற்றின் அடிப்படையிலேதான், அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின்போது அவரது திருவுருவச் சிலையைச்

சென்னை மெரினா கடற்கரை காமராசர் சாலையில் 02.01.1968 அன்று நிறுவினார். டாக்டர் கால்டுவெல் அவர்கள் தமிழைச் செம்மொழியென்று அறிவித்து; செம்மொழி வரலாற்றில் நமக்கு மாணிக்கப் புதையலாகக் கிடைத்திட்ட மகத்தான பொன்னேடாகும்.

சைவ சித்தாந்த மகா சமாஜம் 15.03.1918 அன்று சென்னைப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் நடத்திய கூட்டத்தில் திராவிட மொழிகளுள் தொன்மையும் சீர்மையும் தலைமையும் பெற்றொளிர்கின்ற உயர்தனிச் செம்மொழி தமிழேயாம்; அந்தத் தமிழ் மொழியைச் சர்வகலா சங்கத்தாரால் ஆரியம், அரேபியம், பாரசீகம் முதலிய ஏனைத் தனி மொழிகளோடொப்ப வைத்துப் போற்றப்பட வேண்டுமென்னும் தீர்மானம் கே.சுப்பிரமணியபிள்ளை முன்மொழிய, ரா.பி.சேதுபிள்ளை வழிமொழிய நிறைவேற்றப்பட்டது. 1911 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கிய காலம் முதல் தமது வாழ்நாள் இறுதிவரை அதன் தலைவராக இருந்து அரும் பணியாற்றியவர் தமிழறிஞர் த.வே.உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்.

தஞ்சை - கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஏழு - எட்டாம் ஆண்டுகளுக்கான விழா 1919 ஆம் ஆண்டு மே மாதம் 24,25 ஆகிய நாட்களில் திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் திருஞானியார் மடத்தின் தலைவர் திரு.சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சார்ய சுவாமிகள் அவர்கள் தலைமையில், தமிழவேள் த.வே.உமாமகேசுவரம் பிள்ளை, தமிழறிஞர் வேங்கடசாமிநாட்டார், திரு.டி.என்.குருமூர்த்திப் பிள்ளை, திரு.டி.கூரத்தாழ்வார் முதலியார் முன்னிலையில் நடைபெற்றது. அவ்விழாவில், “தமிழ்மொழியானது தொன்மையும், சீர்மையும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்ற ஓர் உயர்தனிச் செம்மொழியென உறுதிப்பட பல திறத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதால், சென்னைப் பல்கலைக் கழகத்தார் தாம் இதுகாறும் கொண்டிருந்த செம்மொழியே என்பதை ஒப்புக்கொண்டு, இத்தென்னாட்டுப் பல்கலைக் கழகத்தில் அதற்கு முறைப்படி முதலிடமும், உரிமைகளும் கொடுக்கவேண்டும்” என்று வற்புறுத்தித் தீர்மானம் இயற்றப்பட்டது.

செம்மொழி வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல் போன்று அமைந்த மகத்தான இந்தத் தீர்மானம்தான் தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று அமைப்புரீதியாகக் கோரி நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் ஆகும். எனவே, செம்மொழி வரலாற்றில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பணி, ஆற்றல் மிக்கதோர் அத்தியாயமாக இடம்பெற்றுள்ளது. 1919 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் நாளன்று திருச்சி டவுன்ஹாலில் நடைபெற்ற பிராமணர் அல்லாதார் மாநாட்டில் சென்னைப் பல்கலைக்கழமும், அரசுப்பணித் தேர்வாளர்களும்; பாரசீக மொழி, அரேபிய மொழி, வடமொழி ஆகிய மொழிகளுக்குச் சமமாக; செறிவும், செழிப்பும் நிறைந்த மிகப் பழைமை வாய்ந்த இலக்கியங்களைக் கொண்டுள்ள தமிழ்மொழியை, செம்மொழியாக அங்கீகாரம் செய்யவேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர், விடுதலைப் போராட்ட வீரரும், அகில இந்திய காங்கிரசு தலைவர்களுள் ஒருவரும், பாகிஸ்தான் பிரிவினையைத் தீவிரமாக

எதிர்த்தவரும், உருது, அரேபியம், இந்தி, பாரசீகம், வங்காளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்த பன்மொழி அறிஞரும், கவிஞரும் பண்டித நேரு அவர்களின் மத்திய அமைச்சரவையில் இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராகப் பணியாற்றியவரும், இலவசத் தொடக்கக் கல்வியை அறிமுகப்படுத்தியவரும், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களை உருவாக்கியவருமான மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள், 15.03.1951 அன்று - சாகித்திய அகாடமியை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட மாநாட்டில் தொடக்க உரையாற்றியபோது, "இந்திய அரசியல் சட்டத்தால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள பதினான்கு மொழிகளுள் சமற்கிருதமும், தமிழும் அடங்கும். தமிழ்மொழி செழுமையும், தொன்மையும் மிக்க இலக்கியத்தைக் கொண்டது. அம்மொழியிலுள்ள கவிதைகள் வெளிநாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்குரிய தகுதி படைத்தவை. தமிழ் உண்மையிலேயே ஒரு செம்மொழி என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தமிழ் செம்மொழியென அங்கீகாரம் செய்வதற்குரிய தகுதிப்பாடுகள் அனைத்தும் பண்டைக் காலத்தைச் சார்ந்தவை" என்று குறிப்பிட்டார். இக்கூற்று ஓர் ஆவணமாகவே போற்றப்படத்தக்கதாகும்.

1955 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26,27,28 ஆகிய நாட்களில் சிதம்பரம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்களின் இந்த உரையைச் சுட்டிக்காட்டி, "அவ்வாறு தமிழ்மொழியைச் செம்மொழியென அங்கீகாரம் அளித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தேவையான அங்கீகாரத்தை இந்தக் கீழ்த்திசை மாநாடு வழங்கவில்லையெனில், வேறு யார்தாம் வழங்கமுடியும்?" என்று வினாக்கணை தொடுத்தார். 1966 ஆம் ஆண்டில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தமது நுண்ணிய ஆய்வு ஆராய்ச்சிக்குப் பிறகு, தமிழ்மொழி செம்மொழியே என மொழி அறிஞர்கள் அனைவரும் ஏற்றுப் போற்றும் வகையில், உரிய சான்றுகளுடன் "உலகின் முதன்மையான செம்மொழி (The Primary Classical Language of the World)" என்ற அரிய நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

பாவாணர் அந்நூலில் எடுத்துரைத்த அசைக்க முடியாத ஆதாரங்கள் தமிழ் ஆர்வலர்களையும், அறிஞர்களையும் மட்டுமல்லாமல், பிறமொழி அறிஞர்களையும் குறிப்பாக, வடமொழி மற்றும் ஆங்கிலப் புலமை மிக்கோரையும் பெரிதும் ஈர்த்து ஏற்றுக் கொள்ளச் செய்தன. பாவாணரின் தமிழ்மொழி மேதைமையையும், ஆழ்ந்த தமிழ்ப் பற்றினையும், தமிழ் செம்மொழியே என அனைவரும் ஏற்றுக் கொள்வதற்கு அவர் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளையும் பாராட்டிப் போற்றிடும் வகையில், 1974 இல் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்" ஒன்று நிறுவப்பட்டு, அதன் முதல் இயக்குநராக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

கிரேக்க மொழியுடன் தமிழ்மொழியாளரின் உறவு தொடங்குவதற்கு முன்னரே, தமிழ்மொழி செம்மொழித் தகுதியை அடைந்துவிட்டது என்று கில்பர்ட் சிலேட்டர் குறிப்பிடுகின்றார். தமிழ்மொழி கிரேக்க மொழியைவிட மேன்மையானது என்றும், ஆங்கிலம் மற்றும் செருமன் மொழியைவிட ஆற்றல்

வாய்ந்தது என்றும் டாக்டர் வின்சுலோ குறிப்பிட்டுள்ளார். பிரெஞ்சு இந்தியவியல் அறிஞர் பியரி மெய்லி செம்மொழித் தமிழின் சங்கப் பாடல்கள், கிரேக்க மொழியின் நுட்பமான கவிதைத் தொகுதிகளுக்கு அறைகூவலாக விளங்குகின்றன என்கிறார். தமிழ் மீது கொண்ட பற்றால் ‘நன்னெறி முருகன்’ எனத் தம் பெயரை மாற்றிக் கொண்ட, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த இந்திய மொழிகள் குறித்த ஆய்வியல் அறிஞர் பேராசிரியர் டாக்டர் சுனீத்குமார் சட்டர்ஜி, ‘தற்போதைய இந்தியப்பண்பாடு மற்றும் சமயத் தத்துவத்தைப் பொறுத்தவரையில் திராவிட மொழியே பாவு நூலாகவும், ஆரியமொழி ஊடிழையாகவும் உள்ளன. இந்தியப் பண்பாட்டுச் செல்வத்துக்குத் திராவிடர்கள் ஆற்றிய பங்கு ஐம்பது விழுக்காட்டுக்குக் குறையாதது’ என்று தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

அறிஞர் ஏ.கே.இராமானுசன் ‘இலக்கிய இயற்கையடைவு’ என்ற தம் நூலில், இந்தியாவின் இரண்டு செம்மொழிகளுள் ஒன்றான தமிழ் மட்டுமே, சமகால இந்திய நிகழ மொழியாகும் என்றும், இது கடந்தகாலத் தொல் பழைமையோடு தொடர்ந்து வழக்கு மொழியாக மக்களிடையே ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது என்றும் கூறியுள்ளார். சங்க இலக்கியங்கள் புகழ்பெற்ற காலப்பழைமை கனிந்த தமிழ்ப் பாடல்களாகச் செம்மையுடன் விளங்குகின்றன என்று டாக்டர் கமில்சுவலபில் தெரிவிக்கிறார். மொகஞ்சதாரோ என்ற இடத்தைக் கண்டுபிடித்த பேராசிரியர் ஆர்.டி.பானர்ஜி ஆரியர்கள் வருகை புரிந்த காலத்திற்குப் பல நூறு ஆண்டுகளுக்கும் முன்னரே அமைந்திருந்த, சிந்துவெளி நாகரிகமானது, ஆரிய நாகரிகத்திற்கும் முந்தைய அதிசய நாகரிகம் என்பதை நிலை நிறுத்தியுள்ளது என்றும், அம்மக்களைத் திராவிடர்கள் அல்லது திராவிட இனத்தில் மூத்தவர்கள் என்று தென்னிந்தியாவில், திராவிட மொழிகளைப் பேச்சு வழக்காகக் கொண்டு வாழும் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகப் பின்னர்ச் சுட்டிக்காட்டப்பட்டது என்றும் எழுதியுள்ளார். சொல்லமைவு நுணுக்கத்தைப் பெருமளவில் வடஇந்திய மொழிகளுக்குத் தமிழ்மொழி வழங்கியுள்ளதை முனைவர் பர்ரோ பட்டியலிட்டுள்ளார்.

இத்தகைய பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களுடன் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று, தக்க வரலாற்றுப் பின்னணியோடும், சான்றுகளோடும், அரசின் சார்பில் மத்திய அரசின் கல்வித்துறைக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கை மீது ஆய்வு செய்து கருத்துரை வழங்குமாறு மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் ஆணையத்திற்கு மத்திய அரசு அனுப்பியது. அந்த ஆணையமும், “செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிப்பாடுகளும் தமிழுக்கு இருப்பதால், நடுவண் அரசு தமிழைச் செம்மொழியாக அறிவிக்கலாம்” என மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. இதற்கிடையே, இரண்டாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் மிக்க நம் தமிழ்மொழியைச் செவ்வியல் மொழி வரிசையில் சேர்த்து, அதன் வளர்ச்சிக்கு நிதியுதவி அளிக்க வேண்டுமென மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தீர்மானங்கள் நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்தின.

தலைநகர்த் தமிழ்ச் சங்கம், தில்லித் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் அமைப்புகள் சார்பில், தமிழை மத்திய ஆட்சிமொழியாகவும், செவ்வியல் மொழியாகவும் ஏற்றிடக்கோரி, தில்லியில் 2000 ஏப்ரல் திங்கள் 29,30 ஆகிய நாட்களில் மாநாடு ஒன்றை நடத்தி அதன் மூலம் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. பேராசிரியர் இ.மறைமலை அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, 2000 ஏப்ரல் திங்களில் அமெரிக்கத் தமிழறிஞர் பேராசிரியர் முனைவர் ஜார்ஜ் எல்.ஹார்ட்டு அவர்கள், தமிழ்மொழியைச் செம்மொழியெனக் கூறும் நிலைப்பாடு பற்றி வழங்கிய அறிக்கை, உலகெங்கிலும் உள்ள கல்வியாளர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. ஆங்கிலத்தில் வரையப்பட்ட கருத்தாழம் மிக்க அந்த அறிக்கை தமிழ்ச் செம்மொழி வரலாற்றில் ஓர் ஆணிமுத்தை ஒத்த அத்தியாயமாகும். அமெரிக்காவிலுள்ள பர்க்லி நகரில் அமைந்துள்ள கலி∴போர்னியா பல்கலைக்கழகத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் தமிழ் பேராசிரியராகக் பணிபுரிந்து வரும் ஜார்ஜ் எல்.ஹார்ட் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் வடமொழி இலக்கியம் பயின்று மாடிசன் நகரில் உள்ள விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகவே பணியாற்றியவர். தமிழ், வடமொழி, ஐரோப்பியச் செம்மொழிகளான இலத்தீனம், கிரேக்கம், இரஷ்யன், செருமன், பிரெஞ்சு ஆகிய மொழிகளின் இலக்கியங்களை விரிவாகக் கற்றிறிந்தவர். இந்தி மொழியில் மகாதேவி வர்மா, துளசிதாசர், கபீர் ஆகிய பெருமக்களின் இலக்கியப் படைப்புகளையும் விரிவாகப் படித்தறிந்தவர்.

இத்தகைய பன்மொழிப் புலமையையும், இலக்கியத் திறனறிவினையும் ஒருங்கே பெற்ற பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள். தமிழ்மொழி உலகின் மிகவுயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும், மரபுச் செல்வங்களையும் பெற்றுத் திகழும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்பதனை எவ்விதத் தயக்கமும் இன்றித் தெளிவாக அறுதியிட்டுக் கூறலாம். தமிழ் ஒரு செவ்வியல் மொழி என்ற கருத்தை நிலைநாட்டுவதற்காக இதைப்போன்று ஒரு கட்டுரை எழுத வேண்டியுள்ளது என்ற எண்ணமே இயல்புக்கு மாறானதாகத் தோன்றியது. இச்செயல் எப்படியிருக்கிறது என்றால், இந்தியா ஒரு மிகப்பெரிய நாடு, இந்துசமயம் உலகின் மிகப்பெரிய சமயங்களுள் ஒன்று என்னும் கூற்றை நிலைநாட்ட முற்படுவது போன்றுள்ளது. தமிழ் செவ்வியல் மொழி என்னும் தகுதி நிலையை மறுக்க முனைவது, இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கும், வளமைக்கும் இன்றியமையாத மையக் கூறாக விளங்கும் உயிராதாரமாக விளங்கும் உறுப்பு ஒன்று அதற்கு இருக்கக் கூடாது என்று மறுக்க முனைவதற்கு ஒப்பானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட்டு அவர்களது இந்த அறிக்கையில் உள்ள கருத்துக்கள் இந்தியத் திருநாட்டின் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் எழுச்சியையும் ஏற்படுத்தியது.

2002 ஆம் ஆண்டு, மே திங்கள் 4,5 ஆம் நாட்களில் தலைநகர்த் தமிழ்ச் சங்கமும், பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும் இணைந்து, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ச் செவ்வியல் மொழி, திருக்குறள் தேசிய நூல் எனும் முப்பெரும் முழக்கத்துடன் மாநாடு நடத்தின. அந்த மாநாட்டில், இனியும் காலங் கடத்தாமல், உடனே தமிழ்மொழியைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென மை அரசை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2003 ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாள், தமிழ்மொழி

அகாதெமியின் சார்பில் சென்னையில் நடைபெற்ற பத்தாவது தேசிய மொழிகளின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது, எல்லோராலும் தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட வேண்டும் என இங்கே பேசப்பட்டது. ஆக்கப்பட வேண்டும் என்பதைவிட, அழைக்கப்படவேண்டும் என்பதுதான் பொருத்தம். ஏனென்றால், ஏற்கனவே தமிழ் செம்மொழிதான். அது செம்மொழி என்று அழைக்கப்பட வேண்டும் என்பதைத்தான் கோரிக்கையாக வைத்து, ஒரு செம்மொழி என அழைக்கப்பட மொழியியல் வல்லுநர்கள் குறிப்பிடும் பதினொரு தகுதிப்பாடுகளும் முற்றிலும் பொருந்தக் கூடிய உலகத்தின் ஒரே மொழியாகத் தமிழ் திகழ்கிறது என்பது விளக்கப்பட்டது.

2003 மே திங்கள் 3,4 ஆம் நாட்களில் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கமும், தலைநகர்த் தமிழ்ச் சங்க வளாகத்தில் நடத்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், உலகில் உள்ள மொழிகளில் தமிழ், கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், சீனம் ஆகிய ஐந்தும் மூத்த மொழிகளாகும். ஆனால், இந்த மொழிகளுள் கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் போன்ற மொழிகள் வழக்கொழிந்த நிலையிலும், அவற்றிற்குச் செவ்வியல் மொழித் தகுதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், காலத்தொன்மை, இலக்கியவளம், தாய்மைத் தன்மை, உயிரோட்டம் ஆகியவற்றைப் பெற்ற தமிழ்மொழியைச் செவ்வியல் மொழி என அறிவிக்க இந்திய அரசு மறுக்கிறது. தமிழைச் செவ்வியல் மொழியாக ஏற்றுக் கொண்டு அதற்குரிய நிலையினை உருவாக்கிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் முயற்சியால் 10.01.2004 அன்று நடைபெற்ற தமிழறிஞர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, 12.01.2004 அன்று தொடங்கி ஒரு கோடி கையொப்பம் பெற்றுத் தமிழ் செம்மொழி கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. 07.06.2004 அன்று நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியக் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அவர்கள் தமிழ் செம்மொழியெனப் பிரகடனப்படுத்தப்படும் என்று செய்த அறிவிப்பு தமிழறிஞர்களையும், தமிழ் ஆர்வலர்களையும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

**மைய அரசு அறிவிப்பு**

1. இந்திய அரசு செவ்வியல் மொழிகள் என ஒரு புது மொழிப்பிரிவை உருவாக்குவதென முடிவு செய்துள்ளது.
2. செவ்வியல் மொழி என அறிவிக்கப்படுவதற்காக ஒரு மொழியைக் கருத்தில் கொள்வதற்கு, கீழ்க்கண்ட தகுதிகள் பயன்படுத்தப்படும்.

i. 1500 ஆண்டுகளுக்கும் மேலான மிகப் பழமையுடைய நூல்கள்/ பதிவு பெற்ற வரலாறு

ii. மொழியைப் பயன்படுத்தும் பல தலைமுறையினர் அரிய பண்பாட்டுப் பாரம்பரியம் உள்ளதாகக் கருதும் இலக்கியம்/ நூல்கள்

iii. அம்மொழிக்கே உரியதாகவும் மற்ற மொழிக் குடும்பத்தினரிடமிருந்து கடன் பெறாததுமான இலக்கியப் பாரம்பரியம்

iv. செவ்வியல் மொழி என்பதும் அதன் இலக்கியமும் அம்மொழியின் நவீன இலக்கியத்தில் இருந்து வேறுபட்டிருக்குமாதலால், ஒரு

செவ்வியல் மொழிக்கும் அதன் நவீன வடிவத்திற்கும் அல்லது அதிலிருந்து பிறந்த மொழிகட்கும் இடையே ஒரு தொடர்பின்மை இருக்கக்கூடும்.

3. தமிழ்மொழி மேற்கண்ட பத்தி 2 இல் பட்டியலிடப்பட்ட தகுதிகளை நிறைவேற்றுவதால் தமிழ் இனிமேல் செவ்வியல் மொழி என வழங்கப்படும்.
4. பண்பாட்டு அமைச்சகம் மேலே கூறப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

-A.K.ஜெயின், இணைச்செயலர், இந்திய அரசு.
புதுதில்லி, நாள் : 12.10.2004.

**உலகச் செம்மொழி மாநாடு - ஒரு கண்ணோட்டம்**
**மாநாட்டு இலச்சினையின் முக்கியத்துவம்**

கோவையில் 2010, ஜூன் திங்கள் 23 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான இலச்சினையை (LOGO) 23.10.2009 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் வெளியிடப்பட்டது.

**அய்யன் திருவள்ளுவர் திருவடிகளில்**
**ஆழிப்பேரலைகள் சுருளும் அழகிய பின்னணி!**

தமிழ்மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்டபின் நடத்தப்பெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கும் இந்த இலச்சினை பல்வேறு சிறப்புக்களைக் கொண்டுள்ளது. கடல்கோள்களை எதிர் கொண்டும், கால வெள்ளத்தைக் கடந்தும் சீரிளமைத் திறத்தோடு தமிழ்மொழி திகழ்கிறது என்பதைக் குறிக்கும் வகையில் சுனாமி (ஆழிப்பேரலை) அலைகளும், அய்யன் திருவள்ளுவர் திருவடிகளில் சுருளும் அழகிய பின்னணியில் இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது. வழக்கமாக, தத்துவ விளக்கங்களுக்கேற்ப மூன்று விரல் முத்திரைகளைக் கொண்டு சிலைகள் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆனால், திருவள்ளுவர் சிலையோ அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலைக் குறிப்பிடும் வகையில் மூன்று விரல்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவரைச் சுற்றியுள்ள மேல்வட்டத்தில் உலகத் தொன்மையான நான்கு நாகரிகங்களில் ஒன்றாகக் கருதப்படும் திராவிட நாகரிகமாகிய சிந்துவெளி நாகரிகச் சின்னங்களும், குறியீடுகளும் இடம் பெற்றுள்ளன. சிந்துவெளிப்பள்ளத்தாக்கில் செழித்து வளர்ந்த நகர்மய நாகரிகம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது, சிந்துநதிக்கரையில் 1500 ஏக்கர் பரப்பளவில் செழித்தோங்கி 700 ஆண்டுகள் சிறந்து விளங்கியது சிந்துவெளி நாகரிகம். அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளிச் சின்னங்களுடன் கூடிய குறியீடுகள் - எழுத்துப் பொறிப்புகள், தமிழகத்தின் கொங்கு மண்டலச் சூலூர், விழுப்புரம் அருகில் கீழவாளை, சோழமண்டலத்தில் மயிலாடுதுறை, செம்பியம், கண்டியூர் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.

படகும், கப்பலும் தமிழர்கள் திரைகடலோடித் திரவியம் தேடிய திறன்மிக வரலாற்றையும், காளைச் சின்னம் தமிழர்களின் வேளாண்மைத் தொழில் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன. இலச்சினையில் ஏழு குறியீடுகள் / சின்னங்கள் இடம் பெறுகின்றன. ஏழு என்பது தமிழர்களுக்குரிய கணக்கீட்டு முறையில் சிறப்பான எண்ணாகும். ஏழு நாட்கள், அகப்பொருள் திணைகள் ஏழு, புறப்பொருள் திணைகள் ஏழு. திருக்குறள் 133 அதிகாரங்கள், அறத்துப்பாலில் பாயிரவியல் தவிர 34 அதிகாரங்கள், பொருட்பாவில் 70 அதிகாரங்கள், காமத்துப்பாலில் 25 அதிகாரங்கள் இவற்றின் கூட்டுத்தொகை ஏழு எனும் எடுத்துக்காட்டுகள் ஏழின் சிறப்பை விளக்கிச் சொல்லும்.

இந்த மாநாட்டின் எடுத்துரைக் குறிப்பாக (Motto) “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்பது அமைந்துள்ளது. ஓலைச் சுவடியில் இடம்பெற்றுள்ள எடுத்துரைக் குறிப்பு, இன்றைய உலகிற்குத் தமிழ்ச் செம்மொழி வழங்கும் கொடையாகக் கருதத்தக்கது.

இன்றைய உலகின் தேவை நல்லிணக்கம்; சாதி, மதம் கடந்து மக்கள் மனநிறைவோடு வாழும் மனிதநேயம் செறிந்த வாழ்க்கை; இதற்குத் தேவை வேறுபாடற்ற உலகம். ஏற்றத்தாழ்வற்ற உலகம் அமைய இந்தியா உலகிற்கு அளிக்கும் கருத்துக் கொடை “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்பதாகும். இச்சிந்தனை 2000 ஆண்டுகளுக்கும் முன்பே தமிழ்ச் செம்மொழி தரணிக்கு வழங்கிய கொடையாகும்.

**மையப்பாடல்**

செம்மொழி மாநாட்டிற்கான மையப்பாடலை முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுத, ஆஸ்கார் மற்றும் கிராமி விருதுகளை வென்ற ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்துள்ளார். அதன் ஒளிக் குறுந்தகட்டை முன்னணி திரைப்பட இயக்குநர் கவுதம் மேனன் உருவாக்கினார்.

2010 ஜூன் 23 அன்று காலை மேதகு குடியரசுத்தலைவர் திருமதி பிரதீபா பாட்டீல் அவர்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். முதல்வர் தலைமையில் நடைபெற்ற தொடக்கவிழாவில், மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் ப்ர்னாலா, பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட், டாக்டர் வா.செ.குழந்தைசாமி, டாக்டர் க.சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் பங்கேற்றனர்.

‘கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது’ உலகப்புகழ் பெற்ற இந்தியவியல் அறிஞர் பின்லாந்து நாட்டைச் சார்ந்த டாக்டர் அஸ்கோ ப்ர்போலா அவர்களுக்கு, சிந்துவெளியின் எழுத்து வடிவம், பழந்தமிழுக்கு நெருக்கமான திராவிட மொழி வடிவம் என்று கூறும் அவரது அரும்படைப்பான “Deciphering the Indus Script (1994)” க்காக வழங்கப்பட்டது.

**ஆய்வு அரங்கங்கள்**

இந்த மாநாட்டில் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு போன்ற பல தலைப்புகளில் கல்வியாளர்களும், ஆய்வாளர்களும் ஆய்வுக்கட்டுரைகள் அளிக்கும் ஆய்வு அரங்கங்கள் நடைபெற்றன. மாநாட்டில் பங்கேற்ற 49

நாடுகளில்1,020 பிரதிநிதிகள் 55 தலைப்புகளில் பல்வேறு பொருள்கள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளை அளித்தனர்.

**பொது அரங்கம்**

பொதுமக்களுக்குப் பயன் தரும் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகள் பொது அரங்கில் நடைபெற்றன. புகழ்பெற்ற அறிஞர்கள் பங்கேற்ற இலக்கியச் சொற்பொழிவுகள், கவியரங்கங்கள், விவாத மேடைகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளும், தமிழ்ப்பண்பாட்டை வெளிப்படுத்தும் இசை, நாட்டியம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**செம்மொழிக்கண்காட்சி**

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் அரியதொரு கண்காட்சி நடைபெற்றது. தமிழ்க் கலைகள், பண்பாடு, மொழி, இலக்கியம், தமிழ் வரலாறு போன்றவற்றைச் சித்திரிக்கும் காட்சிகள் மற்றும் சிந்து சமவெளியில் தோண்டி எடுக்கப்பட்ட தொன்மையான பொருட்கள், சோழர்கள் மற்றும் பல்வேறு காலங்களைச் சார்ந்த செப்பேடுகள், கல்வெட்டுகள், சிலைகள் போன்றனவும் இடம்பெற்றன.

**அலங்கார ஊர்தி ஊர்வலம்**

மாநாட்டுத் தொடக்கநாள் சூன் 23 அன்று, அலங்கார ஊர்திகளின் ஊர்வலம் நடைபெற்றது. கோவை வ.உ.சி பூங்காவிலிருந்து கொடிசியா மைதானம் வரை ஊர்வலம் நடைபெற்றது. இதில் பண்டைய சங்க நூல்களிலிருந்து அரிய காட்சிகள் மற்றும் தமிழ் மக்களுடைய பண்பாடு போன்றவற்றின் சிறப்பினை எடுத்துக்காட்டும் வகையில் இருந்தது.

**தமிழ் இணைய மாநாடு**

முதல் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுடன் இணைந்து, தமிழ் இணைய மாநாடு நடைபெற்றது மற்றொரு தனிச்சிறப்பாகும். தமிழ் இணைய வலையில் வளர்ச்சியினைக் காட்டல், இணைய வலையில் தமிழ் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்தல், இளம் தலைமுறையினரை, இணையத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்தச் செய்தல் போன்ற குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டாகத் தமிழ் இணைய மாநாடு நடைபெற்றது.

**பார்வை நூல்கள்**

1. கலைஞர் மு.கருணாநிதி - செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்
2. ஆய்வரங்கச் சிறப்பு மலர் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010
3. சாலினி இளந்திரையன் - தமிழ்ச் செம்மொழி ஆவணம்
4. டாக்டர் வா.செ.குழந்தைசாமி - உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ்
5. டாக்டர் மு.வரதராசன் - மொழி வரலாறு

பாடத்திட்டக் குழுவினர்